★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 பெப்ரவரி 9 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 89 இல. 34 | February 09,Tuesday, 2021 | 20பக்கங்கள் | 30/-






நாட்டுக்கு எதிரான பிரேரணை என்பதாலேயே விலகினோம்;

## நாட்டின் சுயாதீன தன்மையை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம்

**ஜெனீவா பிரேரணை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கருத்து**

யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஜெனீவாவில் குற்றவாளியாக்கிய நிலையில் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை நன்கு அறிந்து நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து விலகினோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜெனீவாவில் எவ்வாறான நெருக்கடி ஏற்பட்டாலும் நாட்டின் சுயாதீனத் தன்மையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்றும் நாட்டின் உரிமை நாட்டு மக்களுக்கே வழங்கப்படும் எனவும் அவர் மேலும்

06

## புலம் பெயர் தமிழர்களின் பணத்தில் வடக்கு கிழக்கில் போராட்டங்கள்



புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டே, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற போராட்டங்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு

06

## பொதுமக்களுக்கான தடுப்பூசி மார்ச் மாதம் முதல் ஆரம்பம்

**முதலில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



மார்ச் மாதம் முதல் வாரத்திலிருந்து 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கும் மற்றும் 30 வயதிலிருந்து 60 வயதிற்கு இடைப்பட்ட பிரிவினருக்கும் கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய் மற்றும் கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவர் சுதர்ஷனி

06

# நாட்டை இழிவுபடுத்த சில குழுக்கள் முயற்சி



**ஏமாற வேண்டாமென அமெரிக்காவிடம் இலங்கை தூதுவர் ரவிநாத் கோரிக்கை**

இலங்கையையும் அதன் தலைமையையும் இழிவுபடுத்தும் வகையிலான சில குழுக்களின் முயற்சிகளில் ஏமாற வேண்டாமென அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க அமெரிக்க தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தவறான எண்ணங்களில் சிக்கிக் கொள்ள வேண்டாம் எனவும், உலகளாவிய தொற்று நோயை மிகக்குறுகிய காலத்தில் எதிர்த்துப் போராடுவதற்காக இலங்கை அரசாங்கத்தின்

06

தோட்டத் தொழிலாளரது சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு;

# 1000 ரூபாவுக்கு இணக்கம்

**சம்பள நிர்ணய சபை தீர்மானம்; விரைவில் வர்த்தமானி வெளியீடு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு சம்பள நிர்ணய சபை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் அதற்கான முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றதுடன்

06



மஹிந்தானந்தவிற்கு

## எதிரான வழக்கு நிறைவு; 25 இல் தீர்ப்பு



இலங்கை சுதந்திர ஊழியர் காங்கிரஸ் எனப்படும் தொழிற்சங்கத்திற்கு சொந்தமான 3.9 மில்லியன் ரூபாயை முறைகேடாக பயன்படுத்தியதாக

06

## அமைச்சர் விமல் வீரவன்ச மன்னிப்பு கோர வேண்டும்

**பொதுஜன பெரமுன செயலாளர் தெரிவிப்பு**



பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட வேண்டும் என விமல் வீரவன்ச தெரிவித்த கருத்து தொடர்பில் அவர் மன்னிப்பு கோர வேண்டுமென அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பொதுஜன பெரமுன

06

## ஆசிரியர்களுக்கும் தடுப்பூசிக்கு ஏற்பாடு

**கல்வி அமைச்சர் ஜீ எல் பீரிஸ் தகவல்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



இந்த மாத இறுதி அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக

06

## இன்று முதல் 12 வரை பாராளுமன்ற அமர்வு



இன்று முதல் 12 ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வுகளை நடத்த பாராளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.


இந்த வாரம் பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படும்

06

பொத்துவில்- பொலிகண்டி பேரணியில் பங்கேற்றோருக்கு

## "B" அறிக்கையூடாக முல்லைத்தீவு பொலிசார் நீதிமன்றில் வழக்கு

*விஜயரத்தினம் சரவணன்*



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை என்னும் பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராக "B" அறிக்கையூடாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையங்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளன. ஏற்கனவே பேரணிக்கு தடைகோரி ARஅறிக்கையூடாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களால் தொடரப்பட்ட வழக்கிற்கு நீதிமன்று வழங்கிய உத்தரவு மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே, பொலிஸ் நிலையங்கள் "B"

06

## சுமந்திரனின் எஸ்.ரீ.எப் பாதுகாப்பு நீக்கம்




தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கிடைக்கப்பெற்ற விசேட அறிவுறுத்தலின் பிரகாரம் இப் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு மீளப்

06




**விக்கல் வீராச்சாமி**



வடக்கு பேரணி சம்பந்தமா யாரும் நக்கல் அடிக்கக் கூடாது அது உண்மையிலேயே ஒரு மனித உரிமைப் போராட்டம்....

மாற்றுக்கருத்தில்லை தம்பி, ஆனா இப்படி நடத்தி நடத்தி கண்டது 0? இந்த கொடிகள், பதாகைகளை பத்திரமா வச்சிருந்தா அடுத்த வருச ஜெனிவா தொடருக்கு முன்னமும் பாவிக்கலாம்

## யுத்த குற்றம் புரிந்தோருக்கு தண்டனை வழங்குவது அவசியம்



**புலிகளா, படையினரா என்பதல்ல பிரச்சினை**

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

இந்த நாட்டில் நடைபெற்ற யுத்தத்தில் தவறிழைத்த விடுதலை புலிகளோ அல்லது அரசாங்க படையினரோ யாராக இருந்தாலும் யுத்த குற்றம் செய்திருந்தால் மாத்திரம் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று மு.கா. தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான

06

## முன்னாள் சபாநாயகரின் உடல் நிலை மோசம்



கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் சபாநாயகர் டபிள்யு. ஜே.எம். லொக்குபண்டாரவின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் தற்போது கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையில் கொரோனா தொற்றினால் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் நேற்று தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.



# சர்வதேச செய்திகள்

## மனித உரிமை பேரவையில் அமெரிக்கா மீண்டும் இணைவு



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் அமெரிக்கா மீண்டும் இணைவதற்கான அறிவிப்பை ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக பக்கச் சார்பாக நடந்துகொள்வதாகவும் போதிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறி முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மனித உரிமை பேரவையில் இருந்து வெளியேறி மூன்று ஆண்டுகளின் பின்னரே இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இதன்படி ஒரு கண்காணிப்பாளராக ஜெனீவாவை தளமாகக் கொண்ட பேரவைக்கு அமெரிக்கா திரும்பவுள்ளது என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டோனி பிளின்கன் நேற்று அறிவித்தார்.

“பேரவையை சீர்திருத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் கொள்கை ரீதியாக ஈடுபடுவதே சிறந்த வழி என்பதை அறிந்து செயற்பட நாம் உத்தேசித்துள்ளோம்” என்று இராஜாங்க திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா பொதுச் சபையினால் பேரவையின் புதிய உறுப்பு நாடுகள் இந்த ஆண்டு இறுதியில் தேர்வு செய்யப்படவுள்ளன.

மூன்று ஆண்டு தவணைக்காகவே உறுப்பு நாடுகள் தேர்வு செய்யப்படவுள்ளதோடு தொடர்ச்சியாக இரண்டு தவணைக்கு மேல் அதன் அங்கத்துவத்தை பெற முடியாது.

அனைத்து பிராந்தியங்களின் பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்யும் வகையில் பூகோள குழுக்களாக பிரிக்கப்பட்டே இரகசிய வாக்கெடுப்பு மூலம் உறுப்பு நாடுகள் தேர்வு செய்யப்படும்.

47 உறுப்பு நாடுகளைக் கொண்ட மனித உரிமை பேரவையின் அடுத்த அமர்வு இந்த மாத பிற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### போதிய செயல்திறன் இல்லை

## ஒக்ஸ்போர்ட் தடுப்பு மருந்தை நிறுத்தியது தென்னாபிரிக்கா



கொரோனா வைரஸ் தொற்றின் தென்னாபிரிக்க திரிபுக்கு எதிராக ஒக்ஸ்போர்ட்–அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்து போதிய செயல்திறனை வெளிக்காட்டாத நிலையில் அந்த மருந்தை செலுத்துவதை தென்னாபிரிக்கா நிறுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவில் 90 வீதமான கொரோனா சம்பவங்கள் புதிய மரபணு மாற்றம் கொண்டவை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தென்னாபிரிக்கா ஒரு மில்லியன் அஸ்ட்ராசெனக்கா மருந்துகளை பெற்றிருப்பதோடு அடுத்த வாரம் அதனை மக்களுக்கு செலுத்த திட்டமிட்டிருந்தது.

ஒக்ஸ்போர்ட்–அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தின் செயல்திறன் பற்றி இன்னும் தெளிவினை பெறும் வரை காத்திருப்பதாக தொன்னாபிரிக்க சுகாதார அமைச்சர் சுவேலி மிகைஸ் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் மற்றும் பைசர் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் தடுப்பு மருந்துகள் அடுத்த சில வாரங்களில் பெறப்படவிருப்பதாகவும் தென்னாபிரிக்க அரசு தெரிவித்துள்ளது.

அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்து தென்னாபிரிக்க புதிய திரிபின் சிறிய மற்றும் நடுத்தரமான நோய் பாதிப்புக்கு போதுமான அளவு செயலாற்றுவதில்லை என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் நோய் எதிர்ப்புத் தன்மையை ஏற்படுத்துவதில் மற்ற தடுப்பூசிகளைப் போலவே தங்கள் தயாரிப்பும் செயலாற்றுவதால், கடுமையான நோய்க்கு எதிராக அது பாதுகாப்புத் தரும் என்று அஸ்ட்ராசெனக்கா தெரிவித்தது.

தேவையெனில் எதிர்வரும் வாரங்கள் அல்லது மாதங்களில் கொரோனா வைரஸின் புதிய திரிபுகளுக்கு சிறந்த முறையில் செயல்திறனை வெளிப்படுத்துவதற்கு தடுப்பு மருந்துகளை மறு வடிவமைப்புச் செய்யலாம் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## தன்சானியாவில் மர்ம நோயால் 15 பேர் பலி



அடையாளம் காணப்படாத நோய்த் தொற்று ஒன்றினால் தெற்கு தன்சானியாவில் குறைந்தது 15 பேர் உயிரிழந்திருப்பதோடு 50க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் குமட்டல் மற்றும் இரத்த வாந்தி எடுப்பதாக கூறப்படுகிறது.

மருத்துவ குழுவொன்று பாதிக்கப்பட்ட பகுதிக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் இந்தத் தொற்று எவ்வாறு ஆரம்பித்தது என்பது பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் தொலைதூர சுன்யா மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி பிட்சால் கிசன்டோ தெரிவித்துள்ளார்.

## இராணுவ சதிப்புரட்சியை எதிர்த்து மியன்மாரில் தொடர்ந்து பேரணி

### பொலிஸார் தண்ணீர் பீச்சியடிப்பு



மியன்மாரில் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக மூன்றாவது நாளாகவும் நேற்று தேசிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதோடு தலைநகர் நெப்பிடோவில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தண்ணீர் பீச்சியடித்தனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த இராணுவ சதிப்புரட்சியின்போது மியன்மார் ஆளும் கட்சி தலைவர் ஆங் சான் சூச்சி மற்றும் மூத்த உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிராக ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதோடு சிவில் ஒத்துழையாமை போராட்டங்களும் வலுத்து வருகின்றன.

ஆயிரக்கணக்கானோர் ஒன்று திரண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆங்சான்சூச்சியைவிடுதலை செய்யும்படியும் நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை கொண்டுவரும்படியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசம் எழுப்பினர்.

மியன்மாரில் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலத்தில் பதிவான மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்று அடுத்த தினத்திலேயே மக்கள் மீண்டும் வீதிகளில் திரண்டனர்.

ஆளும் கட்சி அமோக வெற்றியீட்டிய தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக ஆதாரமின்றி குற்றம்சாட்டியே இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

நாட்டில் ஓர் ஆண்டு காலத்திற்கு அவசர நிலையை இராணுவம் பிரகடனம் செய்தது.

இந்நிலையில் தலைநகர் தவிர, மண்டலாய் மற்றும் யங்கோன் போன்ற நகரங்களிலும் பெரும் எண்ணிக்கையான ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று பேரணி நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த ஆர்ப்பாட்டங்களில் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் மற்றும் அரச ஊழியர்கள் பங்கேற்றுள்ளனர். யங்கோனின் மையப் பகுதியான சுலே பகோடாவை நோக்கி ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பேரணியாகச் சென்றனர்.

தலைநகரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தண்ணீர் பீச்சடிக்கப்பட்டபோது சிலர் கீழே விழுந்து காயமடைந்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

## வைரஸுக்கு முந்திய நிலைக்கு திரும்பியது எண்ணெய் விலை



கடந்த ஆண்டு வரலாற்றில் பெரும் சரிவை சந்தித்த எண்ணெய் விலை கொரோனா பெருந்தொற்றுக்கு முந்திய நிலைக்கு மீண்டும் திரும்பியுள்ளது.

வழக்கத்தை விடவும் எண்ணெய் மீதான கேள்வி குறைவாக இருந்தபோதும், தடுப்பூசி உலகெங்கும் வழங்கப்பட்டு வரும் நிலையில் பொருளாதாரங்கள் மீட்சி பெற்று வேகமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார செயற்பாட்டின் அளவுகோலாக பார்க்கப்படும் எண்ணெய் விலை, வைரஸ் தொற்று காரணமாக தொடர்ந்தும் ஸ்திரமற்ற நிலையிலேயே காணப்படுகிறது.

எனினும் கடந்த ஒருசில மாதங்களில் 50 வீதத்திற்கு மேல் உயர்வு கண்டு எண்ணெய் விலை பீப்பாய் ஒன்று 60 டொலர்களாக அதிகரித்துள்ளது.

எண்ணெய்க்கான பிரதான குறியீடான ப்ரெண்ட் மசகு எண்ணெய், அண்மைக் காலத்தில் வலுப்பெற்றுள்ளது. கடந்த நவம்பர் தொடக்கம் எதிர்கால விநியோகம் அடிப்படையிலான எதிர்கால ஒப்பந்தங்களின் விலை 59 வீதம் அதிகரித்துள்ளது.

அமெரிக்க எண்ணெய் விலை கடந்த ஓர் ஆண்டில் முதல் முறையாக பீப்பாய் ஒன்று 55 டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.

## கொங்கோவில் மீண்டும் எபோலா தொற்று பரவல்



கொங்கோவின் புடெம்போ நகருக்கு அருகில் புதிய எபோலா தொற்று சம்பவம் ஒன்று அடையாளம் காணப்பட்டிருப்பதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆட்கொல்லி வைரஸின் நோய் அறிகுறிகள் பெப்ரவரி 1 ஆம் திகதி பெண் ஒருவரிடம் அடையாளம் காணப்பட்ட நிலையில் கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி மருத்துவமனையில் வைத்து அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த வைரஸ் முன்னர் பரவிய போது அந்தத் தொற்றுக்கு ஆளான நபரையே இந்தப் பெண் திருமணம் புரிந்துள்ளார்.

“மாகாண தடுப்புக் குழு ஒன்று ஏற்கனவே கடுமையாக பணியாற்றி வருகிறது. அதற்கு உதவியாக தேசிய தடுப்புக் குழு ஒன்று விரைவில் புடெம்போ நகருக்கு செல்லவுள்ளது” என்று அமைச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

இறந்த அந்தப் பெண்ணுடன் தொடர்புபட்ட 70க்கும் அதிகமானவர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக இந்த நடவடிக்கைகளுக்கு உதவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

எபோலா தொற்றின் சராசரி உயிரிழப்பு வீதம் 50 ஆக உள்ளதோடு தீவிரமான பெருந்தொற்றின்போது அது 90 வீதமாக பதிவாகியுள்ளது. எபோலா பாதிப்பு கடுமையான வாந்தியெடுத்தல் மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவற்றை ஏற்படுத்துகிறது மற்றும் உடல் திரவங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பரவுகிறது.

1976 ஆம் ஆண்டில் எபோலா ஆற்றின் அருகே வைரஸ் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து கொங்கோ நாடு இதுவரை 11 முறை மிகப்பெரிய எபோலா பரவலை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உளவுக் குற்றச்சாட்டு: ஆஸி. செய்தியாளர் சீனாவில் கைது



சீனாவில் கடந்த சில மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த அவுஸ்திரேலிய ஊடகவியலாளர் செங் லீ, நாட்டு இரகசியங்களை வெளிநாட்டுக்கு வழங்கிய குற்றச்சாட்டில் உத்தியோகபூர்வமாக கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனாவில் பிறந்த அவுஸ்திரேலியரான அவர் சீன அரச தொலைக்காட்சியில் தொகுப்பாளராக பணியாற்றியுள்ளார். அவர் கைது செய்யப்பட்டதை சீன நிர்வாகம் நேற்று உறுதி செய்ததோடு, அவரது சட்ட உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் தடுத்து வைக்கப்பட்ட செங் மீது கடந்த வெள்ளிக்கிழமை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் முன்னதாக தெரிவித்தனர். சீனா கையாளும் இந்த வழக்கில் அவுஸ்திரேலியா தலையிடாது என்று எதிர்பார்ப்பதாக சீன அமைச்சரவை பேச்சாளர் வாங் வென்பின் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எனினும் செங் கைது செய்யப்பட்டது தொடர்பில் அவுஸ்திரேலியா கவலையை வெளியிட்டுள்ளது.

அவர் ஏன் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது பற்றி எதுவும் தெரியாதுள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## பலஸ்தீனத்திற்கு தனி அஞ்சல் குறியீடு அமுல்



ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பொதிகளை பெறுவதற்கு இலகுவாகவும் தமது இறைமையை உறுதிப்படுத்தும் வகையிலும் சொந்தமான அஞ்சல் குறியீடை பயன்படுத்தப் போவதாக பலஸ்தீன அதிகாரசபை அறிவித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைக்கான சர்வதேச தபால்கள் தற்போது ஜோர்தான் அல்லது இஸ்ரேல் ஊடாகவே வருகின்றன.

இந்நிலையில் பலஸ்தீன அஞ்சல் குறியீடு அமுல்படுத்தப்படுவதை உறுப்பு நாடுகளுக்கு அறிவுத்தும்படி அனைத்துலக அஞ்சல் ஒன்றியத்திடம் பலஸ்தீன அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது.

“பலஸ்தீன அஞ்சல் குறியீடை கொண்டிராத தபால் உருப்படிகள் வரும் ஏப்ரல் மாதத்தில் இருந்து ஏற்கப்படமாட்டாது” என்று பலஸ்தீன தொலைத்தொடர்பு அமைச்சர் இஷாக் சிதிர் தெரிவித்துள்ளார். பலஸ்தீன அஞ்சல் குறியீடு வெளிநாட்டில் இருந்து வரும் பொதிகள் பறிமுதல் செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவரும் என்று சிதிர் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் ஆறு தொன்கள் அளவு பலஸ்தீன பொதிகள் ஜோர்தானில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். அவைகளை விநியோகிப்பதற்கு இஸ்ரேல் இடையூறு செய்வதாக அவர் குற்றம்சாட்டினார்.

## தடைகளை நீக்க ஈரானுக்கு அமெரிக்கா புது நிபந்தனை



2015 அணு சக்தி உடன்படிக்கையில் இணங்கிய விதிகளை கடைப்பிடிக்கும் வரை ஈரானுக்கு எதிரான பொருளாதார தடைகளை நீக்கப் போவதில்லைஎன்றுஅமெரிக்கஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

சி.பி.எஸ் தொலைக்காட்சி செய்திக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அளித்த போட்டியிலேயே பைடன் இதனைத் தெரிவித்தார்.

ஆனால் அமெரிக்கா முதலில் அனைத்துத் தடைகளையும் நீக்கனாலேயே அந்தக் கடப்பாட்டுக்கு திரும்புவதாக ஈரான் உயர்மட்டத் தலைவர் ஆயதுல்லா அலி கமனெய் கூறியுள்ளார்.

ஈரான் அணு செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையிலேயே 2015 ஆம் ஆண்டு உலக வல்லரசு நாடுகளுடன் இந்த உடன்படிக்கை எட்டப்பட்டது. இதற்கு பகரமாகவே ஈரான் மீதான தடைகளை நீக்க இணக்கம் ஏற்பட்டது.

எனினும் இந்த உடன்படிக்கையில் இருந்து அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 2018 ஆம் ஆண்டு விலகிக்கொண்டதோடு ஈரான் மீது மீண்டும் தடைகளை கொண்டுவந்தார்.

எனினும் அமைதியான நோக்கத்திற்காகவே தமது அணுத் திட்டத்தை மேற்கொள்வதாக ஈரான் கூறி வருகிறது.

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2021 பெப்ரவரி 9 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் தை 27

ராகுகாலம் : மாலை : 3.00 - 4.30 வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: சித்த யோகம்

நட்சத்திரம்: பூராடம் மாலை 3.01

திதி: திரயோதசி

**தொழுகை நேரம்**

07 முதல் 12 வரை

| | |
|---|---|
| சுபஹ் | - 05.11 |
| லுஹர் | - 12.26 |
| அஸர் | - 03.48 |
| மஃரிப் | - 06.21 |
| இஷா | - 07.33 |




கொழும்பு காலி முகத்திடலில் நிர்மாணிக்கப்படும் வர்த்தக கூடங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பார்வையிட்டார். அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடுவதையும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன மற்றும் துறைமுக அதிகார சபை தலைவர் தயா ரத்னாயக்க ஆகியோரையும் படங்களில் காணலாம்.

## முடக்கத்திலிருந்து 10 பிரதேசங்கள் விடுவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மேல் மாகாணம் உட்பட மூன்று பொலிஸ் பிரிவுகள் பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 10 தனிமைப்படுத்தலில் முடக்கப்பட்டிருந்த பிரதேசங்கள் நேற்று காலை விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நேற்றுக் காலை 5 மணி முதல் குறித்த பிரதேசங்களில் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயலகததின் தலைவர் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கொழும்பு, பொரளை 06

# அரசாங்கத்தில் பங்காளிகள் அரசின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்

## புறம்பான விடயங்களை நீக்கிக்கொள்ள வேண்டும்



அரசாங்கத்தில் பங்காளிகளாக இருப்பவர்கள் அரசின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அதற்குப் புறம்பான விடயங்கள் சிந்தனைகள் இருந்தால் அவர்கள் அதனை நீக்கிக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் உள்ள பங்காளிக் கட்சித் தலைவர்கள் இடையே ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற குழப்பம் மற்றும் முரண்பாடுகள் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் எஸ்.எம் சந்திரசேன,

மஹிந்த சூறாவளி என்ற தொனிப்பொருளில் தான் எமது கூட்டு எதிரணி அமைக்கப்பட்டு ஆட்சியும் அமைக்கப்பட்டது. அந்த மஹிந்த சூறாவளி என்பதை எவராலும் விற்பனை செய்து உண்டழிக்க முடியாது. அதற்கு இடமளிக்கவும் கூடாது.

இது மக்களின் வேலைத்திட்டம். இதற்காக கூட்டாக உழைத்தவர்கள் இருந்தாலும் அதன் உரிமைகோரலை முழுமையாக கேட்கமுடியாது. அதன் உரிமையாளர் மஹிந்த ராஜபக்ச அவர்கள்தான். இதனூடாகவே உள்ளூராட்சிகள் தேர்தல் வெற்றி. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உருவாக்கம். கட்சி ஆரம்பித்து ஒன்றரை வருடத்திற்குள் தேர்தல் வெற்றி பதிவாகியது. பின்னர் ஏற்பட்ட 06

**துறைமுக கிழக்கு முனைய விவகாரம்;**

# கட்சித் தலைவர்களை சந்திக்கிறார் பிரதமர்



கட்சித் தலைவர்களுடனான அவசர கூட்டத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்படி இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் பாராளுமன்ற கட்டட தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இந்த கலந்துரையாடலில் பங்கேற்குமாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ச 10 அரசியற் கட்சித் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே பிரதமர் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## எம்.பி க்களுக்கு எழுமாறான PCR பரிசோதனை இன்று

பாராளுமன்ற வளாகத்தில் இன்று (09) காலை 9.00 மணி முதல் நண்பகல் 12 மணிவரை முன்னெடுக்கப்படவிருக்கும் எழுமாறான பி.சி.ஆர் பரிசோதனைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் திணைக்களத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் காலப் பகுதியிலும், அமர்வுகள் இடம்பெறாத காலப் பகுதியிலும் வாரத்துக்கு ஒரு தடவை இவ்வாறு பரிசோதனைகள் 06

# தனியார் பஸ் சேவைகளால் பயணிகளுக்கு நெருக்கடி

## முறைப்பாடு கிடைத்துள்ளது என்கிறார் அமைச்சர் லொகுகே



தனியார் பஸ் சேவையானது பயணிகளுக்கு நெருக்கடியேற்படுத்தி வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நெருக்கடி நிலையில் இ.போ.ச மற்றும் ரயில் சேவைகள் முழுமையாக பயன்படுத்தப்படும் என

போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது ,

தனியார் பஸ் உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலினால் நடத்தப்பட்ட கலந்துரையாடலை அடுத்து ஒத்திவைக்கப்பட்டதாக ஊடகங்களில் அறிந்துகொண்டேன். விசேடமாக தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அரச வங்களில் இருந்து விசேட நிவாரணமாக 3 இலட்சம் ரூபாவை 4 சதவீத வட்டியில் கடன் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தனியார் பஸ் சேவையானது பயணிகளுக்கு நெருக்கடியேற்படுத்தி வருவதாக முறைப்பாடுகள் உள்ளன.

அசௌகரியங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் இலங்கை போக்குவரத்து பஸ்கள் மற்றும் ரயில் சேவைகளை திறம்பட நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அதுகுறித்து பேச்சு நடத்த அவர்களுக்கு சந்தர்ப்பம் இருக்கின்றது. இதனிடையே எதிர்கட்சி பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றது. இன்று தடுப்பூசிகள் வழங்கும் அளவுக்கு வந்துவிட்டோம். அடுத்த மாதத்திலிருந்து தினமும் இலட்சம் தடுப்பூசிகளை வழங்கவும் 06

**பூநொச்சிமுனையில்**

# புதைக்கப்பட்ட சிசுவின் சடலம் சந்தேகத்தில் தோண்டி எடுப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பூநொச்சிமுனையில் கடந்த ஆறு தினங்களுக்கு முன்னர் அடக்கம் செய்யப்பட்ட சிசுவொன்றின் சடலம் நேற்று(08) திங்கட்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது.

கடந்த 2ம் திகதி குறித்த சிசுவை பிரசவித்த தாய் தான் குழந்தை பிரசவித்ததை மறைத்து பிரத்தியேகமாக சிகிச்சையை பெற்றுக் கொள்ள முற்பட்ட போது மட்டக்களப்பு போதான வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் குறித்த தாயிடம் மேற் கொண்ட விசாரணைகளையடுத்து இத்தாய் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து வைத்தியசாலை குறித்த தாய் தொடர்பாக காத்தான்குடி பொலிசாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். காத்தான்குடி பொலிசார் இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து குறித்த தாயின் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.



இதையடுத்து விசாரணகளை மேற்கொண்ட பொலிசார் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. றிஸ்வான் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிகள் முன்னிலையில் சிசுவின் சடலம்இன்று திங்கட்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது.

பூநொச்சிமுனையைச் சேர்ந்த 26 வயதுடைய இந்த தாய் கடந்த 2ம் திகதி வைத்தியாலைக்கு செல்லாமல் தனது சிசுவை வீட்டில் பிரசவித்துள்ளார்.

சிசு மரணித்து பிறந்ததாக கூறி அப்பிரதேசத்திலுள்ள பள்ளிவாயல் ஒன்றின் மூலமாக சிசுவை பூநொச்சிமுனையிலுள்ள பள்ளிவாயல் மையவாடியில் 2ம் திகதியே அடக்கம் செய்துள்ளனர். 06

## மழையுடன் கூடிய காலநிலை சில தினங்கள் நீடிக்கும்

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்தமழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள 06



தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியக அங்கத்தவர்கள் அண்மையில் நீதி அமைச்சர் அலி சப்ரியினால் நியமிக்கப்பட்டார்கள்.அதன் உறுப்பினராக நியமிக்கப்பட்ட சட்டத்தரணி ஜனக்க ரணதுங்க, அமைச்சரிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெறுவதை படத்தில் காணலாம்.

## மேல் மாகாணத்திற்கு வெளியே மும்மடங்கு கொவிட் அச்சுறுத்தல்

**அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை**



மேல் மாகாணத்துக்கு வெளியில் கொவிட் அச்சுறுத்தல் மும்மடங்கு அதிகரித்திருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. 06

# கொரோனா தடுப்பூசி இலங்கையில் உற்பத்தி செய்வது குறித்து ஆராய்வு

## எதிரணி குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் சுசில் மறுப்பு



கொரோனா தடுப்பூசி வழங்குவது தொடர்பில் எதிரணி விமர்சித்தாலும் அந்த செயற்பாடு வெற்றிகரமாக இடம்பெறுகிறது.அந்த மருந்தையும் இலங்கையிலேயே உற்பத்தி செய்வது குறித்து இராஜதந்திர பேச்சுக்கள் ஜனாதிபதியின் ஆலோசனைப்படி இடம்பெற்று வருவதாக

கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர்,

பல்வேறு வழிகளில் எதிர்க்கட்சியினரால் விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் எமது நாட்டில் மட்டுமன்றி பல நாடுகளிலும் கொவிட் தடுப்பூசிகளை வழங்குகின்ற சவால்கள் உள்ளன. கொவிட் கட்டுப்பாட்டிலேயே அனைத்து நாடுகளினதும் பொருளாதாரமும் தங்கியுள்ளது. இதுவரை ஒரு இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இலங்கையில் கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுவிட்டது. நாளையாகும்போது முதலாவது சுற்றில் எமக்கு கிடைத்த தடுப்பூசிகள் அனைத்தையும் வழங்கி நிறைவுக்கு கொண்டுவர முடியும்.

இன்னும் இரண்டு மாதங்களில் ஏற்கனவே பெற்றவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும். சீனாவிலிருந்து இந்த வார இறுதிக்குள் ஒருதொகை தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. அதேபோல சுகாதார அமைச்சு, 18 மில்லியன் எஸ்ரா செனிகா தடுப்பூசிகள் இறக்குமதி செய்துள்ளது. அதற்கமைய சுமார் 10 மில்லியன் பேருக்கு மே மாதத்திற்குள் இந்த தடுப்பூசிகளை வழங்கி நிறைவுபடுத்தலாம். 4000 நிலையங்கள் இதற்காக அமைக்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில் 22.2 மில்லியன் மக்கள் தொகை கொண்ட எமது நாட்டில் 45 சதவீத மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்கிவிடமுடியும். அதேபோல ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஸ்புட்னிக் தடுப்பூசி 100 வீதம் வெற்றியளித்திருப்பதாகவே அறிய முடிகிறது. ஆகவே அந்த மருந்தையும் இலங்கையிலேயே உற்பத்தி செய்யும் அளவுக்கான இராஜதந்திர பேச்சுக்கள் ஜனாதிபதியின் ஆலோசனைப்படி இடம்பெற்று வருகின்றன. 06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 146.59 | 151.42 |
| கனடியன் டொலர் | 149.08 | 154.96 |
| யூரோ | 229.76 | 236.70 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 143.40 | 147.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 262.26 | 269.83 |
| சுவிஸ் பிராங்க் | 211.53 | 219.35 |
| அமெரிக்க டொலர் | 191.96 | 196.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 513.89 | கட்டார் ரியால் | 53.19 |
| குவைத் டினார் | 639.81 | சவூதி ரியால் | 51.64 |
| ஓமான் ரியால் | 503.22 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 52.74 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை

அறத்தை அழித்துப் பேசி அறமல்லாதவைகளைச் செய்வதை விட, ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையாகும்.

## கொவிட் 19 தடுப்பூசி திட்டத்தில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு முன்னுரிமை

இலங்கையில் கொவிட்19 தொற்றுக்கு உள்ளாவோரினதும், இத்தொற்றினால் உயிரிழப்போரினதும் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. இத்தொற்றின் முதலாம் அலை 2020 மார்ச் மாத நடுப்பகுதி முதல் பதிவாகத் தொடங்கி கடந்த ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கும் வரையும் நீடித்தது. அக்காலப் பகுதியில் காணப்படாத அதிகரிப்பை தற்போது அவதானிக்க முடிகின்றது.அத்தோடு முதலாம் அலையில் நாட்டின் பல பிரதேசங்களிலும் இத்தொற்று பதிவாகவில்லை. இத்தொற்றின் முதலாம் அலையின் போது சுமார் 4000 பேர்தான் இத்தொற்றுக்கு உள்ளாகினர். அவர்களில் 14 பேரளவில் மரணமடைந்தனர்.

ஆனால் கடந்த ஒக்டோபர் முதல் ஆரம்பமான இரண்டாம் அலைக்கு இற்றை வரையும் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உள்ளாகியுள்ளனர். அவர்களில் 340க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதன்படி இத்தொற்றின் முதலாம் அலையை விடவும் இரண்டாம் அலை மிகவும் வேகமாகப் பரவுவது தெளிவாகின்றது.

இவ்வாறான சூழலில் இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கைகள் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் இந்நாட்டில் ஆரம்பமாகியுள்ளன. முன்னுரிமை அடிப்படையில் இத்தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கொவிட் 19 தொற்றாளர்கள் தொடர்பில் கடமையாற்றும் சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கும் தற்போது இத்தடுப்பு மருந்து வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இத்தடுப்பூசி வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்து நாட்களில் ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 773 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தடுப்பூசியை வழங்கும் அடுத்த முன்னுரிமை பட்டியலில் சிரேஷ்ட பிரஜைகள், கொவிட் 19 தொற்றாளர்களைச் சந்திப்பவர்கள் போன்றோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் ஆரம்ப சுகாதார சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் 19 தொற்று கட்டுபாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் டொக்டர் சுதர்ஷணி பெர்னாண்டோ புள்ளே குறிப்பிடுகையில், 'எதிர்வரும் மார்ச் மாதத்தின் முதல் வாரம் முதல் 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசியை வழங்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், 'இந்நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசி முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென ஏற்கனவே வலியுறுத்தியுள்ளமை தெரிந்ததே.

கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பிரிவினரில் சிரேஷ்ட பிரஜைகள் குறிப்பிடத்தக்க பிரிவினராவர். ஏனெனில் தற்போது இத்தொற்றுக்குள்ளாகி மரணமடைகின்றவர்களில் பெரும் பகுதியினர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக விளங்குகின்றனர்.

'இற்றை வரையும் இந்நாட்டில் இத்தொற்றுக்குள்ளானவர்களில் 10 வீதத்தினர் தான் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். ஆனால் இத்தொற்று காரணமாக உயிரிழந்துள்ளவர்களில் 70 வீதமானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்' என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தொற்றுக்கு சிரேஷ்ட பிரஜைகள் உள்ளாகும் நிலைமை அதிகரிக்குமாயின் அவர்கள் மத்தியிலான இறப்புக்களும் அதிகரிக்கக் கூடிய அச்சுறுத்தல் நிலவுகின்றது. அவ்வாறான நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசி வழங்குவதில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இத்தொற்றின் சவாலுக்கு முகம் கொடுக்க நோயெதிர்ப்பு சக்தி பலமாக இருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான சிரேஷ்ட பிரஜைகளிடம் நோயெதிர்ப்பு சக்தி பலவீனமாகக் காணப்படும். ஏனெனில் சிரேஷ்ட பிரஜைகளில் பெரும்பாலானவர்கள் நீரிழிவு, இதய நோய்கள் உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கு உள்ளானவர்களாக உள்ளனர். அதுவே அதற்கான காரணமாகும். அதன் விளைவாக இத்தொற்று தீவிரமாக செயற்பட வாய்ப்பாக அமைகின்றது. அதனால் இத்தொற்றின் தாக்கமும் பாதிப்பும் சிரேஷ்ட பிரஜைகள் மத்தியில் தீவிரமாக அமைகின்றது.

இதனால்தான் பெரும்பாலான சிரேஷ்ட பிரஜைகளுக்கு இத்தொற்றின் தாக்கம் அதிக பாதிப்பு மிக்கதாக அமைந்து விடுன்றது. ஆகவே கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் நிலவும் தற்போதைய சூழலில் சிரேஷ்ட பிரஜைகளின் நோயெதிர்ப்பு சக்தியை பலப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அந்த வகையில் கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசி சிரேஷ்ட பிரஜைகளின் நோயெதிர்ப்பு சக்தியைப் பலப்படுத்தப் பக்கத்துணையாக அமையும். இது சிரேஷ்ட பிரஜைகள் மத்தியில் கொவிட் 19 தொற்றினாலான தாக்கத்தை மாத்திரமல்லாமல் இறப்புக்களையும் கூட குறைத்துக் கொள்ள வகை செய்யும்.

editor.tkn@lakehouse.lk

# மியன்மார் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியதன் காரணம் என்ன?



எல்லா நாட்களையும் போல்தான் பெப்ரவரி 1ம் திகதியும் விடிந்தது. உலகெங்கும் உள்ள நாட்காட்டிகளில் ஒரு நாள் முன்னால் நகர்ந்தது. ஆனால், அன்றைய காலைப் பொழுதில் மியன்மாரில் மட்டும் ஒரே வீச்சில் பத்தாண்டுகள் பின்னால் நகர்ந்தது. நாட்டின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடுவதற்குச் சில மணி நேரங்களே இருந்தன. அப்போதுதான் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதாக அறிவிப்பு வெளியானது.

1962 முதல் இராணுவத்தால் ஆளப்பட்ட மியன்மாரில் 2016 முதல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சியும் இராணுவமும் இணைந்து ஆட்சி செலுத்தும் புதுமையான இரட்டை ஆட்சி முறை அமுலுக்கு வந்தது. கடந்த நவம்பர் மாதம் தேர்தல் நடந்தது. ஆங் சான் சூசியின் தேசிய ஜனநாயகக் கட்சியும் (என்.எல்.டி) இராணுவத்தின் ஆசியுடன் இயங்கும் யு.எஸ்.டி.பி கட்சியும் தான் பிரதான போட்டியாளர்கள்.

என்.எல்.டி. இரண்டாவது முறையாகப் பெரும் வெற்றி பெற்றது. ஆனால்,



தேர்தலில் தில்லுமுல்லுகள் நடந்திருப்பதாக இராணுவம் குற்றம்சாட்டிக் கொண்டிருந்தது. இந்தச் சூழலில்தான் கடந்த 1ம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஓராண்டு காலம் நெருக்கடி நிலையை அறிவித்திருக்கிறது இராணுவம். சூசியும் என்.எல்.டி.யின் முக்கிய தலைவர்களும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். துருப்புகள் வீதிகளில் வலம் வருகின்றன. இராணுவத் தளபதி மின் ஆங் ஹிலாய்ங் ஜனாதிபதியாக முடிசூட்டிக் கொண்டிருக்கிறார். இத்தனைக்கும் கடந்த ஐந்தாண்டுகளாக என்.எல்.டி.யும் அதன் தலைவர் சூசியும் இராணுவத்துக்கு அனுசரணையாகவே இருந்து வந்தனர். எனினும், இராணுவம் இப்போது நேரடியாகவே ஆட்சி செலுத்த முடிவு செய்திருக்கிறது.

இரண்டாம் உலகப் போரின் ஜப்பானிய ஆக்கிரமிப்புக் காலத்தில் பர்மிய விடுதலைப் படை என்கிற இராணுவ அமைப்பின் தளபதியாக இருந்தவர் சூசியின் தந்தை ஆங் சான். அவர்தான் 1948இல் நாடு விடுதலை அடைந்ததும் ஜனாதிபதியாக ஆகியிருக்க வேண்டும். ஆனால், அதற்கு முன்பே அவரது அரசியல் எதிரிகளால் கொல்லப்பட்டார். 1962இல் அப்போதைய ஜனாதிபதி ஊ நூவின் ஆட்சியைக் கலைத்து விட்டு இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. இராணுவத்துக்கு எதிராக 1988 இல் மாணவர்கள் போராடினார்கள். ஆங் சான் சூசி அந்தப் போராட்டத்தில் உயர்ந்து வந்த நட்சத்திரம். இராணுவம் போராட்டத்தை ஒடுக்கி விட்டது. 1989இல் சூசியையும் வீட்டுக் காவலில் வைத்தது. 1991இல் சூசிக்குச் சமாதானத்துக்கான நோபல் விருது வழங்கப்பட்டது.

2010இல் முன்னாள் இராணுவத் தளபதி தெயின் செயின் ஜனாதிபதியானார். அவர் பல அரசியல்பொருளாதாரச் சீர்திருத்தங்களை அமுல்படுத்தினார். மியான்மரின் ஜனநாயகக் கதவுகள் திறந்தன. 2015இல் பொதுத் தேர்தல் நடந்தது. என்.எல்.டி. மூன்றில் இரண்டு பங்கு இடங்களைக் கைப்பற்றியது. ஆனால், சூசியால் ஜனாதிபதியாக முடியவில்லை. சூசியின் காலம் சென்ற கணவர் ஆங்கிலேயர். இராணுவம் திருத்தி எழுதிய அரசியல் சட்டத்தின்படி வெளிநாட்டவரை மணந்தவர்கள் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது. சூசி தேர்ந்தெடுத்த வேட்பாளர் ஜனாதிபதியானார். சூசி 'அரசின் ஆலோசக'ரானார். சூசியின் தலைமையில் ஜனநாயகம் மெல்ல மெல்ல உயர்ந்து வரும் என்கிற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அது அப்படி நடக்கவில்லை.

சூசி சர்வதேச நம்பிக்கையை இழந்திருக்கலாம். ஆனால், உள்நாட்டில் பெரும்பான்மை பாமா இனத்தவரின் ஆதரவு அவருக்கு இருக்கிறது. 2020 நவம்பரில் தேர்தல் வந்தது. என்.எல்.டி வென்றது. இந்த முறையும் சூசியும் அவரது கட்சியும் இராணுவத்துக்கு இசைவாகவே நடந்து கொண்டிருப்பார்கள். ஆனாலும் இராணுவம் ஏன் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும்?

வருகிற ஜூலை மாதம் தளபதி ஹிலாய்ங்குக்கு 65 வயது நிறையும். அது தளபதிகள் ஓய்வு பெறும் வயது. ஆனால், ஹிலாய்ங் ஓய்வு பெற விரும்பவில்லை. அவர் ஜனாதிபதியாகும் ஆசையில் இருந்தார். நாடாளுமன்றத்தில் கால்வாசி இடங்களை, அதாவது 166 இடங்களை இராணுவமே நியமித்துக் கொள்ளும். தேர்தல் நடந்த 498 இடங்களில், இராணுவத்தின் ஆதரவுடன் இயங்கும் யு.எஸ்.டி.பி. கட்சி 167 இடங்களைப் பெற்றிருந்தால் அவரது ஆசை நிறைவேறியிருக்கும்.

ஆனால், யு.எஸ்.டி.பி.யால் வெறும் 32 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. 396 இடங்களைப் பெற்றது என்.எல்.டி. சூசியால் கைகாட்டப்படும்



என்.எல்.டி. தலைவர் ஜனாதிபதியாகியிருப்பார். சூசிக்கு இராணுவத்தின் மீது காழ்ப்பு இல்லை என்கின்றனர் சில நோக்கர்கள். பர்மிய இராணுவம் அவரது தந்தையால்தொடக்கப்பட்டது. அதேவேளையில், மக்கள் ஆதரவைப் பயன்படுத்தி அவர் இராணுவத்துக்குச் சவாலாக வளர்ந்து விடக் கூடும் என்று இராணுவத்தினர் அஞ்சியிருக்கலாம். ஓய்வு பெற்றுவிட்டால் அதிகாரம் தனது கைவிட்டுப் போகும் என்ற அச்சமும் ஹிலாய்ங்குக்கு இருந்திருக்கலாம். சர்வதேச நீதிமன்றத்தில் இப்போதும் அவர் ஒரு குற்றவாளி, ரோஹிங்கியா குருதியில் அவரது கைரேகை பதிந்திருக்கிறது.

மேலும், புதிய ஜனாதிபதியும் புதிய தளபதியும் அதிகாரத்துக்கு வரும் போது, ஹிலாய்ங்கும் அவர் குடும்பத்தினரும் சகாக்களும் சட்டத்துக்குப் புறம்பாகக் குவித்து வைத்திருக்கும் செல்வத்துக்கான பாதுகாப்பு குறையக் கூடும். அப்படியான பரீட்சைக்கு ஹிலாய்ங் தயாராக இல்லை. அதனால்தான் அவர் தளபதியின் சீருடையைக் களையும் முன்பே ஜனாதிபதியாகி விட்டார் என்கின்றனர் பார்வையாளர்கள்.

மியன்மாரின் இந்தப் பின்னடைவால் உலக நாடுகள் கவலை அடைந்திருக்கின்றன. அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் ஐரோப்பாவும் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாகச் சொல்கின்றன. மியன்மார் இதனால் அச்சமடையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இந்த இராணுவ நடவடிக்கையால் அந்நிய முதலீட்டாளர்கள் பின்வாங்குவார்கள். நாடு தனிமைப்படும். சீன ஆதிக்கம் பெருகும். மிகுந்த பிராயாசைக்குப் பிறகு தோன்றிய ஜனநாயகக் கீற்றுகள் மறையும். 1988ஐப் போல் மக்கள் போராட்டத்துக்கான சாத்தியங்கள் இப்போது தென்படவில்லை. நாடு பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களின் பெயரால் பிளவுண்டு கிடக்கிறது. சூசி தனது தார்மீக பலத்தையும் உலக நாடுகளிடையேயான செல்வாக்கையும் இழந்திருக்கிறார். இந்தப் பேரிடரிலிருந்து மியன்மார் மீண்டு வர வேண்டும்.

**ஹிந்து**

# அம்பாறை மாவட்ட வீதிகளை ஆக்கிரமித்துள்ள கால்நடைகள்

## மக்கள் நடமாடுவதில் அசௌகரியம்; அடிக்கடி வீதிவிபத்துகள்

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச வீதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதால் வீதியில் செல்வோர் சிரமம் அடைகின்றனர். வாகன ஓட்டிகளும் விபத்துகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் பிரதான வீதிகளில் மாத்திரமன்றி உள்வீதிகளிலும் ஆடு, மாடுகளின் தொந்தரவு தொடர்கின்றது.

நீண்ட காலமாகத் தொடரும் இப்பிரச்சினைக்கு எதிராக உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கை மேற்கொள்ளாது அசிரத்தை காட்டுவதாக மக்கள் குறிப்



பிடுகின்றனர். அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச பிரதான வீதிகளில் கட்டாக்காலிகளின் அதிகரித்த நடமாட்டத்தினால் தினமும் வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன.

இதன் போது மக்களுக்கும், வாகனங்கள், உடைமைகளுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

அத்துடன் அரச, தனியார் அலுவலகங்கள், வியாபார நிலையங்கள் என்பனவற்றின் முன்பாக மாடுகள் அதிகம் நடமாடுவதால் சந்தைகள், பிரதேசத்திலுள்ள கேந்திர முக்கியத்துவமிக்க பொதுஇடங்களில் அவற்றின் கழிவுகளை பெருமளவில் காண முடிகின்றது. இதனால் வீதிகள் அசுத்தமாக காணப்படுகின்றன.

ஆடு, மாடுகளை தனியான ஒதுக்குப்புறத்தில் வளர்க்காது, பொதுமக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பிரதேசங்களில் வளர்ப்பதனால் இப்பிரச்சினைக்கு முடிவு காண முடியாதுள்ளது. கட்டாக்காலிகளை முறையான பராமரிப்பின்றி வீதிகளில் அலைய விடும் அதன் உரிமையாளர்கள், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து சிந்திக்காதவர்களாக உள்ளனர்.



இம்மாவட்டத்தின் குறித்த சில பிரதேசங்களில் கட்டாக்காலிகள் 24 மணி நேரமும் வீதிகளில் உலாவி, உறங்குவதை காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறான பிரதேசங்களில் தினமும் இடம்பெறும் வீதிவிபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறானவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொண்டு, அவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். 'கட்டாக்காலி ஆடு, மாடுகள் உள்ளூராட்சி சபைகளினால் பிடிக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படும்' என்ற அறிவித்தல்கள் அடிக்கடி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், பின்னர் அது குறித்து சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் மறந்து விடுகின்றன.

சம்மாந்துறை பிரதான வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் நடமாடிய சுமார் 20 கட்டாக்காலிகளை சம்மாந்துறை பிரதேச சபை, பொலிஸாருடன் இணைந்து பிடித்து அவற்றின் உரிமையாளர்களுக்கு தண்டப்பணம் விதித்ததை அண்மையில் காண முடிந்தது. இந்த நடவடிக்கையை மற்றைய சபைகளும் பின்பற்ற வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சில உள்ளூராட்சி சபைகள் கடந்த காலங்களில் அவ்வப்போது இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டதுண்டு. ஆனால் பின்னர் அது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் நடமாடும் கட்டாக்காலிகளை குறித்த வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகங்களே கட்டுப்படுத்த வேண்டும் எனவும், தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேச கட்டாக்காலிகளை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளே கட்டுப்படுத்த வேண்டும் எனவும் வாதப்பிரதிவாதங்கள் அவ்வப்போது இடம்பெறுவதுண்டு.

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன இணைந்து இவ்விடயம் தொடர்பில் பொதுவான நடைமுறையை அமுல்படுத்தி வீதிகளில் பொதுமக்களுக்கு முறையான பாதகாப்பை வழங்க முன்வர வேண்டும் எனக் கோரப்படுகின்றது.

**முகம்மட் றிஸான்**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

இலங்கை மீதான மனித உரிமை குற்றச் சாட்டு போலியாக உரு வாக்கப்பட்ட பொறியாகும்' என்று கூறுகின்றார் வெளிநாட்டமைச்சர் **தினேஷ் குணவர்தன**

# இலங்கை மீதான மனித உரிமை குற்றச்சாட்டு போலியாக உருவாக்கப்பட்டுள்ள பொறி!

## ஜெனீவா மாநாட்டுக்கான ஆயத்தங்கள் தொடர்பாக வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தல்



**30** வருட காலமாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் 2009 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது. அன்று தொடக்கம் இன்று வரை இலங்கை அரசாங்கத்துக்கும், இராணுவத்துக்கு கட்டளையிட்ட இராணுவத் தலைவர்களுக்கும் எதிராக யுத்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வருகின்றது. நாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானோம். இம்முறை எதிர்வரும் 22 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறுவுள்ள மகாநாட்டில் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன நாட்டின் இறைமையை பாதுகாக்கும் வகையில் தயாராகி வருகின்றார்.

அவர் எமக்கு பேட்டி அளித்தார்.

**கேள்வி: உலகமே எல். ரீ. ரீ. ஈ இயக்கம் கெரில்லா பயங்கரவாத அமைப்பு என்று ஏற்றுக் கொண்டுள்ளது. அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தத்துக்கு ஏன் தவறான விளக்கத்தை அளிக்கிறார்கள்?**

**பதில்:** இலங்கை மீது சுமத்தப்படும் இக்குற்றச்சாட்டு பிழையானது என நாம் சுட்டிக் காட்டி வருகின்றோம். விசேடமாக 30 வருட காலமாக தோல்வியடையச் செய்ய முடியாதிருந்த பயங்கரவாத அமைப்பான எல்.ரீ. ரீ. ஈ அமைப்பை வெற்றி கொண்ட வேளையில் பல நாடுகள் எமக்கு ஆதரவு அளித்தன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வருகை தந்த 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு நாம் பாதுகாப்பை வழங்கினோம். போரில் ஈடுபட்ட புலிகள் அமைப்பினரில் சுமார் 12,500 பேருக்கு புனர்வாழ்வு அளித்துள்ளோம். ஆனால் பல அமைப்புகள் பொய்யான தகவல்களையும் தவறான எண்ணிக்கைகளையும் அளித்துள்ளதால் இலங்கைக்கு தண்டனை அளிக்கக் கூடிய அதிகாரம் மிக்கவர்களாக மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் உள்ளிட்ட பலர் செயற்படுகின்றார்கள்.

**கேள்வி: ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொள்கைக்கு அமைய எம் மீது இவ்வாறான குற்றச்சாட்டை சுமத்த முடியுமா?**

**பதில்:** ஒரு நாட்டிற்கு தெரிவு செய்யப்பட்ட தண்டனை வழங்கும் யோசனையை கொண்டு வருவது என்பது தவறு என்ற கொள்கையின் பெயரிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் அனுமதியுடன் மனித உரிமைகள் ஆணைக் குழு அமைக்கப்பட்டது. அந்த அடிப்படைக் கோட்பாட்டை பின்பற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிந்திருக்க வேண்டும். இலங்கை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தவறானது என நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். ஆனால் 'ஹியூமன் வோட்ச்' அமைப்பு இலங்கையின் நடவடிக்கை குறித்து சர்வதேச கவனத்தை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட சிலரின் கருத்துகளுக்கு அமையவே அவர்கள் அவ்வாறு பேசுகிறார்கள். அதேபோன்று ஹியூமன் வோட்ச் அமைப்பு ஏற்கனவே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை எம் மீது சுமத்தியுள்ளது. அவ்வமைப்பு எவ்வாறு மனித உரிமை பற்றி பேசுகின்றது என்பதற்கு நல்ல உதாரணங்களைத் தரலாம். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் போது 290 க்கும் அதிகமானோர் மரணமடைந்தார்கள். இன்றும் 70 பேர் ஊனம் அடைந்த நிலையில் உள்ளார்கள். அவர்களைப் பற்றிக் கதைப்பதில்ல. அவர்கள் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு கூறுகிறார்கள். இது ஒரு உதாரணமாகும். எமது வங்கிக் கணக்குகளையும் தடை செய்ய அவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். நாட்டு மக்களை வாழ வைக்கும் மனித உரிமைகளின் அடிப்படைத் தேவையான வருமானத்திற்கான வழியை இல்லாது செய்ய முயற்சி செய்யும் அவர்களில் என்ன ஹியூமன் இருக்கின்றது என கேட்கத் தோன்றுகின்றது.

## ' மேற்குலக ஏகாதிபத்தியத்துக்கு நாம் அடிபணிய மாட்டோம் '



**கேள்வி: பல வருட காலமாக இக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வருகிறது. சரியான பதில் எம்மிடமிருந்து கிடைக்கவில்லையா?**

**பதில்:** நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்க முன்வந்ததனால் அங்கு பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எமக்கு எதிரான நாடுகளுடன் இணைந்து, வெளிநாட்டு நீதிபதிகள் இணைந்த நீதிமன்றால் வழக்குகளை விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்க கையை உயர்த்தி விட்டு வந்துள்ளார்கள். அது இலங்கைக்கு எதிராக செயல்பட இலங்கையே ஒப்புதல் அளித்தது போன்றதாகும். அச்சந்தர்ப்பத்தில் சரியான தகவல்களை அறியவில்லை. அதே போன்று அந்த யோசனையை பாராளுமன்றத்தில் கூட முன்வைத்தார்கள். அவ்வேளையில் அரசாங்கத்துக்குள்ளும் இது தொடர்பாக பிரிவினை ஏற்பட்டது.

**கேள்வி: ஆனால் இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகியுள்ளது அல்லவா?**

**பதில்:** ஆம் எம்மால் எமது நாட்டின் உயர்நீதிமன்றம் வரையுள்ள நீதிமன்ற தொகுதிக்கு வெளிநாட்டு நீதிபதியை அனுமதிக்க முடியாது. அது எமது அரசியலமைப்புக்கு எதிரானதாகும்.

**கேள்வி: இணை அனுசரணையில் இருந்து விலகும் போது வெளிநாட்டு அமைச்சர் என்ற ரீதியில் உறுதி ஒன்றைப் பெற்றுக் கொடுத்துள்ளீர்கள் அல்லவா?**

**பதில்:** ஆம், நாம் பெற்றுக் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற செயற்பட்டு வருகின்றோம். எமது அரசியல் அமைப்பின் பிரகாரம் நாம் செயற்படுகின்றோம். விசேட விசாரணை ஆணைக்குழுவை நாம் அமைத்துள்ளோம். அதேபோன்று 2030 இல் வறுமையை ஒழிக்கும் எதிர்பார்ப்புடன் நிலையான அபிவிருத்தியை நோக்கி செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அத்துடன் ஜே. ஆர்.ஜெயவர்த்தன அவரது காலத்தில் இங்கிலாந்தில் நடைமுறையிலிருந்த பயங்கரவாத சட்டத்துக்கு அமைய பயங்கரவாத தடைச் சட்டத்தை நிறுவினார்.

சட்டத்தில் குறைபாடுகளை ஆராய்ந்து சட்டத்தை திருத்தக் கூடிய நடவடிக்கைகள் என்னவென்று தற்போது சட்டமா அதிபர் திணைக்களமும் நீதி அமைச்சும் ஆராய்ந்து வருகின்றன.

**கேள்வி: எமது இராணுவத்துக்கு எதிராக தொடர்ந்தும் அவர்கள் குற்றச்சாட்டுகளை சுமத்துகிறார்கள் அல்லவா?**

**பதில்**: நாட்டின் அனைத்து மக்களுக்காகவே அவர்கள் போரிட்டார்கள். தமிழ் அரசியல் தலைவர்களுக்குக் கூட பாதுகாப்பு வழங்கினார்கள். அவர்களை ஒருபோதும் இராணுவ நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல நாம் இடமளிக்க மாட்டோம். அவர்கள் செய்தது மனிதாபிமான யுத்தம் ஆகும். அதனால் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ளுமாறு கோருகின்றோம்.

**கேள்வி: ஆனால் இராணுவத் தளபதிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் கூட அமெரிக்காவில் நுழைய தடை விதிக்கப் பட்டுள்ளது. அதே போன்று இறுதி யுத்தத்தில் தலைமை வகித்தவர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனையும் மனித உரிமைகள் மீறல் என வினவ முடியாதா?**

**பதில்:** நாம் அது குறித்து விடயங்களை தெரிவித்துள்ளோம். இம்முறையும் அதுபற்றி குறிப்பிடுவோம். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த வேளையில் இங்கிலாந்துக்குச் சென்ற போது அவர் வருகை தந்த விமானம் மீண்டும் செல்வதற்கு தடை விதிக்கும் தடை உத்தரவு ஒன்றை நீதிமன்றத்திற்கு சிலர் கொண்டு சென்றார்கள். இன்று அதனை பலர் மறந்து விட்டார்கள்.

**கேள்வி: பாதிக்கப்பட்ட தரப்பு நியாயம் கிடைக்கவில்லை என்று கூறுகின்றதா?**

**பதில்:** நாட்டு பிரஜை ஒருவர் தமக்கு அநியாயம் அளிக்கப்பட்டால் சட்டத்தின் உதவியை பெற முடியும். அதே போன்று இச்சம்பவங்களைப் பற்றி ஆராய்ந்து அதற்கு அப்பாலும் செல்லலாம். பரணகம அறிக்கை மற்றும் எல்.எல்.ஆர்.சி அறிக்கையின்படி செயல்படலாம். அது மாத்திரமல்ல எவருக்கும் அதற்கு மேலதிகமாக சாட்சியங்களையும் பெற்றுக் கொடுக்க முடியும்.

**கேள்வி: ஏன் மேற்குலக நாடுகள் எம் மீது இவ்வாறு குற்றங்களை சுமத்துகின்றன?**

**பதில்:** இதற்கு தலைமை வகிக்க எம் நாட்டில் கோள் சொல்பவர்களும் இருக்கிறார்கள். எமது நாட்டைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தவறான கருத்துகளை அங்கு சென்று கூறும் போது மேற்குலக நாடுகள் எமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றன.

**கேள்வி: மனித உரிமைகள் ஆணைக் குழுவின் குற்றச்சாட்டை அனுமதிக்கின்ற வடக்கு தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள் அல்லவா ?**

**பதில்:** இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டும். அந்த அரசியல்வாதிகளை, யுத்தக் குற்றம் செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்படும் வீரர்களே புலி பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாத்தார்கள். யுத்தத்தை வழிநடத்திய தலைவர்கள் மனித உரிமையை மீறினார்கள் என்று கூறும் தமிழ் அரசியல்வாதிகள் அன்று வடக்கில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்க வாக்குகளை அளிக்குமாறு வடக்கு மக்களிடம் கூறினார்கள். யுத்தம் 2009 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது. அன்று தொடக்கம் இன்று வரை இந்தக் குற்றச்சாட்டு உள்ளது. ஒருமுறை 'சேனல் 4' நாடகம் அரங்கேறியது.

**கேள்வி: அமைச்சர் ரம்புக்வெல்ல, அமைச்சர் மங்கள சமரவீர 2015ஆம் ஆண்டில்30 பரிந்துரைக்கு ஒப்புதல் அளித்ததன் விளைவே நாம் இப்போது அனுபவிப்பது என்று கூறியிருந்தார் அல்லவா?**

**பதில்:** அது உண்மையாகும். கடந்த ஆணைக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போது வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 'உங்கள் நாட்டவர்கள் அந்த யோசனைக்கு வாக்குகளை வழங்கும் போது நாம் என்ன செய்வது?' என்று கேட்டார்கள். அன்று அரசாங்கத்தில் இருந்த அநேகமானோர் அந்த யோசனையை நிராகரித்திருந்தார்கள். ஒரு சிலரை மகிழ்ச்சிப்படுத்த எம்மால் யோசனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எம் எஜமானர்கள் என்று கருதி மேற்குலக ஏகாதிபத்தியத்துக்கு நாம் அடிபணிய மாட்டோம்.

## ‘கலப்பு நீதிமன்ற முறைக்கு ஒருபோதும் ஒப்புதல் அளிக்க மாட்டோம். நாம் அதனாலேயே இணை அனுசரணையிலிருந்து வெளியேறினோம்’

**கேள்வி: இம்முறை மகாநாட்டில் கலந்து கொள்ளும் அணியினரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா?**

**பதில்**: எமது சுதந்திர பிரதிநிதி ஜெனிவாவில் இருந்து நடவடிக்கையில் ஈடுபடுவார் அங்கு காரியாலய நடவடிக்கைகளும் சரியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. அதைத் தவிர இன்னும் சில பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். அதே போன்று புதிய தூதுவர் உள்ளிட்ட பலர் அங்கு பிரதிநிதிகளாக நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள். அதைத் தவிர இங்கிருந்து தொடர்பு கொள்ளும் பிரதிநிதிகளும் உள்ளார்கள்.

**கேள்வி: கொவிட் 19 தொற்று நிலைமையின் கீழ் கூட்டத் தொடர் எவ்வாறு நடைபெறும்?**

**பதில்:** இம்முறை கூட்டத்தொடர் வீடியோ தொழில்நுட்பம் மூலமாகவே நடைபெறும். இங்கு எமக்கு வழங்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவு. விசேடமாக வெளிநாட்டு அமைச்சர் என்ற ரீதியில் விடயங்களை தெரிவிப்பதற்கு எனக்கு மிகக் குறுகிய காலமே வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி: போதிய நேரமின்மையால் விடயங்களை தெரிவிப்பதில் சிரமம் ஏற்படுமா?**

**பதில்:** உண்மையை உள்ளபடி தெரிவிக்க காலம் போதாது. உண்மையை சுட்டிக்காட்ட குறிப்பட்ட அளவு நேரம் அவசியம். ஆனாலும் நாம் அனைத்தையும் எழுத்து மூலம் அளித்துள்ளோம். எவ்வாறாயினும் பதில் கருத்துகளை தெரிவிக்க எமது நிரந்தர பிரதிநிதிக்கு பின்னர் கால அவகாசம் கிடைக்கும்.

கேள்வி: இம்முறையும் ஹைபிரிட் அதாவது கலப்பு முறை நீதிமன்ற கதை கூறப்பட்டால் என்ன செய்வீர்கள்?

பதில்: நாம் அதற்கு ஒருபோதும் ஒப்புதல் அளிக்க மாட்டோம். நாம் அதனாலேயே இணை அனுசரணையிலிருந்து வெளியேறினோம். இலங்கை பொது நலவாய அங்கத்துவ நாடாகும். அதே போன்று ஜனநாயக நாடாகும். நாம் எமது அரசியலமைப்பின்படியே நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

**கேள்வி: உலகில் வேறு நாடுகள் இவ்வாறு குற்றச்சாட்டுகளுக்கு இம்முறை மகாநாட்டில் முகம்கொடுக்க உள்ளனவா?**

**பதில்:** ஆம், ஒன்பது நாடுகள் தொடர்பில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எமது நாட்டுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடுவது மற்றும் பல பரிந்துரைகளை அழிப்பது நாட்டின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சிப்பது ஆகும். அத்துடன் அது தவறான எடுத்துக்காட்டாகும். அத்துடன் 47 அங்கத்துவ நாடுகளின் கருத்துக்கள் கேட்கப்படும்.

**கேள்வி: மனித உரிமைகள் ஆணைக் குழு இம்முறை இலங்கைக்கு எவ்வாறான அழுத்தத்தை ஏற்படுத்தும் என நீங்கள் எண்ணுகிறீர்கள்?**

**பதில்:** நாம் அதற்கான பதிலை அளித்துள்ளோம். நாம் வெற்றிகரமாக முகம் கொடுப்போம். விரிவாக விவாதங்களை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தால் நல்லது. வீடியோ தொழில்நுட்ப மூலம் எமது கருத்துகளை தெரிவிக்கும் போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டால் பிரச்சினை ஏற்படக் கூடும்.

**கேள்வி: ஒரே நாடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கையாக எடுக்க வேண்டிய செயலாக எதனைக் கருதுகிறீர்கள்?**

**பதில்:** கட்சி, எதிர்க் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும். விசேடமாக எதிர்க் கட்சியினர் இராணுவ வீரர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கத்துடன் இணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

தாரக விக்ரம சேகர ...
தமிழில்: வீ ஆர் வயலட்

# அவலங்கள் நிறைந்த இடமாக கல்முனை இ.போ.ச டிப்போ

**நா**ட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கல்முனை நகரும் ஒன்றாகும். கல்முனை நகர் அபிவிருத்தி பற்றி பெரிதாக பேசப்படுவதும், பின்னர் அப் பேச்சுக்கள் மறக்கப்பட்டுப் போவதும் வழமையான விடயம்.தேர்தல் காலத்தில் கல்முனையை மையாக வைத்துத் தான் அரசியலும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக தமிழ்,முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வாக்குவாங்கியில் கல்முனை முக்கிய இடம்பெறுகின்றது. முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இரு கட்சிகளும் தேசியப் பட்டியலில் மேலதிக ஆசனம் பெற்றுக் கொள்வதற்கு இங்குள்ள மக்கள் அளிக்கின்ற வாக்குகளே காரணமாகும்.

இந்நிலையில் கல்முனை இன்னும் அபிவிருத்தியடையாத பிரதேசமாகவே இருக்கின்றது. காலத்திற்கு காலம் எத்தனையோ அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களாக இருந்து வருகின்றனர். கல்முனை நகர்ப் பகுதியில் உள்ள இ.போ.ச டிப்போ இன்னும் அபிவிருத்தி செய்யப்படாதபடியே உள்ளது. கல்முனை சாலை ஆரம்பத்தில் நற்பிட்டிமுனை பிரதேசத்தில் அமைந்திருந்தது.1987 இல் இருந்து கல்முனையில் தற்போதுள்ள இடத்தில் இயங்கி வருகின்றது. அன்று தொடக்கம் இன்றுவரை பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலே ஊழியர்கள் தமது பணியை முன்னெடுத்து வருகின்றனர். கல்முனை சாலை யுத்த கால கட்டத்தில் இரு தடவைகள் இனந்தெரியாத நபர்களினால் எரிக்கப்பட்டுள்ளது. இதனால் பல பேருந்துகள் எரிந்து நாசமாகிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அதற்கான தடயங்கள் இச்சாலையில் இன்றும் எச்சங்களாக இருக்கின்றது.



கல்முனை சாலையினால் 29 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற தூர சேவையில் 10 பேருந்துகள் ஈடுபட்டுள்ளன. 27 பேருந்துகள் அதன் சேவைக் காலத்தையும் கடந்து தினம் திருத்தத்திற்குள்ளாக்கப்பட்டே ஓடுகின்றன. இங்கு 160 ஊழியர்கள் கடமை புரிகின்றனர். இவர்களுள் 46 சாரதிகள், 43 நடத்துனர்கள், 36 அலுவலக ஊழியர்கள் உள்ளனர்.

35 வருடங்களுக்கு முன்ன ர் திட்டமிடப்படாத வகையில் அவசர அவசரமாக கட்டப்பட்ட கூரைத் தகடுகள் கொண்ட கோழிக்கூடு போன்ற நிர்வாகக் கட்டடத் தொகுதி முற்றாக பழுதடைந்த நிலையிலுள்ளது.

உள்ளே உள்ள சீமெந்து தரை நிலங்கள் பாளம் பாளமாக வெடித்துக் காணப்படுகின்றன. அவ்வெடிப்புக்களில் விஷ ஜந்துக்கள் குடியிருக்கின்றன. மிகுந்த அச்சத்துக்கு மத்தியிலே அலுவலக உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளைச் செய்து வருகின்றனர்.

சிறு காற்றுக்கும் கழன்று விழும் கூரைத் தகடுகள, துருப்பிடித்த மின்சாதனங்கள்...அத்துடன் நிலை, கதவு, ஜன்னல்கள் என அனைத்தும் எப்போது விழுமோ என்று தெரியாத அளவிற்குள்ளன. மழை, வெள்ளம், வெயில் என எதற்கும் தாக்குப்பிடிக்க முடியாத நிர்வாகக் கட்டடத்திற்குள் உழியர்கள் கடமை புரிகின்றார்கள்.இங்கு உத்தியோகத்தர்களின் கதிரை, மேசை போன்ற தளபாடங்கள் கறையான் அரித்து பாவனைக்குதவாதுள்ளன. ஆவணங்களை வைத்துப் பாதுகாக்கும் அலுமாரிகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. நிர்வாக கோவைகள், ஆவணங்களை வைத்து பராமரிக்கக் கூட தளபாடங்கள் இல்லாதுள்ளன. சில உத்தியோகத்தர்கள் உடைந்த கதிரை, மேசைகளை பொருத்தி வைத்து அதில் இருந்து பணிபுரிகின்றனர்.

இச்சாலையானது சமதரையைக் கொண்டதாக அமையாது குண்டும் குழியுமாக வெள்ளநீர் தேங்கி நிற்கக்கூடிய இடமாக இருக்கின்றது. சாலைக்குள் பேருந்துகள் தரித்து நிற்கும் பாதைகள் மழை காலத்தில் வெள்ளத்தினால் சூழப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. கடந்த 2010 இன் இறுதியில் ஏற்பட்ட பாரிய வெள்ளத்தினால் கல்முனை சாலை நீரில் மூழ்கி காட்சியளித்தது. அங்கிருந்த அனைத்து ஆவணங்களும் சேதமடைந்திருந்தன. தற்போது கல்முனை பிரதேசத்தில் பெய்து வரும் மழையினால் பேருந்து நிலையத்தில் நீர் தேங்கி நிற்பதை அவதானிக்க முடிந்தது. மேலும் பல காலமாக பயன்பாட்டிற்கு இல்லாத பேருந்துகள் அங்கிருந்து அகற்றப்படாதுள்ளதனால் நுளம்புகள் பெருகக் கூடிய வாய்ப்புள்ளது.

களஞ்சியசாலை மற்றும் மலசல கூட வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். களஞ்சிய அறையானது மிகவும் மோசமான நிலையில் சிதைவடைந்துள்ளது. அங்குள்ள சுவர், கதவுகள் இடிந்து விடும் நிலையில் இருக்கின்றன. பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் அளவிற்கு களஞ்சிய அறையில்லை.160 ஊழியர்கள் பணிபரியும் இடத்திலுள்ள மலசல கூடங்கள் யாவும் காலங்கடந்த பயன்படுத்த முடியாத மலசல கூடங்களாகவே காணப்படுகின்றன.

கடமையாற்றி ஒய்வு பெற்றுச் செல்வோருக்குப் பதிலாக புதிதாக எவரும் நியமிக்கப்பாதுள்ளனர். இதனால் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்படுகின்றது. தொழிலாளர் பற்றாக் குறை அதிகம் நிலவுகின்றது.

பாதுகாவலர்களுக்கு தங்குவதற்கு அறை ஒன்று இல்லாதுள்ளது. அங்கு கடமைபுரியும் பாதுகாவலளர்கள் சாலையின் அதியுயர் மின்சார பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ள அறைக்குள்ளே தங்குகின்றனர். மழை, இடி, மினனல் தாக்கங்களின் போது அல்லது மின்சாரக் கசிவுகள் எற்படுகின்ற போது இதிலுள்ள பாதுகாவலர்கள் தங்கள் அஞ்சுகின்றனர்.

செ.துஜியந்தன் ...
பாண்டிருப்பு தினகரன் நிருபர்



வெலிகம பகுதியில் அரிய வகையான பெரிய அட்லஸ் வண்ணத்திப்பூச்சியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.. இவற்றின் சிறகை விரித்து நிற்கும் போது அதில் அமைந்துள்ள காட்சியமைப்பு பார்ப்பதற்கு அட்லஸ் (உலக வரைபடம்) போன்று இருக்கும் என்பதால் இது அட்லஸ் வண்ணத்திப்பூச்சி எனப்பெயரிடப்பட்டுள்ளது. இது 10 அங்குலம் வரை பெரிதாக இருப்பதாக அறிய வருகிறது.

## புலம் பெயர்...

கூறினார்.

மேலும் கடந்த சில நாட்களாக நடைபெற்ற இவ்வாறான போராட்டங்களில் ஒரு சில தரப்பினரின் குறுகிய நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டு என்றும் சவேந்திர சில்வா குறிப்பிட்டார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், எரியும் தீயில் எண்ணெயை வார்ப்பது போல இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால் இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் ஏற்கத்தக்கவை என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் குறிப்பிட்டார்.

இருப்பினும் கொரோனா தொற்றின் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளை மீறியவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இன்று முதல் 12 வரை...

முறை குறித்து விவாதிக்க குறித்த கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது. பாராளுமன்ற அமர்வு நாட்களின் எண்ணிக்கையை குறைப்பதா என்பது பற்றியும் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## நாட்டை இழிவுபடுத்த...

சாதகமான அம்சங்களைக் கருத்திற் கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். வொஷிங்டனில் உள்ள இலங்கை தூதுரகத்தில் இடம்பெற்ற இலங்கையின் 73வது சுதந்திர தின நிகழ்வில் அவர் இதனைக் கூறியுள்ளார். இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள், அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் மத்திய மற்றும் ஆசியாவிற்கான பதில் செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொவிட்19 பரவல் காரணமாக அமெரிக்காவில் உள்ள இலங்கையர்கள், இணையம் ஊடாக இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாக அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிரான வழக்கு நிறைவு;...

கூறப்படும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிரான வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்தன. இது தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே முன் விசாரணைக்கு வந்தது. இதன் போது குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரம் இல்லாததால் தனது கட்சிக்காரரை விடுவிக்குமாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் சட்டத்தரணி நீதிமன்றில் கோரியிருந்தார். இதனை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கு தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதி வழங்குவதாக அறிவித்தார்.

## "B" அறிக்கையூடாக முல்லைத்தீவு...

அறிக்கையூடாக பேரணியில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் உள்ளடங்கலான குழுவிற்கு எதிராக இவ்வாறு வழக்குத் தொடர்ந்துள்ளன.

இது தொடர்பிலே சிரேஸ்ட சட்டவாளர் ரி.பரன்சோதி மற்றும், சட்டத்தரணி எஸ். தனஞ்சயன் ஆகியோரிடம் தொடர்பு கொண்டுகேட்டபோது, ஏற்கனவே குறித்த பேரணிக்கு தடைகோரி பொலிஸ் நிலையங்களிலிருந்து AR அறிக்கையூடாக முல்லைத்தீவு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறிப்பாக குற்றம் ஒன்று இடம்பெற்றதற்கான சந்தேகம் இருந்தால் AR அறிக்கையூடாக வழக்குத் தாக்கல் செய்யப்படும். அந்தவகையிலேயே குறித்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி நீதிமன்றால் உத்தரவொன்றும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 08.02.2021 இன்று அதை முடிவுக்குக்கொண்டுவந்து, நீதிமன்றால் கொண்டுவரப்பட்ட உத்தரவு மீறப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டு, ஏற்கனவே பேரணிக்கு தடைகோரி வழக்குத் தொடர்ந்திருந்த அனைத்து பொலிஸ் நிலையங்களாலும் B அறிக்கையினூடாக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அதேவேளை "பி" அறிக்கையூடாக தொடரப்படும் வழக்கென்பது விசாரணைக்குரிய வழக்காகும். இதிலே குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் குற்றச்சாட்டுள்ள நபர்கள் மன்றிலே முற்படுத்தப்படவேண்டும் என்றனர்.

## ஆசிரியர்களுக்கும் தடுப்பூசிக்கு...

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஒரே தடவையில் நாடளாவிய ரீதியில் அனைத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பது சாத்தியப்படாது என்பதனால் கட்டம் கட்டமாக அவர்களுக்கு தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான லலித் வீரதுங்கவிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், அதற்கிணங்க கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து ஆசிரியர்களை பாதுகாக்கும் வகையில் தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள் அது தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்;

ஆசிரியர்களுக்கு கண்டிப்பாக கருணா வைரஸ் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.அவர்கள் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்கள்.

அதனைக் கருத்திற்கொண்டே கல்வியமைச்சு அவர்களுக்கு தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஜனாதிபதியின் ஆலோசகரு டன் பேச்சுவார்த்தை நடத்தியது.

அது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் ஒரே தடவையில் ஆசிரியர்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவது சாத்தியமற்றது எனினும் பெப்ரவரி இறுதிப்பகுதி அல்லது மார்ச் முதல் பகுதியில் ஆசிரியர்களுக்கு தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை அவர் உறுதியாக தெரிவித்தார் என்றும் அமைச்சர் ஜி எல் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## முடக்கத்திலிருந்து...

(03ஆம் பக்கத் தொடர்)

பொலிஸ் நிர்வாகப்பிரதேசத்தில் 4 இடங்கள் பூகொடை பொலிஸ் பிரிவில் ஒரு கிராம சேவகர் பிரிவு, மினவாங்கொடைப்பிரிவில் 4 பிரதேசங்கள்அம்பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவு ஒரு பிரதேசமும் நேற்றைய தனிமைப்படுத்தல் முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி மேலும் தெரிவித்தார். (ஸ)

## எம்.பி க்களுக்கு ...

(03ஆம் பக்கத் தொடர்)

மேற்கொள்ளப்படவுள்ளன. 2021 ஜனவரி மாதம் 13ஆம் திகதி முதல் இதுவரை பாராளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் இறுதியாக 2021.01. 25ஆம் திகதி 190 பேர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுடன் இதில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டது. பாராளுமன்ற அமர்வுகள் இன்று முதல் நான்கு தினங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்திலும் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது.(பா)

## தனியார் பஸ் சேவைகளால்...

(03ஆம் பக்கத் தொடர்)

எதிர்பார்க்கின்றோம். சஜித் பிரேமதாஸவுக்கு, கொரோனா என்பது எமது நாட்டில் மாத்திரமன்றி அமெரிக்கா உட்பட பல நாடுகளிலும் பரவியிருக்கின்றது என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

நாங்கள் மக்களுடன்தான் செயற்படுகின்றோம் என்பதை துறைமுக விவகாரத்திலிருந்து உறுதிப்படுத்தியிருக்கின்றோம். இந்தியா போன்ற பலம்வாய்ந்த நாடுகள் என்றாலும்கூட இடித்துரைக்கின்ற தீர்மானங்களை எடுக்கின்ற அரசாங்கமாக எமது அரசாங்கம் உள்ளது.

## மேல் மாகாணத்திற்கு...

(03ஆம் பக்கத் தொடர்)

அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித அலுத்கே இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் இது குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும், அது தொடர்பில் கவனம் செலுத்தாமை காரணமாக தற்போது நாடு முழுவதும் நோயாளர்கள் அடையாளம் காணப்படும் நிலை உருவாகியுள்ளது. எனவே, இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், இந்த மாத இறுதியின்போது மிகவும் அபாயகரமான நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித அலுத்கே மேலும் தெரிவித்துள்ளார்.

## மழையுடன் கூடிய...

(03ஆம் பக்கத் தொடர்)

தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.காற்றின் வேகமானது 3040 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

## சுமந்திரனின் எஸ்.ரீ.எப் பாதுகாப்பு...

பெறப்பட்டமைக்கான காரணம் தொடர்பில் எதுவித தகவல்களும் வெளியிடப்படவில்லை.எனினும் பிரமுகர் பாதுகாப்பு பிரிவினரின் பாதுகாப்பு தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் சுமந்திரனுக்கு எதிராக கொலை அச்சுறுத்தல் இருந்தமை தொடர்பாக தெரியவந்த நிலையிலேயே அவருக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களுக்கான தடுப்பூசி...

பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். இதற்காக 4000 மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.அதேவேளை, நாளொன்றுக்கு 2000 மத்திய நிலையங்களை செயற்படுத்துவதினூடாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்காக தேவையான தடுப்பபூசிகளைப் பெற்றவுடன் தேசிய தடுப்பூசி செயற்திட்டத்தை தொடங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்தாகவும் அவர் கூறினார். ஒக்ஸ்போர்ட்அஸ்ட்ரா ஷெனெகா கோவிஷீல்ட்டின் 1,60,000க்கும் மேற்பட்ட ஊசிகளை அரசாங்கம் ஏற்கனவே முன்னணி சுகாதார ஊழியர்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் விமல் வீரவன்ச...

தொடர்பாக எவ்விதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளும் உரிமை விமல் வீரவங்சவிற்கு இல்லை என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

எனவே அவருடைய அறிவிப்பு குறித்து பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பதுடன் அந்த கருத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

மேலும் கூட்டணியில் இணைந்து கொண்ட ஒருவர் மிக கீழ்த்தரமான அறிவிப்பொன்றை விடுத்துள்ளமை குறித்து கட்சி என்ற வகையில் கவலையடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனாவின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி அவருக்கு பதிலாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச அண்மையில் தெரிவித்திருந்தார்.

## புதைக்கப்பட்ட சிசுவின்...

(03ஆம் பக்கத் தொடர்)

இதையடுத்து இத் தாய் தனக்கு வயிற்று வலியெனக் கூறி சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முற்பட்ட போதே இவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக தெரிய வருகின்றது.

இத் தாய்க்கு ஏற்கனவே இரண்டு ஆண் குழந்தைகள் இருக்கின்ற நிலையில் இது பெண் குழந்தையெனவும் கூறப்படுகின்றது.

சிசுவின் சடலத்தை தோண்டும் இடத்துக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் பாறுக், காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறீ உட்பட பொலிஸ் அதிகாரிகள் சமூகமளித்திருந்தனர்.

சுடலத்தை தோண்டும் இடத்துக்கு குறித்த பெண்ணின் கணவரும் தனது இரண்டு பிள்ளைகளுடன் சமூகமளித்திருந்ததுடன் பூநொச்சிமுனை பள்ளிவாயல் இமாம் மற்றும் பள்ளிவாயல் பிரதி நிதிகளும் வருகை தந்திருந்தனர்.

தோண்டி எடுக்கப்பட்ட சிசுவின் சடலம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கமைய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

## யுத்த குற்றம் புரிந்தோருக்கு...

றவூப் ஹக்கீம் தெரிவித்தார். கல்முனையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பில் கருத்துக்கள் கேட்டபோது அதற்கு பதிலளித்த அவர்,

பேரணியின் இடைநடுவில் வந்து சிவன் பூஜையில் கரடி புகுந்தமாதிரி சிலர் கோஷங்களை முன் வைப்பது ஆபத்தானது.

காலாகாலமாக எமக்கிடையில் இருக்கும் முரண்பாடுகளை இந்த பேரணியுடன் முடிச்சிப்போட்டு எங்களின் ஒற்றுமைக்கு கலங்கம் ஏற்படுத்தக் கூடாது. எமது ஒற்றுமையை குலைத்து விடாது நாங்கள் எல்லோரும் ஒருமித்த வகையில் நியாயமான கோரிக்கைகளை எங்களுக்கிடையே பேசி தீர்த்துக்கொள்ளலாம். இவ்வாறான போராட்டங்களின் போது அதை மட்டும் மையப்படுத்தி கோஷங்களை எழுப்புவதன் மூலம் எமக்கிடையில் உருவாகி வரும் இணக்கப்பாடு சிதைந்து விடும். எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு மத்தியில் மட்டுமல்ல சிங்கள மக்களுக்கு மத்தியிலும் நல்லிணக்கம் உருவாக வேண்டும்.

இந்த நாட்டின் அராஜகத்திற்கு எதிராக ஒன்றுபடுகின்ற பேரணியில் இடைநடுவில் வந்து சிவன் பூஜையில் கரடி புகுந்தமாதிரி சிலர் கோஷங்களை வைப்பது ஆபத்தானது. அது தவிர்க்கப்பட வேண்டியது.

மு.கா. எம்பிக்களை அந்த பேரணிக்கு ஆதரவளிக்க கூறியிருந்தேன். ஜனாஸா விடயத்தில் இந்த அரசு விட்டுக்கொடுப்புக்கள் இல்லாமல் இருக்கின்ற போது ஜெனிவா பிரேரணையில் இவ்விடயம் உள்ளடக்கியதாக சர்வதேச சமூகம் முன்மொழிந்திருக்கிறது.இந்தப் பின்னணியிலும் சட்டத்தின் ஆட்சியையும் உள்ளடக்கி அந்த பிரேரணை நிறைவேற்றப்பட உள்ளதனால் இந்த நாட்டில் நடைபெற்ற யுத்தத்தில் தவறிழைத்த விடுதலை புலிகளோ அல்லது அரசாங்க படையணி அதிகாரிகள் என யாராக இருந்தாலும் யுத்த குற்றம் செய்திருந்தால் மாத்திரம் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச நீதி நியாயம் என்ற விடயத்தில் சர்வதேசத்திற்கு பதிலளிக்க வேண்டிய கடமை இருக்கிறது. சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளமூன்று இனங்களும் இணைந்து போராடியே சுதந்திரத்தை பெற்றுக் கொண்டோம்.

தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல இந்த நாட்டின் நீதியான சுதந்திரமான சட்டத்துறை ஆட்சியில் நாட்டமுள்ள சகல தரப்பும் இந்த பேரணிக்கு ஆதரவளிக்கிறது. இது வெறுமனே தமிழ் பேசும் மக்களின் போராட்டம் அல்ல. இந்த நாட்டின் சகல இன மக்களும் சேர்ந்து நேர்மையான நியாயமான ஆட்சி நடைபெற வேண்டும்.

காலாகாலமாக இருக்கும் அந்த முரண்பாடுகளை இந்த பேரணியுடன் முடிச்சிப்போட்டு எங்களின் ஒற்றுமைக்கு கழங்கம் ஏற்படுத்த கூடாது. எமது ஒற்றுமையை குலைத்துவிடாது நாங்கள் எல்லோரும் எங்களின் நியாயமான கோரிக்கைகளை எங்களுக்கிடையே பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்றார்.

## கொரோனா தடுப்பூசி...

(03ஆம் பக்கத் தொடர்)

சுகாதார வழிகாட்டல்களுடன் சுற்றுலாத்துறை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொதுத் தேர்தல் நடந்து 6 மாதங்களாகின்றன. ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்திற்கு ஒருவரை நியமிக்க பழைமைவாய்ந்த அக்கட்சிக்கு முடியாமலிருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியினரிடையே இன்றுதான் அமைப்பாளர்கள்கூட நியமிக்கப்படுகின்றனர். இதுவே தற்போதைய எதிரணியினரின் நிலைமை.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் பற்றி விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,

ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்திற்கமைய இருவழிகளில் ஆணைக்குழுவை நியமிக்கமுடியும். சாதாரண ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவே அவையாகும். இந்த அரசாங்கம் சாதாரண ஜனாதிபதி ஆணைக்குழுவையே நியமித்தது. ஆணைக்குழு முதலாவதாக சாட்சியங்களின் வாக்குமூலங்களை பொலிஸார் ஊடாக பதிவுசெய்யும். அதன் பின் ஆணைக்குழுவினால் சாட்சியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். அவர்களுக்காக சட்டத்தரணிகள் முன்னிலையாகலாம். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு குறுக்கு கேள்வி கேட்பதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஆகவே இந்த ஈஸ்டர் தாக்குதல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் என்பது நீதிமன்ற செயற்பாடுகளுக்கு சார்ந்ததாகவே இடம்பெறுகின்றன.

அப்படிப்பட்ட ஆணைக்குழுவுக்கு முன்பாக வழங்கப்படுகின்ற சாட்சியங்களை வைத்து சட்டமா அதிபர் ஊடாக வழக்குகளைத் தாக்கல் செய்யமுடியும். வழக்கு தாக்கல் செய்யவும் அவற்றை வழிநடத்தவும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படுவதன் ஊடாக இலகுவாகின்றது. சுமார் ஒரு இலட்சம் பக்கங்கள் அந்த ஆணைக்குழுவின் அறிக்கை சமந்துள்ள நிலையில் அவற்றை ஆராய சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அதிக ஆளனி ஈடுபடுத்தப்பட வேண்டியிருக்கும். அறிக்கையில் உள்ள ஆதாரங்களை வைத்து வழக்கு தாக்கல் செய்வதே இதன் இலகுவான காரியமாக அமையும்.

## நாட்டின் சுயாதீன தன்மையை...

தெரிவித்தார்.

சியம்பலான்டுவ பகுதியில் இடம் பெற்ற மதநிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது பிரதமர் மேலும் குறிப்பிடுகையில்,

பௌத்த சாசனத்தை முன்னிலைப் படுத்தி அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுகிறது.நாட்டின் நன்மைக்கு சர்வ மதங்களின் ஆசிர்வாதம் அவசியமாகும். அனைத்து மதத்தின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது. பௌத்த சாசனத்துக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கம் செயற்பட்டது. இதனால் கடந்த காலங்களில் மதங்களுக்கிடையில் பாரிய பிணக்கு ஏற்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ராஜபக்ஷ பெயருடன் தொடர்புடையவர்களையும், எமது ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகளையும் நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்களுக்குட்படுத்தியது. பௌத்த மதத்துக்கும்,பௌத்த மத தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பௌத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டிய எதிர்பார்ப்பு அனைத்து தரப்பிலும் காணப்பட்டது.

இவ்வாறான நிலையில் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. பௌத்த சாசனத்தை பாதுகாக்க புதிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பிக்குகளின் பெற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

30 வருட கால யுத்தம் பொருளாதாரம், சமூகம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. முடிக்க முடியாது என்று குறிப்பிட்ட யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து குறுகிய காலத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதாரம் ஆகியவற்றை ஒருசேர முன்னேற்றமடைய செய்தோம்.

யுத்தத்தை வெற்றிக் கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவாவில் குற்றவாளியாக்கியது.

இதன்காரணமாக நெருக்கடிகளை எதிர்க் கொள்ள நேரிடும் என்பதை நன்கறிந்து நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து விலகினோம்.நாட்டின் சுயாதீனத்தன்மைக்கான நெருக்கடியான பல தீர்மானங்களை எடுத்துள்ளோம்.நாட்டின்உரிமையைநாட்டுமக்களுக்கே வழங்குவோம். தற்போதும் கூட நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் சுயாதீன முறையில் தீர்மானம் எடுத்துள்ளோம். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மத தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள்.

எனவே மத தலைவர்கள் அரசாங்கத்தின் குறைப்பாடுகளை சுட்டிக் காட்டி ஆட்சியை நல்வழிப்படுத்த தொடர்ந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் பிரதமர் இதன் போது தெரிவித்தார்.

## அரசாங்கத்தில் பங்காளிகள்...

(03ஆம் பக்கத் தொடர்)

கூட்டணியில் பலரும் இணைந்தார்கள். ஜனாதிபதியையும் தெரிவுசெய்யமுடிந்தது. பொதுத் தேர்தலிலும் 127 உறுப்பினர்களை பொதுஜன முன்னணி வெற்றிபெற வைத்தது. மேலும் பலர் கூட்டணியில் இருக்கின்றார்கள். அதேபோல அமைச்சரவையில் பேசப்படுகின்ற விடயங்களை பாதுகாப்பது அமைச்சர்களின் கடமையாகும். அந்த வகையில் அரசாங்கத்தில் இருப்பவர்கள் அரசின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அதற்குப் புறம்பான விடயங்கள் சிந்தனைகள் இருந்தால் அவர்கள் அதனை நீக்கிக்கொள்ள வேண்டும்.

இன்று வங்குரோத்து எதிர்கட்சியே உள்ளது. நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும் இரண்டையுமே தவறு என்கிறார்கள். எதிர்கட்சி என்பது சம்பிரதாய செயற்பாடுகளன்றி நாட்டிற்காக பொதுவாக ஒன்றுசேர வேண்டும். வரலாற்றுகளில்கூட 30 வருட போர்க்காலத்திலும் எதிர்கட்சியாக இருந்தவர்கள் அரசாங்கத்தின் கால்களைப்பிடித்து இழுக்கவே பார்த்தார்கள். தொப்பிகல மீட்பின்போதும், கிளிநொச்சி மீட்பின்போதும் ரணில் விக்கிரமசிங்க உட்பட பலரும் ஏளனமாகவே விமர்சித்தார்கள். எனினும் அன்று இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் தற்போதைய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷச அவர்கள் பாதுகாப்பு செயலாளராகவும் மற்றும் படையினரும் தடைகளுக்கு மத்தியில்தான் வெற்றியை பிடித்தோம். கொரோனா இன்று பல நாடுகளிலும் இருக்கிறது. எமது நாட்டில் தொற்றினை வைத்து ஆட்சியைக் கைப்பற்ற பார்க்கின்றார்கள். எவ்வாறாயினும் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொடுக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவும் படியே எதிரணியிடமும் கேட்கின்றோம். ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலுக்கு இன்னும் பல வருடங்கள் இருக்கின்றன.

இதனிடையே அவசரமாக ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அதேபோல மக்களுக்கு நிவாரணம் வழங்கி, நாட்டினை அபிவிருத்தி செய்துவிட்டே எதிர்கட்சிக்கு சென்றதாக அவர்கள் நினைக்கின்றார்கள். இருப்பினும் எமது அரசாங்கம் பல அபிவிருத்திகளை செய்தது. இப்போதும் விவசாயிகளுக்காக குளங்களை நிர்மாணிக்கிறது, 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேவைவாய்ப்பு, விவசாய விலை நிர்ணயம், ஒரு இலட்சம் வீதிகள் செப்பனிடல், உள்நாட்டு உற்பத்தி போன்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. அன்று ஸ்ரீமாவோ அம்மையாரின் காலத்தில்போன்று உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்க இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. எவ்வாறாயினும் எதிர்கட்சியிடையே பலரும் இன்று அதிருப்தியடைந்துள்ளனர். இப்படியே அவர்கள் பயணித்தால் மேலும் பல தோல்விகள்தான் அவர்களுக்கு மிஞ்சும் என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

## 1000 ரூபாவுக்கு இணக்கம்...

அதனையடுத்து கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளமாக 900 ரூபாவும் வாழ்க்கை செலவு தொகையாக 100 ரூபாவையும் வழங்குவதற்கு சம்பள நிர்ணய சபை முடிவு செய்துள்ள நிலையில் அதற்கு முதலாளிமார் சம்மேளனம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

அதனையடுத்து வாக்கெடுப்பு ஒன்று இடம் பெற்றுள்ள நிலையில் ஆயிரம் ரூபா என்ற தொகைக்கு ஆதரவாக பதினொரு வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் கிடைத்துள்ளன.

தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் ஆணையாளரினால் முன்வைக்கப்பட்ட 1000 ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் முதலாளிமார் சம்மேளனம் இணக்கப்பாட்டுக்கு வராததால் நேற்றைய பேச்சு வார்த்தையில் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

அடிப்படை சம்பளமாக 900 ரூபா மற்றும் வாழ்க்கைச் செலவு தொகையாக 100 ரூபா என்ற முடிவுக்கு தொழிற்சங்கங்களும் தொழில் ஆணையாளரும் இணங்கியுள்ள நிலையில் சம்பள நிர்ணய சபைக்கூடாக அதனை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் முதலாளிமார் சம்மேளனமானது 1,000 ரூபாய்க்கு இணங்கவில்லை என்பதுடன் 525 ரூபாயை அடிப்படைச் சம்பளமாகவும் வரவுக்கொடுப்பனவாக 140 ரூபாயும் மேலதிக்கொடுப்பனவாக 50 ரூபாயை வழங்குவதிலேயே விடாப்பிடியாக இருந்துள்ளது.

தமது 525 ரூபாய் முன்மொழிவையும் வாக்கெடுக்குப்பு விடுமாறு நிர்ணயச் சபையை கோரியுள்ளது. இந்த வாக்கெடுப்பில் தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்துகொள்ளாத நிலையில், வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்துள்ளது.

இந்நிலையில் சம்பள நிர்ணயச் சபையின் இந்தத் தீர்மானம் தொழில் அமைச்சரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கக்கப்படவுள்ள நிலையில் வர்த்தமானியிலும் வெளியிடப்படவுள்ளது.

மிக நீண்டகாலமாக இழுபறியில் இருந்த தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபாய் சம்பள உயர்வுக்கு, சம்பள நிர்ணயச் சபையினூடாக சுமூகமானத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக, தொழிற்சங்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வாக்களித்துள்ள அரசாங்கத் தரப்பின் மூன்று உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக, இராஜாங்க அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அத்துடன் இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வைப் பெற்றுக்கொடுத்ததற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் நேரில் சென்று நன்றியைத் தெரிவித்துள்ளார்.

நேற்றைய மேற்படி பேச்சுவார்த்தைக்கிணங்க இரு தரப்பினரும் தமது ஆலோசனைகளை முன் வைப்பதற்காக 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பேச்சுவார்த்தை தொடர்பில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களில் ஒன்றான தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கருத்து தெரிவிக்கையில்;

சம்பள நிர்ணய சபையின் ஊடாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் போது தொழிலாளர்களுக்கான சலுகைகள் அனைத்தும் இல்லாதொழிந்து விடும். மேற்படி ஆயிரத்து 40 ரூபா என்ற முடிவுக்கு இணக்கம் காணப்பட்டாலும் 13 நாட்களுக்கே வேலை தருவதாக முதலாளிமார் சம்மேளனம் தெரிவிக்கின்றது. அவ்வாறானால் மாதத்தில் மீதமுள்ள நாட்களில் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். அதற்கிணங்க 14 நாட்களின் பின்னர் இருதரப்பு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் ஆராயப்பட்டே இறுதித் தீர்வு எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக இன்று பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை கொண்டுவரப்போவதாகவும் வடிவேல் சுரேஷ் எம்.பி.. மேலும் தெரிவித்தார். (ஸ)

அனுராதபுரம் மாவட்ட இளைஞர், யுவதிகளின்

# வேலையில்லா பிரச்சினையை தீர்க்க புதிய ஆடைத் தொழிற்சாலைகள் ஆரம்பம்



**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

அனுராதபுரம் மாவட்ட இளைஞர் யுவதிகளின் வேலையில்லா பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அனுராதபுரம் மாவட்டத்தை மையமாக கொண்ட சில பிரதேச செயலகப் பகுதிகளில் புதிய ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அதனை நோக்காகக் கொண்டு திறப்பனையில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு இராஜாங்க அமைச்சர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள ஊழியர்களையும் அதிகாரிகளையும் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆடைத் தொழிற்சாலைகள் பெரும் பங்காற்றிவரும் நிலையில். அனுராதபுரம் மாவட்டத்தில் சில ஆடைத் தொழிற்சாலைகள் மாத்திரமே உள்ளதுடன் பல இளைஞர், யுவதிகள் மாவட்டத்திற்கு வெளியில் சென்று தொழில் செய்வதில் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளதுடன் ஆடைத் தொழிற்சாலைகளிலும் ஏனைய தொழிற்துறைகளில் ஈடுபடாமலும் தொழிலின்றி இருப்பதுடன். அதற்கான தீர்வாக அனுராதபுரம் மாவட்டத்தை மையமாக கொண்டு சில பிரதேச செயலகப் பகுதிகளில் இது போன்ற புதிய ஆடைத் தொழிற்சாலைகளை தனியார் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்வதற்கு இராஜாங்க அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.

## தலாவ தம்மன்னாவ குளம் புனரமைப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தின் பழமை வாய்ந்த தலாவ தம்மன்னாவ குளத்தை புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன விடுத்த வேண்டு கோளுக்கிணங்க இதன் ஆரம்ப கட்ட வேலைகள் கடந்த 06ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.இதற்கு சமமாக மாவட்டத்தில் உள்ள அனேகமான குளங்கள் இதன் கீழ் அபிவிருத்தி காணப்படவுள்ளன.

தம்மன்னாவ குளத்தை அண்டிய பகுதியில் புதிய வியாபார கடைத் தொகுதியொன்றும், குறிப்பிட்ட குளத்தை மையமாக வைத்து படகு சேவையொன்றை நடாத்தவும்,மரக்கறி மற்றும் பழங்களை விற்பனை செய்யும் மத்திய நிலைய மொன்றும் இக் குளத்தை அண்டியுள்ள பகுதிகளில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

அநுராதபுரம் பாதெனிய பிரதான பாதையில் அமைந்துள்ள இக் குளம் உள்ளூர் வெளியூர் உல்லாச பிரியாணிகளை கவரும் ஒரு இடமாக இருப்பதால் இக் குளத்தை புனரமைக்கவுள்ளதாக காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

விவசாய கைத்தொழிலின் அடித்தளத்தோடு பின்னிப் பிணைந்துள்ள குளங்களையும் கால்வாய்களையும் புனரமைப்பதன் ஊடாக சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப்பாகும்.

## சட்டவிரோத துப்பாகியுடன் ஒருவர் கைது

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை கடுவெள கொடவெல் பொகுன பிரதேசத்தில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டில் உற்பத்தி செய்த சட்டவிரோத துப்பாக்கி ஒன்றை சந்தேகநபர் ஒருவருடன் அம்பலாந்தோட்டை விசேட அதிரடிப் படையினர் ஞாயிறு (07) கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்று பரீட்சித்தபோதே இத் துப்பாக்கி ஒளித்து வைத்திருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரை விசேட அதிரடிப்படையினர் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பதவிய விவசாய பிரிவில் கால்நடைகள் திடீர் இறப்பால் மக்கள் பீதி

**திறப்பனை தினகரன் நிருபர்**

பதவிய விவசாய பிரிவில் வீட்டில் வளர்க்கப்படும் கால் நடைகள் திடீர் திடீரென இறந்து விடுவதாகவும், கடந்த வாரங்களில் இதன் தொகை அதிகமாக இருந்ததாகவும், இதனால் தாம் கடும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் கால் நடை வளர்ப்பாளர்களும்,பொது மக்களும் கவலை தெரிவிக்கின்றனர். பதவிய விவசாய வலயப் பகுதியிலுள்ள கால் நடை மேய்ச்சல் நிலங்கள் குறுகியதால் இந் நிலைமை தோன்றியுள்ளதாக தெரிவிக்கும் இவர்கள், கால் நடைகளுக்கான மேச்சல் நிலங்களில் விவசாய செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதால் கால் நடைகளுக்கான உணவு வழங்களில் கடும் கஷ்டமான நிலைமை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இதனால் பதவிய விவசாய வலயத்தின் பால் உற்பத்தியும் குறைவடைந்துள்ளது.

இது சம்பந்தமாக வட மத்திய மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளதோடு இதற்கு உரிய தீர்வை பெற்றுத் தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் தேசிய பற்றாளர்கள் கண்டு கொள்ளப்படாத காலமிது

பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

முஸ்லிம்களின் வரலாறு காணாமற் போய்க் கொண்டிருக்கும் ஒரு கால கட்டம் இது.

இந்த நாட்டுக்கும் தேசிய வெற்றிக்கும் நலனுக்கும் பாடுபட்ட பல முஸ்லிம் பெரியார்களின் பெயர்கள் கண்டு கொள்ளப்படாத சூழல் இன்று உருவாகியுள்ளது.

அறிஞர் சித்திலெப்பை 19 நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக தேசத்தின் நலனுக்காகப் பாடுபட்டார்கள்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர் என்று பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் தெரிவித்தார்.

சித்திலெப்பை நம்பிக்கையாளர் நிதிய நிறுவனம் மற்றும் மஹிய்யாவைப் பள்ளிவாசல் நிர்வாக சபையினர் அனுசரணையுடன் தேசிய சுதந்திரத்திற்காக பாடுபட்ட பெரும் அறிஞர் சித்திலெப்பையின் 133 ஆவது சிரார்த்ததினம் கண்டி மஹிய்யாவை ஜாமிஉல் ஹைராத் காட்டுப் பள்ளி மையவாடியில் அவரது நினைவு அறைக்கு அருகில் விசேட வைபவம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய பேராசிரியர் கலாநிதி எம். எஸ். எம். அனஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,...

தனது முஸ்லிம் நேசன் பத்திரிகையில் ஆங்கில ஆட்சியாளரை விமர்சித்தார். ஊழல்களை அம்பலப்படுத்தினார்.

1880 களில் இலங்கையின் விடிவுக்காக குரல்கொடுத்த முன்னோடி நாட்டுப்பற்றாளர் சித்திலெப்பை. இலங்கை அரசியலில் முஸ்லிம்கள், சிறுபான்மை மக்கள் பற்றி அப்போதே சிந்தித்து செயலாற்றிய பெரும் தலைவர்.

அதனால் தான் அவரையும் அவர் தேசத்திற்கும் சமூகத்திற்கும் செய்த சேவைகளையும் வெளிப்படையாக காட்ட வேண்டிய காலம் இது.

## யானை தாக்கி விவசாயி பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கஹடகஸ்திகிலிய முகிரியாவ பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கஹடகஸ்திகிலிய பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (07) நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றுமொரு விவசாயி கஹடகஸ்திகிலிய வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் 48 வயதுடைய கஹடகஸ்திகிலிய முகிரியாவ அளுத்வெவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட நபரொருவரே உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, முகிரியாவ பகுதியிலுள்ள சேனையொன்றில் 15 அடி உயரத்தில் கொட்டிலொன்றை அமைத்து அதில் காவல் காத்துக் கொண்டிருக்கும் போது சேனைக்குள் உட்புகுந்த இரண்டு யானைகள் கொட்டிலை உடைத்து இருவரையும் தாக்கியுள்ளது. அதில் ஒருவர் சம்பவயிடத்திலேயே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை கஹடகஸ்திகிலிய பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தென் மாகாணத்தில் 13,000 பேருக்கு கொரோனா தடுப்பூசி

**வெலிகம தினகரன் நிருபர்**

தென் மாகாண சுகாதார சேவை அலுவலகத்தில் பணிபுரியும் சுமார் 13,000 பேருக்கு இதுவரை கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக தென் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்தியர் ஷந்திம சிறிதுங்க தெரிவித்தார்.

காலி,மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்ளிலுள்ள மத்திய அரசு மற்றும் தென் மாகாண வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் மக்கள் சுகாதார அதிகாரிகள் உட்பட அலுவலகப் பணியாளர்கள் என 13,000 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அடுத்த சில தினங்களில் மேலும் 5,000 பேருக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.





73 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அக்குறணை பிரதேச செயலகத்தினால் ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளிலும் மரம் நடுகை மேற்கொள்ளும் வேலைத் திட்டத்தின் கீழ் அக்குறணை கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் விளையாட்டு அரங்கு மண்டபத்திற்கு அருகில் மரம் நடுகை வைபவம் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக அக்குறணை பிரதேச சபையின் உறுப்பினர் சௌராஜ், எஸ். டி. ஓ மற்றும் ஓ. ஏ. யூ அங்கத்தவர்களும் கலந்து கொண்டதை படங்களில் காணலாம்.


2021.02.07 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 591,208
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 24,405,750.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 27
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2686 சீட்டிழுப்பு திகதி 07/02/2021
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 03 11 25 29

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 157 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 333 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 8,218 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 5,368 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 135,276 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 24,842 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 174,202
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,585,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,758,470.40
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

வாசனா சம்பத
Vasana Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1663
திகதி 2021.02.07
வெற்றி இலக்கங்கள் C
அன்றும் இன்றும் வீரன்
வெற்றி இலக்கங்கள் 36 49 52 57

| பரிசு | பரிசுக்கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 1,000,000/- | - |
| 02 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000/- | 03 |
| 03 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 2,000/- | 54 |
| 04 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500/- | 124 |
| 05 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 100/- | 3,014 |
| 06 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 60/- | 1,915 |
| 07 ஆம் பரிசு | 1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின் | 20/- | 46,795 |
| 08 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின் | 20/- | 7,736 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,976,920.00
அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு ரூ. 26,647,453.40
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 2021/02/07
சீட்டிழுப்பு இலக்கம் - 428
C ஆங்கில எழுத்து
11 13 67 73 வெற்றி இலக்கங்கள்

| | கட்டமைப்பு | பரிசுகள் | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 90 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 183 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4,626 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 3,074 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 78,259 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 14,711 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா 3,259,440.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை 100,946
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ.80,619,958.00
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

சீட்டிழுப்பு இலக்கம் 4391 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 2021-02-07
வெற்றி எழுத்து U வெற்றி இலக்கங்கள் 0 0 5 2 6 2
பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 0 0 5 2 6 2 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 0 5 2 6 2 | ரூபா. 100,000/- | 11 |
| 3ஆம் பரிசு | 5 2 6 2 | ரூபா. 10,000/- | 103 |
| 4 ஆம் பரிசு | 2 6 2 | ரூபா. 1,000/- | 1,063 |
| 5ஆம் பரிசு | 6 2 | ரூபா. 100/- | 10,657 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா. 20/- | 105,337 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 0 0 5 2 6 | ரூபா. 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | 0 0 5 2 | ரூபா. 1,000/- | 106 |
| 9ஆம் பரிசு | 0 0 5 | ரூபா. 100/- | 1,124 |
| 10ஆம் பரிசு | 0 0 | ரூபா. 50/- | 10,565 |
| 11ஆம்பரிசு | U | ரூபா. 20/- | 41,817 |


இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ.10,048,430.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,761,077.00
வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 758
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 2021.02.07
ஆங்கில எழுத்து C சுப்பர் இலக்கம் 19 வெற்றி இலக்கங்கள் 04 07 27 68

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 66 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 172 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4,027 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2,662 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 66,606 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12,089 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 65,318,872.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,118,860.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 32,050,433.60
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,535,080.00
தேசிய லொத்தர் சபை

# சிறு விளம்பரம்





மோட்டார் வாகனங்கள்



122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

WP AAI-0173 Bajaj, 2013, WP AAV-4305 Bajaj, 2014, threew heel கூ டிய விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 009497

WP BIG-0912 Yamaha FZ, 2019 motor cycl e கூடிய விலை க்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 009500



117

வேன்கள்

விற்பனைக்கு

SP GZ-0722 Nissan Serena, 1995, கூடிய விலைக்கு . வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழு ம்பு 03. தொ. பே: 071 454 2958. 009492

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டம்**
**(460ஆம் அத்தியாகம்)**
**39(அ)(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இலக்கம்:- DER/LAN/LAQUI/A1/05
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு
கோவை இலக்கம்:- LD/05/2010/VE/74

ஒரு பொது விடயத்திற்காக அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்து துண்டுகள் 39(அ)(1)ஆம் பிரிவின் கீழ் உரித்து நீக்கம் செய்யும் அறிவித்தல் 2092/17 இலக்க 2018.10.09ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்பிரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலகப் பிரிவு | : தரணியகலை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இலக்கம் 14ஈ தரனியகலை தெற்கு |
| கிராமத்தின் பெயர் | : தரணியகலை தெற்கு |
| காணியின் பெயர் | : பலாதெணிய வத்த |
| வரைபட இலக்கம் | : KE/DRN/2010/149 |
| காணித்துண்டு இலக்கம் | : 01, 02 |

மேலதிக விபரங்களிற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**ஐ.கே.ஆர்.எஸ். பண்டார மெனிகே,**
**பிரதேச செயலாளர்**
**தரணியகலை.**

**2021.01 மாதம் 08ஆம் திகதி**
**தரணியகலை பிரதேச செயலகத்தில்**

## விமைனுக்களுக்கான அழைப்பு (IFB)

**தொழில் திணைக்களம் - கொழும்பு - 05**

### 2021/ ஆம் ஆண்டிற்கான தூய்மைப்படுத்தல் சேவைகளை வழங்குவதற்காக சேவை வழங்குநரொருவரை தெரிவு செய்தல்.

**FG/TB/JANI.SER./2020**

1. 2021 ஆம் ஆண்டிற்காக தூய்மைப்படுத்தல் சேவைகளின் பெறுகைக்காக தொழில் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் அடக்கப்பட்டுள்ளன.

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் நிறுவகமொன்றில் ஆகக் குறைந்தது 30 எண்ணிக்கையான ஊழியர்களை வேலைக்கமர்த்தும் ஒருவராகவும் தூய்மைப்படுத்தல் சேவைகளை வழங்குவதில் 5 வருட அனுபவத்கையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112581393 என்ற தொலைபேசி எண்ணினூடாக கொழும்பு-05, ''மெஹேவர பியச'', 9 ஆம் மாடி, தொழில் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று 2021.02.10 ஆம் திகதியிலிருந்து 2021.03.03 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், 2021.03.03 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-05, ''மெஹேவர பியச'', 9 ஆம் மாடி, தொழில் திணைக்கள நிதிப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
(பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்)

6. விலைமனுக்கள் 2021.03.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்), நிதிப் பிரிவு, 9 ஆம் மாடி, ''மெஹேவர பியச'', கொழும்பு-05, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-05, தொழில் செயலக கட்டிடம், தொழில் திணைக்களம், 3 ஆம் மாடி, நிருவாகத்திற்கான மேலதிக தொழில் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், கொழும்பு-05, தொழில் செயலக கட்டிடம், தொழில் திணைக்களம், 3 ஆம் மாடி, நிருவாகத்திற்கான மேலதிக தொழில் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

7. VII ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு, 42,800 ரூபா தொகைக்கானதும் 2021 மே 20 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு-05.**

## இலங்கை புகையிரத சேவைகள்

### பெறுகை அறிவித்தல்

கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு சரக்கு களஞ்சிய கட்டிடத் தொகுதியில் பின்வரும் புகையிரத சரக்கு களஞ்சியப் பெருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக 02 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | களஞ்சிய இலக்கம் | அளவு (ச.அடி) |
|---|---|---|
| 01 | C1-B3 | 700 |
| 02 | C1-E | 2448 |
| 03 | C1-F | 3744 |
| 04 | C1-G | 1872 |
| 05 | C2-C | 3840 |
| 06 | C2-F2/C2-F3 | 3400 |

விலைக்கோரல் ஆவணங்கள் 2021 மார்ச் மாதம் 02ஆம் திகதி பி.ப. 2.00 மணி முதல் விநியோகிக்கப்படும் என்பதுடன், மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை புகையிரத தலைமையகம், பிரதான நிதி அதிகாரிக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பெற்றுக்கொள்ளப்படும் விலைக்கோரல் ஆவணங்களில் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒருவர் பல களஞ்சியசாலைகளுக்கு விண்ணப்பிப்பதானால் அதன் பொருட்டு வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2021 மார்ச் மாதம் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

2021 மார்ச் மாதம் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ள முடிவுறுத்தப்படும் என்பதுடன், அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் மாத்திரம் கலந்து கொள்ளலாம். கேள்விகளைக் கையளிப்பது தொடர்பிலான இறுதித் தீர்மானம் புகையிரதத் திணைக்கள பெறுகைக் குழு (பிரதான) தன்னகத்தே கொண்டுள்ளது.

வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையான காலத்தினுள் புகையிரத சேவைகள் தலைமையக பிரதி அத்தியட்சகர் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல்) அவர்களைச் சந்தித்து களஞ்சியசாலையைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான நேரமொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பிரதான),**
**வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள் தலைமையகம்,**
**கொழும்பு-10**

**தொலைபேசி இல. 0112431909**

**கைத்தொழில் அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்

### WHIMS இயந்திராதி ஃபோர்க்லிப்ட் மற்றும் மின்சார பெனல் போர்ட்களின் கொள்வனவு

01. கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறாக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் சார்பாக, திணைக்களப் பெறுகைக்குழுத் (DPC) தலைவர் அழைக்கின்றார்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறை ஊடாக விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

| விலைமனு எண் | பொருட்களின் விபரம் | ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) | விலை மனுப் பிணை (ரூ) | குறித்த திகதி வரை செல்லு படியாகும் விலைமனுப்பிணை | குறித்த திகதி வரை செல்லு படியாகும் விலைமனு | விலைமனு திறப்பு திகதி மற்றும் நேரம். |
|---|---|---|---|---|---|---|
| LMSL/SUP/DPC/05/2020 | யான் ஓயா Intake Site தொடர்பாக LV பெனலின் (Panel) வடிவமைப்பு, வழங்கல், ஒப்படைப்பு, நிறுவல் மற்றும் இயக்கம். | 2,000.00 | 30,000.00 | 2021.05.17 | 2021.05.03 | 2021.03.02 02.00 மணிக்கு |
| LMSL/SUP/DPC/14/2020 | புதிய "A" புளொக் பொறித் தொகுதி தொடர்பாக மின்சார மோட்டார் கட்டுப்பாட்டுப் பெனலின் வடிவமைப்பு வழங்கல் மற்றும் ஒப்படைப்பு | 2,000.00 | 40,000.00 | 2021.05.17 | 2021.05.03 | 2021.03.02 14.30 மணிக்கு |
| LMSL/SUP/DPC/12/2020 | கட்டுப்பாட்டு பெனல்போர்ட் உடன் கூடிய Wet High Intensity Magnetic Separator ஐ வடிவமைத்து வழங்கி, நிறுவி மற்றும் இயங்கச் செய்தல் | 15,000.00 | 700,000.00 | 2021.06.14 | 2021.05.31 | 2021.03.02 15.00 மணிக்கு |
| LMSL/SUP/DPC/02/2021 | புல்மோட்டை பொறித்தொகுதிக்கு ∴போர்க்லிப்டை வழங்கி, ஒப்படைத்து, இயங்கச்செய்து மற்றும் ஒப்படைத்து | 3500.00 | 100,000.00 | 2021.06.01 | 2021.05.17 | 2021.03.02 15.30 மணிக்கு |

03. ஆர்வங்காட்டும் தகுதியுள்ள விலைமனுதாரர்க்கு, இராஜகிரியா, சரண மாவத்தை, 341/21, இலங்கை கனிப்பொருள் மணல் சபையின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி முதல் 2021 மார்ச் 01ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாட்களிலும், 09.00 மணிமுதல் 14.00 மணிவரை, அதே முகவரியில் விலைமனுக் கோரும் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 011-2882025/2883951/2883951.

04. வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்திற்கு ஒரு எழுத்துருவிலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதன் மூலம், 2021 பெப்ரவரி 09ஆம் திகதி முதல் 2021 மார்ச் 01ஆம் திகதிவரை, 9.00 மணிமுதல் 14.00 மணிவரை, ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரும் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். குறித்த கொடுப்பனவு முறையானது, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் நிதிப்பிரிவு காசாளர் கருமபீடத்திற்கு ரொக்கப்பணமாக செலுத்துவதேயாகும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் பிரதிகளாக, 2021 மார்ச் 02ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "மூலப்பிரதி" மற்றும் நகல் "பிரதியென" குறிக்கப்பட்ட பிரத்தியேக தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, அவை பின்வருமாறு தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது இராஜகிரியா, சரண மாவத்தை, 341/21, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட், திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரிற்கு, முகவரியிடப்பட்டு LMSL இன் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. LMSL இன் விலைமனுத்திறப்புக் குழுவினால் மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறாக, விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. அனைத்து விலைமனுக்களும், கீழேயுள்ளவாறான விலைமனுப் பிணையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- விலைமனுக்கோரும் ஆவணத்தின் 3ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள உருவகத்திலானது
- இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் பெயரிலானது
- விலைமனுக் கோரும் தரவுச்சீட்டின் 20.1 துணைவாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரொருவரால் வழங்கப்பட்டிருத்தல்

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரியா**

## விலைமனுக் கோரல்

**காணி முகாமைத்துவ அலுவல்கள் அரச தொழில் முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

### இலங்கை நில அளவைத் திணைக்களம்

### 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க காணி உரித்துப் பதிவுச் சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நில அளவைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கடத்திரள் அளவைகள் மேற்கொண்டு வரைபடங்களையும், கிடைப்படங்களையும் தயாரித்தல் - 2021

**விலைமனு இலக்கம் - SG/2021/01**

01. இலங்கை நிலஅளவைத் திணைக்களம் சார்பாக நிலஅளவையாளர் நாயகத்தால் 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க காணி உரித்துப் பதிவுச்சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நிலஅளவைச்சட்டம் ஆகியவற்றின் கீழ் அளவைகள் மேற்கொண்டு கடத்திரள் வரைபடங்களையும், கிடைப்படங்களையும் தயாரிப்பதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக நாட்டின் சகல பதிவுசெய்யப்பட்ட உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்களுக்கும் அழைப்பு விடப்படுகிறது.

02. விலைமனுக் கோரல் தேசிய போட்டித்தன்மைமிக்க விலைமனுக்கோரும் நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்படும்.

03. ஆர்வம் காண்பிக்கும் விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரலின் கேள்விப்பத்திரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும், விபரக்கூற்றுகள், தொடர்புடைய ஏனைய ஆவணங்கள் முதலியவற்றை **www.survey.gov.lk** எனும் திணைக்கள இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

04. கேள்விப்பத்திரம் அனுப்பும்போது இலங்கைத் தீவின் கீழ் 5ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்காக மீளச் செலுத்தப்படாத கட்டணமாக ரூ. 500/= தொகையை நாட்டிலுள்ள எந்தவொரு மாவட்ட, மாகாண நிலஅளவை அலுவலகத்தில், தியதலாவை நிலஅளவை மற்றும் படமாக்கல் நிறுவனத்தில் அல்லது நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியை அதனுடன் இணைத்தனுப்புதல் வேண்டும். ஒரு விலைமனுதாரருக்கு ஆகக்கூடியது ஐந்து மாவட்டங்களுக்கு மாத்திரம் வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவதுடன், அவற்றுக்காக வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் ஒருதடவையில் ஒரு பிரிவுக்கான அளவைப்பணிகள் மாத்திரம் வழங்கப்படுவதுடன் அதைப் பூர்த்திசெய்து கிடைப்படங்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மட்டுமே அடுத்த வலயத்துக்கான வேலை வழங்கப்படும்.

05. கேள்விப்பத்திரம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்ட, குருநாகல், புத்தளம், கண்டி, மாத்தளை, நுவரெலியா, அனுராதபுரம், பொலன்னருவை, மொனாரகலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்காக சமர்ப்பிக்கலாம் அத்துடன் கொழும்பு, அனுராதபுரம் மற்றும் பொலன்னருவை மாவட்டங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படும்.

06. விலைமனுப் பிணைக்கட்டணம் ரூபா அறுபதாயிரம் (ரூ.60,000.00) ஆகும்.

07. உரிய படிவத்துக்கமைய முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2021.03.02 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவஞ்சலில் அனுப்பவோ அல்லது பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கிளையில் வைக்கப்பட்டுள்ள குறித்த கேள்விப்பத்திரப் பெட்டியில் போடவோ முடியும், கேள்விப்பத்திரங்கள் உள்ளடக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் ''.............. மாவட்டத்தின் கடத்திரள் வரைபடங்கள் தயாரிப்பதற்கான விலைமனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் அத்தினமே மு.ப. 10.05 க்குத் திறக்கப்படும்,

08. கேள்விப்பத்திரங்களை அனுப்பவேண்டிய முகவரி தலைவர், பெறுகைகள் குழு, பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கிளை நில அளவையாளர் நாயகம் அலுவலகம், இல: 150, கிருள வீதி, கொழும்பு 05,

09. தாமதமாய்க் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்,

**தலைவர்,**
**பெறுகைகள் குழு,**
**பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கிளை,**
**நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,**
**இல: 150, கிருள வீதி,**
**கொழும்பு 05.**

# வவுனியா வர்த்தகர்களுடன் இந்திய துணைத்தூதுவர் சந்திப்பு

*வவுனியா விசேட நிருபர்*



வவுனியா வர்த்தகர்களுடன் யாழ்.இந்திய துணைத்தூதுவர் எஸ். பாலச்சந்திரன் சந்தித்து கலந்துரையாடினார். வவுனியா மில் வீதியில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்து எவ்வாறான வியாபார நடவடிக்கையினை முன்னெடுக்க முடியும் மற்றும் அதற்குரிய ஆலோசனைகள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்களுக்கான இலவச பயிற்சி நெறிகளை இந்தியாவிற்கு சென்று மேற்கொள்ளுவதற்கான புலமைப்பரிசில்களை வர்த்தக சங்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளல், வர்த்தகர்கள் நலன்சார் பல்வேறு திட்டங்களை முன்வைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் யாழ்.இந்திய துணைத்தூதுவரின் பிரதிநிதிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



யாழ்.புங்குடுதீவு பத்திக் தொழிற் பயிற்சி நிலையத் திறப்பு விழாவின் போது வட மாகாண ஆளுநர் சாள்ஸ், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவுக்கு நினைவுப் சின்னத்தை கையளிப்பதை படத்தில் காணலாம்.

## கிளிநொச்சியில் பாடசாலைக்கு

# நிரந்தர அதிபரை நியமிக்க கோரி கவனயீர்ப்பு போராட்டம்



*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சி யூனியன் குளம் பாடசாலைக்கான அதிபரை நியமிக்கக் கோரி பாடசாலை நுளைவாயிலை மூடி நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட மிகவும் பின் தங்கிய கிராமத்தில் அமைந்துள்ள யுனியன் குளம் பாடசாலைக்கு கடந்த 8 வருடங்களுக்கு மேலாக நிரந்தர அதிபர்கள் எவரும் நியமிக்கப்படாமல் இருப்பதாக பல தடவைகள் பெற்றோர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பாக முன்னரும் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டு கோரிக்கை கடிதங்கள் அனுப்பட்ட போதும் இதுவரை அதிபர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. இந் நிலையில் நேற்று காலை இப் பாடசாலைக்கு நிரந்தர அதிபரை நியமிக்க கோரி பெற்றோர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காலை பாடசாலை ஆரம்ப நேரத்தில் பாடசாலை நுழைவாயிலை மூடி பேராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி தற்காலிகமாக அதிபர் ஒருவரை நியமிப்பதாக உறுதியளித்ததை தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

# நெடுந்தீவின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யக் கோரிக்கை

*சாவகச்சேரி விசேட நிருபர்*

யாழ். மாவட்டத்தின் நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள பிரதான சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்து அவற்றின் தனித்துவத்தை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அண்மையில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் தலைமையில் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தினர் மேலும் கூறுகையில்,

வடக்கு மாகாணத்தில் அதிக சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இடமாக நெடுந்தீவு அமைந்துள்ளது. ஆகையால் இங்கு காணப்படும் பிரதான சுற்றுலா மையங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், சுற்றுலா மையங்களின் விபரணங்கள் மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில் நெடுந்தீவுப் பிரதேசத்தின் பிரதான சுற்றுலா மையங்களாக பெருக்கு மரம், அனுமான் பாதச் சுவடு, வளரும் கல், குதிரை லயம், குதிரைகள், புறாக்கூடு, மருத்துவக்கேணி, குயிந்தா கோபுரம் மற்றும் வெடியரசன் கோட்டை ஆகியன காணப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

# கிராமங்களில் சமுர்த்தி வங்கிகள் நிறுவப்படும்

## சமுர்த்தி பொது முகாமையாளர் திலகசிறி

*தலைமன்னார் விஷேட நிருபர்*



கிராமப் புறங்கள் தோறும், சமுர்த்தி வங்கிகள் நிறுவப்பட்டு, வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களை நுண் நிதி நிறுவனங்களிடம் இருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என சமுர்த்தி பொது முகாமையாளர் ஆர்.பி.பி. திலகசிறி தெரிவித்தார்.

மன்னார் நகர் மத்தி சமுர்த்தி வங்கி கணனி மயப்படுத்தல் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மன்னாரில் சமுர்த்தி திட்ட நடைமுறைகளைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இங்கு இது நடைமுறைகளை மேற்கொள்ளுகின்ற விதம் இதற்கு உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் மேலதிகாரிகள் எடுத்து வருகின்ற அக்கறைகள் யாவும் பிரமாதமாக இருப்பதில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இவ்வாண்டு மேற்கொள்ளப்பட இருக்கின்ற வாழ்வாதார செயல் திட்டங்களை மேற்கொள்ளும் நோக்கம் கொண்டே கடந்த ஆண்டு எமக்கு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. கடந்த ஆண்டு கொரோனா பாதிப்பு இருந்தமையால் இதன் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம்.

இவ்வாண்டு எமக்கு பெருந்தொகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதனால் வாழ்வாதாரத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதனை கருத்திற் கொண்டே இக் கூட்டம் நடந்து கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தில் கிராமிய அபிவிருத்திக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கிராமம் கிராமமாகச் சென்று மக்களுடன் கருத்துப் பரிமாற்றத்தில் அபிவிருத்தி தொனிப்பொருளில் ஈடுபட்டு வருகின்றார்.

இவ்வாறு பிரதமர் ராஜபக்ஷ மற்றும் எமது அமைச்சுக்கு பொறுப்பான பசில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து எமக்கு அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடுகளை செய்து வருகின்றனர். அத்துடன் வறுமை ஒழிப்புக்கென ஜனாதிபதி செயலணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பசில் ராஜபக்ஷ வறுமை ஒழிப்புக்கான திட்டங்களையும் தற்பொழுது தீட்டிக் கொண்டிருக்கின்றார். அனுராதபுரம் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் இராஜாங்க அமைச்சர் ஆகியோர்களின் ஆதரவில் நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம் என்றார்.

# கொள்ளையில் ஈடுபட்ட கும்பலொன்று 24 மணி நேரத்தில் பொலிசாரால் கைது

*யாழ்ப்பாணம் குறூப் நிருபர்*



யாழ். கோண்டாவில் பகுதியில் வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்டவர்கள் என சந்தேகிக்கப்பட்ட கும்பலொன்று சம்பவம் இடம்பெற்று 24 மணி நேரத்தில் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கோண்டாவில் செபஸ்ரியன் வீதியில் உள்ள வீடொன்றில் புகுந்து வீட்டில் உள்ளவரை காயப்படுத்தி 6 பவுண் தாலிக் கொடியினை அபகரித்து சென்ற குற்றச்சாட்டில் மூவர் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டினை யாழ்.மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிப்புரைக்கமைய மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரிடம் விசாரணை ஒப்படைக்கப்பட்டது.

குற்றத்தடுப்பு பொறுப்பு பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான பொலிஸ் அணியினர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் வீட்டில் இருந்து அபகரிக்கப்பட்ட தாலிக்கொடி கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரின் வீட்டு மலசல குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மற்றொரு சந்தேகநபரின் வீட்டிலிருந்து இரண்டு பெரிய வாள் மற்றும் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

# கிளிநொச்சி ஆடை தொழிற்சாலை ஊழியர் சிலருக்கு கொரோனா

*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரும் தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் பணியாளர்கள் சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுடன் பணியாற்றிய ஏனைய ஊழியர்கள் நேற்று கடமைக்கு சென்ற நிலையில் அவர்கள் தமது அச்சத்தினை தமது அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். இருப்பினும் அதனை கவனத்தில் எடுத்துக் கொள்ளாத குறித்த ஆடைத்தொழிற்சாலையின் நிர்வாகம் தொடர்ந்தும் சேவையாற்றுமாறு வற்புறுத்தியுள்ளனர். இதனால் அங்கு அமைதி இன்மை ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக அங்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுரைகளை வழங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது. இந்நிலையில் குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பலரும் தொழிலின் நிமித்தம் செல்கின்றனர்.

இதனால் மாவட்டத்தின் பாதுகாப்பினை கருத்தில்கொண்டு தொழிற்சாலை நிர்வாகம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்ற கோரிக்கை பொது அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை குறித்த ஆடைத் தொழிற்சாலைக்கு வெளி மாவட்டங்களிலிருந்து உயர் பதவிநிலை ஊழியர்கள் வருகை தருவதால் ஆபத்தான நிலை காணப்படுவதாகவும் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதற்கு அமைவாக சம்மந்தப்பட்டவர்களும், சுகாதார துறையினரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சௌபாக்கியா திட்டத்தின் கீழ் முல்லையில் குளங்கள் புனரமைப்பு



*புதுக்குடியிருப்பு*

ஜனாதிபதியின் சௌபாக்கிய கொள்கையின் கீழ் நாடாளவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் நீர்ப்பாசன செழிப்பு எனும் 5000 கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 குளங்கள் புனரமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட திருமுறுகண்டிக் குளம் புனரமைப்பு அங்குராப்பண நிகழ்வு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் நாயகம், உள்ளிட்ட முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், கமநல சேவை திணைக்கள மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உயர் அதிகாரிகள், திட்டமிடல் பணிப்பாளர், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோரோடு கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இத் திட்டத்திற்காக ஆறு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆங்கில மருத்துவத்தால் முடியாத முறிவுகளுக்கு சிகிச்சையளிக்கும்

# ஆயுர்வேத வைத்தியர் பறுனாந்து அன்ரனி







ஆங்கில மருத்துவம் உலகம் முழுவதும் வியாபித்திருந்தாலும் எங்கோ ஒரு மூலையிலாவது எமது முன்னோர்கள் சொல்லித் தந்த சித்த மருத்துவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்களையும் அவர்களின் மருத்துவ முறையையும் ஆங்கில மருந்துகளும் மருத்துவ முறைகளும் மறக்க செய்தாலும் நவீன மருத்துவ முறைகளே கைவிட்ட சில நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் நிவாரணம் கிடைத்துள்ளன.



மன்னார் காத்தான் குளப்பகுதியில் தான் பாரம்பரியமாக கற்றுத் தேர்ந்த சித்த மருத்துவதுறையை பாதுகாத்து இன்றும் வைத்தியசாலைகளால் குணப்படுத்த முடியாமல் போன பல விதமான எலும்பு முறிவுகள், தறிவு நோவுகள், உடைவுகளை சுகப்படுத்தி வருகின்றார் பறுனாந்து அன்ரனி.

இயற்கையான மூலிகைகள் மற்றும் அழிவின் விழிம்பில் உள்ள மூலிகைகளை பாதுகாப்பதுடன் அவ்வாறான மூலிகைகளை இயற்கையான முறையில் பதப்படுத்தி மருந்துகளை தயாரித்து சிகிச்சை மேற்கொண்டு வருகின்றார் அன்ரனி.

மக்களின் நிலைக்கு ஏற்ப குறைந்த கட்டணங்களுக்கு சிகிச்சை அளிப்பதாலும் இயற்கையான முறையில் சிகிச்சை மேற்கொள்வதாலும் மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் இல்லாமல் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் அன்ரனியிடம் சிகிச்சை பெறுவதற்காக மக்கள் வருகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது பல்வேறு இழப்புக்களை சந்தித்த அன்ரனி தன்னுடைய தாயையும் தான் பாரம்பரியமாக கற்று வந்த மருத்துவ குறிப்புக்கள், ஏடுகள், புத்தகங்களை கூட காப்பாற்ற முடியாத சூழ்நிலையில் இடப்பெயர்வை சந்தித்துள்ளார்.

அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் ஆயுர்வேத பாதுகாப்பு சபையினால் நடத்தப்பட்ட பயிற்சியினை நிறைவு செய்து தற்போது வரை ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தை நடத்தி வருவதுடன் இலங்கையில் உள்ள மூலிகை தோட்டங்களில் ஆயுர்வேதம் கற்கின்ற மாணவர்களுக்கு மூலிகை தொடர்பாக விரிவுரைகளையும் மேற்கொண்டு வருகின்றார். இவருடைய சேவையை பாராட்டி இவருக்கு 'தேச கீர்த்தி' விருதும் வழங்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இவை எல்லாம் கடந்து நவீன மருத்துவ முறை காரணமாகவும் குடியேற்ற பிரச்சினைகள் காரணமாகவும் அதிகளவான மூலிகை இனங்கள் அழியும் நிலையில் உள்ளதாகவும் ஆயுர்வேத மருத்துவர்களும் அவர்களுடைய மருத்துவ முறைகளும் அழிவு நிலையில் உள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

எனவே அனைவரும் மூலிகைகளை பாதுகாக்க முன்வர வேண்டும் எனவும் சித்த மருத்துவ துறையை ஊக்குவிக்க வேண்டும் எனவும் மூலிகைகள் தொடர்பாக பிள்ளைகளுக்கு கட்டாயம் கற்பிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆங்கில மருத்துவமுறை காரணமாக சித்த மருத்துவ முறை அழிவுப்பாதையில் செல்வதனால் அவற்றை பாதுகாக்க அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கைவிடுத்துள்ளார்.

**எஸ்.ஆர்.லெம்பேட்**
*மன்னார் குறூப் நிருபர்*

# இடைத்தரகர்களின் சுரண்டல்களால் மீனவர்களுக்கு பலன் கிடைக்கவில்லை

## அகிலன் கதிர்காமநாதன் சுட்டிக்காட்டு

*பருத்தித்துறை விசேட நிருபர்*

யாழ். மாவட்டத்தின் முதன்மையான ஏற்றுமதிப் பொருளாக கடலுணவுகள் காணப்படுகின்ற போதிலும், இடைத் தரகர்களினால் சுரண்டப்படுதல் போன்ற சில காரணங்களினால் கடற்றொழிலாளர்களுக்கு பூரணமான பலன் கிடைக்கவில்லை என பொருளியல் ஆய்வாளர் கலாநிதி அகிலன் கதிர்காமநாதன் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழில், நீர் வேளாண்மை தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளக் கூடிய வேலைத் திட்டங்கள் மற்றும் புரெவிப் புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் ஆராய்வதற்காக யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மாவட்டத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற கடலுணவுகளை கொண்டு செல்வதற்கான செலவையும் நேரத்தினையும் குறைப்பதுடன் நவீன தொழில்நுட்பத்தினையும் உள்வாங்கும் நோக்குடன் கொழும்பிற்கான புகையிரதத்தில் குளிரூட்டி பெட்டி ஒன்றை இணைத்துக் கொள்வது சிறப்பானதாக இருக்கும் என்ற முன்மொழிவும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், கடற்றொழில் சமாசங்களின் ஊடாக கிராமிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், நுண்கடன் திட்டத்திலிருந்து கடற்றொழில் சார் குடும்பங்களைப் பாதுகாக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பு, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரண்டு அமைப்புக்கள் செயற்பட்டுக் கொண்டிருப்பதனால் கடற்றொழிலாளர்கள் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்வதால் இரண்டு அமைப்புக்களும் ஒரு அமைப்பாக மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

# புனரமைக்கப்படாத நிலையில் நெடுந்தீவில் 36 கிலோ மீட்டர் வீதி

*பரந்தன் குறூப் நிருபர்*

யாழ். நெடுந்தீவு பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான நெடுந்தீவின் பிரதான வீதி உள்ளடங்கலாக 36 கிலோ மீட்டர் நீளமான வீதிகளை புனரமைப்பதற்கு சுமார் 2013 மில்லியன் ரூபா நிதி தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படுகின்ற நெடுந்தீவு பிரதேசத்தில் மாவிலித்துறை முதல் கோட்டைக்காடு வரைக்குமான சுமார் 7.4 கிலோ மீற்றர் பிரதான வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. இதனால் இந்த வீதியை பயன்படுத்தும் மக்கள் பெரிதும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேற்படி பிரதான வீதியானது புனரமைப்பு பணிகளுக்காக கடந்த காலங்களில் தெரிவு செய்யப்பட்ட போதும் இறுதியில் புனரமைக்கப்படாது கைவிடப்பட்டதாக செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது வீதியில் நான்கு கிலோமீட்டர் வீதி புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தங்களும் செய்யப்பட்டுள்ள போதும் இதுவரை எந்தவிதமான வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கைவிடப்பட்ட நிலையில் வவுனியா வடக்கில் இரு அரச பாடசாலைகள்

*பரந்தன் குறூப் நிருபர்*



வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பெருந்தொகை நிதியில் அமைக்கப்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டு பற்றைக் காடுகள் மண்டி காணப்படுகின்றன. கடந்த 1991ம் ஆண்டுக்குப் பின்னரான யுத்த சூழ்நிலைகளால் மூடப்பட்ட பாடசாலைகள் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறியதையடுத்து இயங்க ஆரம்பித்தன.

இந்நிலையில் வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கோழிய குளம் பாடசாலை மற்றும் வாருடையார் இலுப்பைக்குளம் பாடசாலை என்பன சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கிய நிலையில் அவற்றுக்கான நிரந்தர வகுப்பறை கட்டடங்கள் மலசலகூட வசதிகள் குடிநீர் வசதிகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. மேற்படி பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டமையால் தற்போது இந்த பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைகள் இவ்வாறான நிலையில் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் குறித்து கவனம் எடுக்க வேண்டும்

*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி பச்சிலைபள்ளி பிரதேசத்தில் புகையிரத வீதியை குறுக்கறுத்துச் செல்லும் வீதிகளின் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் தொடர்பாக உடன் கவனம் எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைபள்ளி பிரதேசத்தின் இந்திராபுரம் வீதி, மற்றும் பறவைக்குள வீதி நரசிம்ம வைரவர் வீதி போன்றவற்றுக்கு புதிதாக கடவை அமைக்க வேண்டும் என்றும் முகமாலை பிரதான வீதி, சின்னதாளையடி வீதி தர்மக்கேணி வீதி, வேம்போடுகேணி கச்சார்வெளி இணைப்பு வீதி போன்ற இடங்களில் உள்ள வீதிக்கடவைகள் பாதுகாப்பான கடவைகளாக மாற்ற பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# உவர்நீர் தாக்கத்தால் பாதிப்படைந்தோருக்கு இழப்பீடு வழங்கப்படாமை குறித்து விசனம்

*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளில் உவர் நீர் உட்புகுந்து பெருமளவான வயல் நிலங்கள் அழிவடைந்த போதும் அதற்கான இழப்பீடுகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னேரிக்குளம் மற்றும் குஞ்சுக் குளம் ஆகிய பகுதிகளில் சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கால போக நெற் செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் கடல் பெருக்கெடுத்தமை மற்றும் உவர்த்தன்மை காரணமாக குஞ்சுக்குளம் தீக்காய் வன்னேரிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நெல் வயல்கள் அழிவடைந்துள்ளன.

இதனால் அழிவடைந்த வயல்களுக்கு இழப்பீடு எதுவும் வழங்கப்படுவதில்லை என்றும் இதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தனது வயல் நிலங்களை உவர்நீர் அழிவுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் உவர்நீர்த் தடுப்பணை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்ற போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தடுப்பணைகள் அமைக்கப்படாத நிலையில் பாதிக்கப்படும் தமக்கு நட்டஈடுகளை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆயர் இல்ல காணிகள் மக்களுக்கே வழங்கல்

*மன்னார் குறூப் நிருபர்*



மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பூமலந்தான் கிராமத்தில் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான காணியில் வாழ்ந்து வந்த 11 குடும்பங்களுக்கு அக் காணிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் இந் நிகழ்வு நடைபெற்றது. காணிகளுக்கான உறுதிப்பத்திரம் காணிகளில் வாழ்து வந்தவர்களின் பெயரிற்கு மாற்றப்பட்டு வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டன.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பூமலந்தான் கிராமத்தில் மக்கள் மீள் குடியேறி வாழ்ந்து வந்தனர். இப் பகுதியில் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான காணிகளில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் 11 குடும்பங்களுக்கு காணியில் வாழ்ந்து வருபவர்களுக்கு நன்கொடையாக வழங்கி வைக்கும் வகையில் அவர்களின் பெயரில் வழங்க மன்னார் ஆயர் இல்லம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதற்கு அமைவாக மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் உதவியுடன் குறித்த காணிகளுக்கான உறுதி எழுதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

# யாழ். புகையிரத நிலையத்தில் படையினர் துப்புரவு பணியில்

*யாழ்ப்பாணம் குறூப் நிருபர்*



டெங்கு மற்றும் கொரோனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நேற்று இராணுவத்தினரால், துப்புரவு பணி முன்னெடுக்கப்பட்டதுடன், கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாத வகையில் கிருமித் தொற்று மருந்தும் விசிறப்பட்டது.

யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி பிரியந்த பெரோராவின் பணிப்புரைக்கு அமைவாக, யாழ். 512வது படைப்பிரிவின் பிரிகேடியர் தலைமையிலான ,இராணுவ அதிகாரிகள் தலைமையில், இராணுவ சிப்பாய்களினால் இந்த துப்புரவு பணி முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் புகையிரத அதிபர் பிரதீபன் மற்றும் இராணுவ கட்டளை அதிகாரிகள் எனப் பலர் மேற்பார்வையிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தாய்த்திரு நாட்டின் சுதந்திரமும் இலங்கை நாயகி திருவிழாவும்



நாட்டின் சுதந்திர தினத்தன்று கொண்டாடப்படும் அன்னை இலங்கை நாயகியின் திருவிழா இம்முறை கடந்த ஞாயிற்றுக்கிழமை 7ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 12.30 மணிக்கு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இலங்கை நாயகியின் வருடாந்த திருவிழா தேவத்தை பெசிலிக்கா பேராலயத்தில் சிறப்புத் திருப்பலியுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



## ஒரு வரலாற்றுக் குறிப்பு

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் கொண்டாடப்பட்டு வரும் இலங்கை நாயகி திருவிழாவுக்கு சிறந்ததொரு வரலாறு உள்ளது.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற போது அதிலிருந்து எமது தாய் திருநாட்டை பாதுகாக்குமாறு அன்றைய கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மாதாவிடம் மன்றாடினார். அத்துடன் நாட்டை பாதுகாக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் மாதாவிடம் முன்வைத்தார்.

அவ்வாறு நாடும் மக்களும் பாதுகாக்கப்பட்டால் மாபெரும் பெசிலிக்கா பேராலயம் ஒன்றை மாதாவின் பெயரில் நிர்மாணிப்பதாகவும் அவர் வாக்குறுதி யளித்தார்.

ஆண்டவரின் அருள் தாய்த்திரு நாட்டின் மீதும் மக்கள் மீதும் பொழியப்பட்டது. ஆண்டவர் இலங்கை திருநாட்டை எந்தவித பாதிப்புமின்றி காப்பாற்றினார்.

பேராயரின் வேண்டுதல் நிறைவேறியது. மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த அவர், அப்போதைய பாப்பரசர் திருத்தந்தை 12ம் பத்திநாதரிடம் பேராலயம் கட்டுவதற்கான ஒப்புதலையும் பெற்றுக்கொண்டார்.

அதற்கிணங்க 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி பேராலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அதற்கான நிர்மாணப் பணிகள் நிறைவுற நீண்ட காலம் செலவிட்டதுடன் 1974ஆம் ஆண்டு பெப்ரவரி ஆறாம் திகதி தேவத்தை பெசிலிக்கா பேராலயம் அபிஷேகம் செய்யப்பட்டு இலங்கை நாயகிக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

அந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வரும் நிலையில் அன்றைய தினம் இலங்கை நாயகியின் பெருவிழாவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தற்போது இலங்கைத் திருநாடு சுதந்திரம் பெற்று 73 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இக்காலங்களில் எமது நாடு மட்டுமன்றி முழு உலகமும் கொரோனா வைரஸ் பாதிப்பினால் பெரும் அவலங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

இந்தக் கொடிய வைரஸ் தொற்றிலிருந்து எமது நாட்டையும் முழு உலகத்தையும் பாதுகாக்க வேண்டி அன்னை மரியாளை மன்றாடுவோம்.

அன்னை எமக்காக ஆண்டவரிடம் பரிந்து பேசி இனம், மதம், மொழி,பிரதேசம், நாடு என்ற பாகுபாடுகளைக் கடந்து இறைஅன்பில் உலக மக்கள் அனைவரும் ஒரே சகோதரர்கள் போல வாழ அருள் புரிய வேண்டும் என்று மன்றாடுவோம்.

லோரன்ஸ் செல்வநாயகம்...




# அன்னை மரியாளின் திருக்காட்சியை பிரதிபலிக்கும் லூர்து மாதா திருவிழா

கத்தோலிக்கத் திருச்சபையானது திருச்சபையின் தாயும் உலக இராக்கினியும் நம் ஆண்டவரின் அன்னையுமான அன்னை மரியாளுக்கு பல பெயர்களில் பல அவதார வடிவங்களில் உலகெங்கிலும் ஆலயங்களை ஸ்தாபித்து திருவிழா எடுத்து மகிழ்கிறது.

அந்த வகையில் இலங்கையிலும் மடுமாதா, செபமாலை மாதா, வியாகுல மாதா, ஆரோக்கிய மாதா, காணிக்கை மாதா, நல் மரண மாதா, என பல பெயர்களால் அழைக்கப்பட்டு புகழப்படுகிறார்.

கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் அன்னை மரியாளின் திருக் காட்சிகள் முதல் நூற்றாண்டிலிருந்தே பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் அன்னையின் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.ஒவ்வொரு காட்சியின் போதும் அவர் கடவுளின் செய்தியை பக்தர்களுக்கு வழங்கி வருகின்றார்.

அந்த வகையில் அன்னை மரியாளின் லூர்து நகர் காட்சியை அடிப்படையாக வைத்து புனித லூர்து அன்னை திருவிழா பெப்ரவரியில் கொண்டாடப்பட்டு வருகிறது.

பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து நகரில் பிறந்தவர் பெர்னதெத். அவருக்கு பதினான்கு வயதில் அன்னை மரியாள் காட்சி தந்தார்.

பெர்னதெத் தனது சகோதரி மற்றும் தோழியுடன் விறகு பொறுக்க சென்ற வேளையில் மசபியல் என்ற குகை அருகே அன்னை மரியாள் தோன்றினார்.

அந்தக் குகையில் அன்னை மரியாள் மிகவும் பிரகாசமாக காட்சியளித்தார். ஒரு இளம்பெண்ணாக வெண்ணிற ஆடை அணிந்து,முக்காடு அணிந்து, நீல நிற இடைக் கச்சையை உடுத்தி முத்துக்களான செபமாலையை கையில் வைத்திருந்தார்.

காலடியில் காட்டு ரோஜா செடிகள் காணப்பட கைகளை கூப்பி வானத்தை நோக்கியவண்ணம் அன்னை மரியாள் நின்று கொண்டிருந்ததை பெர்னதெத் கண்டார்.

அன்னை மரியாள் பெர்னதெத்துடன் பேசி மீண்டும் சில நாட்கள் அதே இடத்திற்கு அவளை வரச் சொன்னார். அதற்கிணங்க அன்னையின் அழைப்பை ஏற்று பெர்னதெத் பல முறை அங்கு சென்று மரியன்னையின் தரிசனத்தை கண்டார்.

ஒருமுறை பெப்ரவரி 18ஆம் திகதி அவரிடம் பேசி அந்த இடத்தில் தனக்கு ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.



பெர்னதேத்தும் அதனை அங்குள்ள பங்குத் தந்தைக்கு கூற அவர் அதற்கான காரணத்தை அறியுமாறு தெரிவித்தார்.பெப்ரவரி 25 ஆம் திகதி அன்னை மரியாள் காட்சி கொடுத்தபோது அன்னை மரியாளின் கட்டளைக்கிணங்க பெர்னதெத் மண்ணை தோண்டினாள். அந்த இடத்தில் நீரூற்று ஒன்று தோன்றியது பின்பு அது ஒரு ஓடையாக மாறியது. அந்த ஓடை திருப்பயணிகளை கவரும் இடமாக இன்றும் திகழ்வதுடன் அந்த நீர் ஊற்றில் இருந்து நம்பிக்கையுடன் நீரைப் பருகும் நோயாளிகள் குணமாகின்றனர்.

மொத்தமாக பதினெட்டு முறை அன்னைமரியாள் பெர்னதெத்திற்கு காட்சியளித்தார்.அதன்போது செபமாலையின் மகிழ்ச்சி, துயரம், மகிமை, மறை பொருட்களின் 15 மறையுண்மைகள் என அவருக்கு கற்பித்து தினமும் ஒன்று என்ற வகையில் தியானித்து செபிக்கச் சொன்னார்.

பெர்னதெத்தின் இந்த சம்பவங்களை உறுதிப்படுத்தும் வகையில் அவர் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அனைத்திலும் வெற்றி கண்டார்.

லூர்து அன்னை பெர்னதெத்துக்கு காட்சியளித்த குகையை நினைவு கூரும் வகையில் பெருமளவிலான கத்தோலிக்க தேவாலயங்களில் 'கெபி' என்ற பெயரில் அன்னை தரிசனம் தந்த குகை அதே அடையாளங்கள், தன்மையுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

அதன் முன்னால் மண்டியிட்டு வேண்டுதல் செய்யும் விசுவாசிகளின் மன்றாட்டுககளை அன்னை செவிமடுத்து ஆண்டவரின் அருள் வளங்களை இன்றும் அவர் மக்களுக்கு பெற்றுக் கொடுத்து வருகின்றார்.

அதனால்தான் இன, மத, பேதமின்றி மாதா கோயில்களுக்கு அனைத்து மக்களும் பக்தியுடன் செல்வதை காணமுடிகிறது. அவர் அனைத்து மக்களுக்குமான உலக இரட்சகியாகத் திகழ்கின்றார்.





கொழும்பு, வெள்ளவத்தை புனித லோரன்ஸ் தேவாலய பங்கின் சிறுவர்களுக்கான முதல் நன்மை திருப்பலி அண்மையில் நடைபெற்றது. முதல் நன்மை பெற்றுக் கொண்ட சிறுவர்களையும் மறையாசிரியர்கள் மற்றும் அருட்சகோதரிகளையும் சிறுவன் ஒருவருக்கு அருட்தந்தை முதல் நன்மை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(பட உதவி: மைக்கல் பெர்னாண்டோ புள்ளே)

## ஆயர்த்துவ திருப்பொழிவை நினைவு கூரும் ஆயர்கள் இம்மானுவேல், மெக்ஸ்வெல்




மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை ஆகியோரின் ஆயர்த்துவ திரு நிலைப்படுத்தல் தினம் எதிர்வரும் 11 ஆம் திகதி நினைவு கூறப்படுகின்றது.

ஆயர்கள் இருவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இருவரும் சிறந்த உடல்நலத்துடன் தமது மேய்ப்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான அருள் வரங்களை இறைவன் வழங்க வேண்டி கிறிஸ்தவ மஞ்சரி பிரார்த்திக்கின்றது.

(ஸ)

# திருத்தந்தை பிரான்சிஸ் தலைமையில் வத்திக்கானில் திருநீற்றுப் புதன் திருப்பலி



தவக்காலத்தையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பெப்ரவரி 17ஆம் திகதியன்று திருநீற்றுப்புதன் திருப்பலியை வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் நிறைவேற்றவுள்ளார்.

திருநீற்றுப் புதனான இம்மாதம் 17ஆம் திகதி காலை வத்திக்கானின் புனித பேதுரு பெஸிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் திருநீற்றை ஆசீர்வதித்து திருப்பலி நிறைவேற்றவுள்ளார். தவக்காலத்தின் தொடக்கமான திருநீற்றுப் புதனன்று திருத்தந்தை நிறைவேற்றும் திருப்பலியில் கொவிட்19 காரணமாக குறைந்த எண்ணிக்கை விசுவாசிகளே பங்குபெறுவார்கள் என திருப்பீடம் அறிவித்துள்ளது.

அத்துடன் பாப்பிறை இல்ல மறையுரையாளரான கப்புச்சின் சபையின் கர்தினால் *Raniero Cantalamessa* ஆண்டகை தவக்கால தியான உரைகளை திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அரங்கில் "நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?" (மத்.16,15) என்ற தலைப்பில் வழங்கவுள்ளார் என்றும் திருப்பீடம் அறிவித்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பிரசன்னத்தில் நடைபெறும் இந்த தவக்கால தியான உரைகள் பெப்ரவரி 26, மார்ச் 5,12, 26 ஆகிய திகதிகளில் உரோம் நேரம் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

மேரி தெரேசா...

# கிழக்கின் குரல்



# ஓட்டமாவடியில் டெங்கு; வீட்டு வளாகம் சோதனை

## 54 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை





**கல்குடா தினகரன் நிருபர்**

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் (07) வரை 110 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் டெங்கு நுளம்பு குடம்பிகள் காணப்படுகின்ற இடங்களை அடையாளப்படுத்தி மக்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கையும், வீட்டு வளாகம் பரிசோதனை செய்யும் நடவடிக்கையும், தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம். தாரி க்கின் வழிகாட்டலில் நேற்று முன்தினம் மாஞ்சோலை மற்றும் பதுரியா நகர் பிரிவில் சுத்தப்படுத்தும் நிகழ்வு பொது சுகாதார பரிசோதகர் என்.எம்.எம்.சிஹான், ஓட்டமாவடி பிரதேச சபை, ரேசிங்க லெவன் விளையாட்டு கழக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு வீடுகள் மற்றும் பொது இடங்களை சுத்தப்படுத்தலில் ஈடுபட்டனர்.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜனவரி தொடக்கம் பெப்ரவரி 07ம் திகதி வரை 110 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பெப்ரவரி மாதம் 01ம் திகதி தொடக்கம் 07ம் திகதி வரை 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.தாரிக் மேலும் தெரிவித்தார். ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி 07ம் திகதி வரை டெங்கு நுளம்பு பெருகுவதற்கு வசதியாக இடங்களை சுத்தம் இல்லாமல் வைத்திருந்த 54 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், பதினைந்து பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# பிரதிப் பணிப்பாளராக பதவி உயர்வு



**(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுக் கொண்ட இலங்கை வானொலியின் பிராந்திய வானொலியான பிறை எப்.எம்.சேவை நிலையத்தின் கட்டுப்பாட்டாளர் பசீர் அப்துல் கையூமை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த (04) அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

சிரேஷ்ட அறிவிப்பாளர் எஸ். ரபீக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது வானொலி அறிவிப்பாளர்கள், துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற இந்நிகழ்வின் போது, பிரதிப் பணிப்பாளர் பசீர் அப்துல் கையூமின் சேவையினைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன், வாழ்த்துப் பத்திரமும் வழங்கப்பட்டது.

இதன்போது வானொலியின் மூலம் ஒலிபரப்புத் துறையினர் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் தொடர்பிலும், பிறை வானொலி சேவையின் நிகழ்ச்சிகள் தொடர்பிலும் துறைசார்ந்த முக்கியஸ்தர்களால் கருத்துரைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விடுமுறை வழங்குமாறு கோரிக்கை

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பிரதேசத்தில் நகர் பகுதி வர்த்தக நிலையங்களில் தொழில் புரியும் பெருமளவிலான ஊழியர்களுக்கு வாரத்தில் ஒரு நாளேனும் வியாபார நிலையங்களை முழுமையாக மூடி விடுமுறை வழங்கும் பொறுப்பில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் நடந்து கொள்வதில்லை என தொழில்புரியும் ஊழியர்கள் புகார் தெரிவிக்கின்றனர். சாப்பு சட்டத்தின் கீழான நடைமுறையில் தொழிலாளர்களுக்கான நலன்சார்ந்த விடயங்கள், வர்த்தக உரிமையாளர்களினால் முறையாக வழங்கப்படாத நிலையிலும் வாரத்தில் 07 நாட்களும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படுவதாகவும் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



கல்லாறு மத்திய விளையாட்டுக் கழகத்தின் 13வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு கடந்த சனிக்கிழமை பெரியகல்லாறு இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறுவதை காணலாம். (படம்: கல்லாறு தினகரன் நிருபர்)

# அன்று தமிழ் – முஸ்லிம் தலைமைகள் இன ரீதியான தேசியத்தை விரும்பவில்லை

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

அன்று சேர் பொன். இராமநாதன், எம்.சித்திலெப்பை, ரி.பி.ஜாயா, சேர் பொன். அருணாசலம் ஆகியோர் இன்றைய தலைவர்களை போல் சிந்தித்து இருந்தால், இலங்கை இன ரீதியான பிழவுபட்ட நாடாக என்றைக்கோ உருவாகி இருக்கும் என அரசியல் புரட்சிகர முன்னணியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி எம். சி. ஆதம்பாவா தெரிவித்தார்.

மாளிகைக்காடு மேற்கு ஷேய்கா அப்துல்லாஹ் அல் ஸயிர் அரபு கல்லூரியில் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போது இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,




தமிழ், முஸ்லிம், சிங்கள தலைவர்களின் காத்திரமான கூட்டு பங்களிப்பு மூலமாகவேதான் எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. ஆனால் அந்த சுதந்திரத்தை இந்த நாட்டின் எல்லா இன மக்களும் அனுபவிக்க முடிகின்றதா? என்கிற கேள்வி 73 ஆவது சுதந்திர தினமான இன்றும் கண் முன் நிற்கின்றது. அன்னியர்களிடம் இருந்து நாம் விடுதலை பெற்று விட்டோம் என்பது உண்மைதான். ஆனால் எமது ஜனாஸாக்களை எம்மால் எமது சமய முறைப்படி நல்லடக்கம் செய்ய முடியாமல் இருக்கின்றது என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகவே உள்ளது.

அதேபோல, எல்லா சமயங்களையும் சமமாக நடத்தப்படுகின்றனவா? என்று பார்த்தால் அரசியலமைப்பு ஊடாக பௌத்த சமயத்துக்கு ஏனைய சமயங்களை காட்டிலும் முதலிடம் வழங்கப்பட்டு உறுதி செய்யப்பட்டு உள்ளது.

ஒரே நாடு ஒரே சட்டம் என்கிற கொள்கை திட்டம் அனைவருக்கும் பொதுவானதாக பாரபட்சம் இன்றி அமுல்படுத்தப்படுகின்றதா? என்கிற வலுவான சந்தேகம் நின்று நிலைக்கின்றது. மத்திய மலை நாடு, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரே விதத்தில் சமமாக நடத்தப்படுகின்றனவா? என்று கேட்க வேண்டி இருக்கின்றது.

எது எப்படி இருந்தாலும் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்று இனங்களாக நாம் பிரிந்து நிற்கவே கூடாது. ஒரே தேசியமாக இலங்கையர்களாக இருத்தல் வேண்டும் என தெரிவித்தார்.

# தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவு

**அக்கரைப்பற்று மேற்கு தினகரன் நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த இளைஞனை 3 நாள் தடுத்து வைத்து விசாரணை செய்ய அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதிவான் இஸ்மாயில் உவைசுர் றகுமான் உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அக்கரைப்பற்று பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேக நபரை ஆலையடி வேம்பு பிரதேசத்தில் வைத்து சோதனைக்கு உட்படுத்திய போது அவரிடம் 1050 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதுடன், பயணித்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர். சம்பவத்துடன் இன்னும் பல சந்தேக நபர்களுக்கு தொடர்புள்ளதாக என விசாரணை செய்வதற்காகவே தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போன மீனவரின் சடலம் மீட்பு

**(பெரியபோரதீவு தினகரன், மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)**

கடந்த 02ஆம் திகதி காணாமல் போன நிலையில் தேடப்பட்டு வந்த மீனவரின் சடலத்தை மயிலவெட்டுவான் ஆற்றிலிருந்து கடந்த சனிக்கிழமை மீட்டெடுத்ததாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

அரசையா பாலசுந்தரம் (வயது 52) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

இவர் காணாமல்போன இடத்திலிருந்து சுமார் 6 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஆற்றிலிருந்தே மிதந்து கொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. சடலம் மீட்கப்படும்போது சடலத்தின் இரு கால்களும், இரு கைகளும் சிதைவடைந்திருந்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் ஆற்றைக் கடக்கும்போது முதலையிடம் சிக்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூராய்வுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் மின் துண்டிப்பு அறிவித்தல்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம் பெறவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை புதன்கிழமை (10) கல்முனை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட கல்முனைப் பிரதேசம் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

வியாழக்கிழமை (11) கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட தரவைக் கோவில், கடற்கரைப்பள்ளி, அம்மன்கோவில், உடையார் வீதி, இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டம், நிந்தவூர் தியேட்டர் வீதி, காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி ஆகிய பகுதிகளில் மாலை 04.00 மணி முதல் மாலை 06.00 மணி வரையும் மின் தடைப்படும். 13ம் திகதி சனிக்கிழமை நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில் அன்சாரிபள்ளிவாசல் பகுதி, மீராநகர், நிந்தவூர் மற்றும் அட்டப்பள பகுதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

17ம் திகதி புதன்கிழமை நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில், வௌவலோடை, நிந்தவூர், உதுமாபுரம், திராய்க்கேனி, அட்டாளைச்சேனை, மீலாத்நகர் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும். வியாழக்கிழமை (18) சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட அம்பாறை வீதி, ஹிலால்புரம், வங்களாவடி, உடங்கா ஆகிய பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திருகோணமலை தேர்தல் தொகுதிக்கான மகளிர் இளைஞர் மாநாடு பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (07) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே மற்றும் அவரது மனைவி லசிதா புஞ்சி நிலமே ஆகியோருடன் பெருந்திரளான பெண்கள் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்: திருமலை மாவட்ட விசேட நிருபர்)

# நோன்பு நோற்று பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வேண்டுகோள்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலைமை நீங்க நோன்பு நோற்று பிரார்த்தனையில் ஈடுபடுமாறு காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை வேண்டு கோள் விடுத்துள்ளது.

காத்தான்குடி பிரதேசத்தின் முடக்க நிலை காரணமாக எமது மாணவர்கள், வியாபாரிகள் என பலரும் பல்வேறு பாதிப்புக்கு உட்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

அந்த வகையில் பாதிப்புற்று இருக்கும் எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும், வியாபார ரீதியாக பாதிப்புற்றிருக்கும் எமது சகோதரர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், பிரதேசத்தில் இருந்து கொடிய தொற்று நோய்கள், ஏனைய சோதனைகள் நீங்கும் வகையில் ஊர் தழுவிய ரீதியில் சகல சகோதர சகோதரிகளையும் தாய்மார்களையும் நோன்பு நோற்று, சதகாக்கள் செய்து அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாறு காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# கிழக்கில் பல பிரதேசங்கள் சிவப்பு வலயங்களாக அறிவிப்பு

## கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர்

**பெரியபோரதீவு தினகரன், கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

கிழக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் (07) வரை 2536 பேர் கொவிட் 19 தொற்றுக்குள்ளாகியுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் தொற்றினால் 16 மரணங்கள் சம்பவித்துள்ளன.

தற்பொழுது 265 சிகிச்சை பெற்று வருகின்றனர். 2278 நபர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்கள்.



திருகோணமலை மாவட்டத்தில் 486 பேரும் மட்டக்களப்பு மவாட்டத்தில் 619 பேரும், அம்பாறை பிராந்தித்தில் 175 பேரும் கல்முனைப் பிராந்தியத்தில் 1256 பேரும், பேலியகொட மீன்சந்தை கொத்தணியின் பின்னர் கொவிட் 19 தொற்றுக்குள்ளாகி அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

தற்போது ஆங்காங்கே தொற்று உள்ளவர்கள் எம்மால் அடையாளம் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த தொற்றுடைய தாக்கமும் முற்றாக கிழக்கு மாகாணத்தை விட்டு நீங்கவில்லை. எதிர்வருகின்ற காலத்தில் எம்மால் வழங்கப்படுகின்ற சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் பட்சத்தில் மீண்டும் தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

மக்களுடைய நடமாட்டம் பரவலாகக் காணப்படுவதனால் எந்த வகையிலும் இத்தொற்று கிழக்கு மாகாணத்திற்கு வருவதற்குரிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில் 4 பிராந்தியங்கள் ஊடாக 14,000 பேருக்கு இந்த தடுப்பூசியை வழங்கியிருந்தோம். அது கிழக்கிலுள்ள 46 சுகாதார சிகிச்சை நிலையங்களிலும் மத்திய அரசு மற்றும் மாகாண சபைக்குட்பட்ட வைத்திசாலைகளிலும் இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த தடுப்பூசி ஏற்றிய பின்னர் எவருக்கும் எதுவித பாரிய பக்க விளைவுகளும் ஏற்படவில்லை. ஆகவே இந்த தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை நாம் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளோம்.

காத்தான்குடியில் ஒரு சில வீதிகளைத் தவிர்த்து ஏனைய வீதிகளை தனிமைப்படுத்தலிலிருந்து அகற்றலாம் என எமது தொழில்நுட்பக் குழு தெரிவித்துள்ளது. அதனை நாம் சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ளோம்.

அவ்வாறு தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டாலும் கொவிட் 19 உடைய தாக்கம் முற்றுமுழுதாக நீங்கவில்லை. எனவே மக்கள் எம்மால் வழங்கப்படுகின்ற சுகாதார வழிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்றார்.

# சமூக பராமரிப்பு மத்திய நிலையம் திறந்து வைப்பு



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

சுபீட்சமான நாட்டை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான சமூக பராமரிப்பு மத்திய நிலையத்தை திறந்து வைத்து கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் சேவைகளை பிரதேசமட்ட பொதுமக்களுக்கு இலகுவாக வழங்கும் நோக்கில் 55 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் பெரியநீலாவணை கிராமசேவையாளர் பிரிவில் இந்த சமூக பராமரிப்பு மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

புதிதாக கட்டப்பட்ட சமூக பராமரிப்பு மத்திய நிலையத்தின் நாடாவை வெட்டி இனிப்பு பண்டங்கள் வழங்கி உத்தியோகபூர்வமாக பணிகளை ஆரம்பித்து வைத்தார். இதன்போது சமூக பராமரிப்பு நிலைய வளாகத்தில் பயன்தரு பழவகை மரங்களும் நாட்டி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூகசேவை உத்தியோகத்தர் சி.குணரத்தினம், எம். ஐ.எம்.முர்ஸித், சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி எஸ்.லில்லி மலர், இஸட்.எம்.றியாஸ் உட்பட பிரதேச செயலகத்தின் அலுவலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் இரு பிரிவுகள் திறந்து வைப்பு

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் பொதுமக்களின் நலன் கருதி மறுசீரமைக்கப்பட்ட இரு பிரிவுகள் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று (8) பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பிரதேச ஒருங்கிணைப்பு பிரிவு மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர் பிரிவு என்பன திறந்து வைக்கப்பட்டன.

இதன் போது பிரதேச ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எம்.ஐ.எம் பாரீஸ் பங்குபற்றலுடன் , பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பிரதேச ஒருங்கிணைப்பு பிரிவும் மேலதிக மாவட்ட பதிவாளர் பிரிவு ஆகியன பிரதேச செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டன.

பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பிரதேச ஒருங்கிணைப்பு பிரிவு சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் அடிப்படையில் வறிய குடும்பங்களை சேர்ந்த 1 இலட்சம்



வேலைவாய்ப்பில் இணைக்கும் திட்டத்தில் முதலாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களை பயிற்றுவித்தல் மற்றும் பிரதேச அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல் அவசர கால நிலைமைகளின் போது மீட்புப்பணிகளை முன்னெடுத்தல் என்பனவற்றினை இப்பிரிவு மேற்கொள்கின்றது.

நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.லதாகரன், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் மனோஜ் இந்திரஜித் , பிரதேச செயலக கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், பயிலுநர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பாறுக் ஷிஹான்

# சட்டத்தரணி தாஹா செய்னுதீனின் மறைவு இலகுவில் நிரப்ப முடியாத வெற்றிடமாகும்


## சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர்

**துறைநீலாவணை நிருபர்**

சிரேஷ்ட சட்டத்தரணி தாஹா செய்னுதீனின் மறைவு இலகுவில் நிரப்ப முடியாத வெற்றிடமாகும் என கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய உப தலைவர்களுள் ஒருவருமான எப். எம். அமீருல் அன்ஸார் மௌலானா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது அனுதாபச் செய்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தாஹா செய்னுதீன் தனது 80ஆவது வயதில் கொழும்பில் மரணமான செய்திகேட்டு சக சட்டத்தரணிகளும் ஏராளமான அவரின் வழக்காளிகளும் சமூகத் தலைவர்களும் கவலை அடைந்துள்ளனர்.

அக்கரைப்பற்றில் பிறந்த அவர் தனது ஆரம்ப மற்றும் உயர் கல்வியினை மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார். 1959ல் சட்டக்கல்லூரிக்கு நுழைந்த அவர் சிறந்த ஆங்கிலப் புலமையுடன் 1965ம் ஆண்டு உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக நீதித் துறைக்குள் பிரவேசித்தார். அதன் பின்னர் அவர் சிறிது காலம் அரச சட்டவாதியாகவும் நீண்டகாலம் பதில் நீதிபதியாகவும் கல்முனை நீதிமன்றில் பணியாற்றி நீதித்துறைக்கு புகழ் சேர்த்தார்.



கடந்த 55 ஆண்டு காலமாக அவர் பல சிவில் வழக்குகளில் தோன்றி அவரது ஆளுமை, புலமை, வாதட்டங்களின் மூலம் பல்வேறு சாதனைகளைப் புரிந்த நிலையில் மேல் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்பவற்றில் தோன்றி பல வழக்குகளில் தனது இலச்சினையை பதித்தார்.

கல்முனை சட்டத்தரணிகள் இவரது இழப்பால் ஒரு சட்ட வழிகாட்டியை, நல்ல ஆலோசகரை இழந்து தவிக்கின்றது அன்னாரின் நல் ஈடேற்றத்திற்காக இறைவனை பிரார்த்திப்போம் என குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை முகாமைத்துவ சபைகள் உயிரோட்டமுள்ளதாக இருக்க வேண்டும்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

பாடசாலைகளில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு பிரதான காரணம் முகாமைத்துவ சபைகள் முறையாக இயங்காததேயாகும். பிரச்சினைகள் ஏற்பட்டபின் தீர்வு காண்பதைவிட அதற்கு முன்பே அதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். கொரோனாவால் இழந்த கல்வியை மேம்படுத்த வேண்டுமெனில் பாடசாலை முகாமைமைத்துவ சபைகள் உயிரோட்டமுள்ளதாக இருக்க வேண்டுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ றஹீம் தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை வலய கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் உரையாற்றுகையிலே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, இழந்த கல்வியை மேம்படுத்த பாடசாலை நிறைவேற்றுக்குழு, முகாமைத்துவ சபை இரண்டும் இரு கண்களைப்போல் இணைந்து செயல்பட வேண்டும்.

பாடசாலைகளிலுள்ள வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்கள் மத்தியஸ்த சபையினர் குழுவாக இயங்க வேண்டும். பாடசாலை நிறைவேற்றுக் குழுவில் பிரதான பகுதியில் உள்வாரியானோர் வெளிவாரியானோர் என இரு பிரிவினர் இருப்பர். மாதாந்த கூட்டங்ளை தவறாது நடாத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இரு குழுக்களும் கல்வி அமைச்சு சுற்று நிருபப் பிரகாரம் அமைக்கப்பட்டு வலயக் கல்வி பணிப்பாளரிடம் அனுமதி பெறவேண்டும் என்றார்.

# தொல்பொருள் செயலணிக்கு சிறுபான்மையினர் புறக்கணிப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கு தொல்பொருள் செயலணியில் சிறுபான்மையினரையும் நியமிக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் குறித்த செயலணிக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மேலும் 5 பேரை அரசாங்கம் நியமித்துள்ளது.

புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் மூத்த பேராசிரியர் அனுர மானதுங்க, காணி ஆணையர் நாயகம் கீர்த்தி கமகே, சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஆர்.டி.நந்தன சேனதீர மற்றும் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அசின்சல செனவிரத்ன ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த செயலணியில் அங்கம் வகித்த ஐந்து உறுப்பினர்களில் சிலர் ஓய்வுபெற்றமை மற்றும் இடமாற்றம் பெற்றதால் புதிய நியமனங்கள் நடைமுறைக்கு வருவதாக வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் செயலணி கடந்த 2020 ஜூன் 1 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது. இதில் தமிழ் மற்றும் முஸ்லிம்களை இணைக்கும்படி பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதனால் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் எஸ்.வியாழேந்திரன் ஆகியோர் பெயர் பட்டியலொன்றினை சமர்ப்பித்திருந்தனர். அந்த பட்டியல் குறித்து அரசாங்கம் இதுவரை கவனம் செலுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மையினக் கட்சிகளின் பிரதிநிதிகள் இதற்கு விசனம் தெரிவித்துள்ளனர்.



கல்முனை மாநகர சபையில் 25 ஆண்டுகள் சிறந்த சாரதியாக பணியாற்றிய கே.சிவப்பிரகாசம் ஓய்வு பெற்றார். அவரைப் பாராட்டும் நிகழ்வு நேற்று மாநகர ஆணையாளர் எம்.சி. அன்சார் தலைமையில் நடைபெற்றது. இதன் போது உத்தியோகத்தர்கள் நினைவு சின்னம் வழங்கி வைப்பதைக் காணலாம். படம்; நற்பிட்டிமுனை விசேட நிருபர்

## நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு

# நெல் வழங்க முடியாமல் விவசாயிகள் சிரமம்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக விவசாயிகள் தங்களது அறுவடை செய்த நெல்லை நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்க முடியாது சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பெரும்போக விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை அரசின் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் நெற் சந்தைப்படுத்தும் சபையினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஒரு கிலோகிராம் சம்பா நெல் 52 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் நாடு நெல் 50 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது சீரற்ற காலநிலை நிலவுவதனால், பெரும்போக விவசாயிகள் தங்களது அறுவடை நெல்லை முறையாக உலரவைத்து, நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்க முடியாது சிரமங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்ட பெரும்போக விவசாயிகள் தங்களது அறுவடை நெல்லை தற்பொழுது, தனியார் வியாபாரிகள், அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள், தரகர்கள் ஆகியோருக்கு குறைந்த விலைக்கு வழங்கி வருகின்றனர். இதனால், முறையான விலையின்றி விவசாயிகள் நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர்.





மட்டக்களப்பு தாண்டவன்வெளி தூய காணிக்கை மாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவின் இரண்டாம் நாள் கொண்டாட்டம் நேற்று (08) நடைபெற்றபோது, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை மற்றும் பங்குத்தந்தை எம். ஸ்ரணிஸ்லோஸ் கூட்டுத்திருப்பலியை ஒப்புக் கொடுப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். படம்;மட்டக்களப்பு விசேட நிருபர்




# அரசாங்கம் நாட்டுமக்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது

(எம்..ஏ.அமீனுல்லா)



நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு இடமளிக்காமல் உலக வங்கி உள்ளிட்ட வல்லரசு நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு கட்டுப்பட்டமையாலேயே கடந்த அரசாங்கத்தை மக்கள் நிராகரித்திருந்தனர் என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கண்டியில் தெரிவித்தார்.

கண்டி தெல்தெனிய பிரதேசத்தில் (7) நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அமைச்சர், அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தற்போதைய அரசாங்கம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளுக்கோ அல்லது உலக வல்லரசுகளின் நிரல்களுக்கு அல்லாமல் நாட்டு மக்களினது எண்ணங்களுக்கும் அபிலாசைகளுக்கும் இடமளித்துவருகின்றது,

முந்தைய அரசாங்கம் 2019 மே மாதத்தில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியா மற்றும் ஜப்பானுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நாட்டிற்கு ஒரு புதிய திட்டத்தை முன்வைத்துள்ளது. ஒப்பந்தங்கள் தொடரப்படாத போது இரு நாடுகளுக்குமிடையில் பல அதிருப்திகரமான நிலைப்பாடுகள் வெளிக்கொணரப்படலாம்.

நாங்கள் எம்.சி.சி ஒப்பந்தத்திலிருந்து விலகிச் சென்றபோது, அந்த நாடுகளுக்கு சில சிக்கல்களை உருவாக்கும் போக்கு இருந்தது, இந்த பிரச்சினைகளை தீர்ப்பது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்தியாவில் இருந்து பெறப்பட்ட கடன்கள் உரிய காலத்தினுள் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் மீண்டும் கடன் கோருவதற்கான வாய்ப்பு உள்ளது. ஐந்து ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தபோதும் முந்தைய அரசாங்கத்தால் வட்டி விகிதங்களைக் குறைக்க முடியவில்லை, ஆனால் தற்போதைய அரசாங்கம் அவ்வாறு செய்துள்ளது, குத்தகைத் தவணைகளை செலுத்தும்போது மக்களுக்கு இந்த நிவாரணம் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் காரியாலயம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் நேற்று முன்தினம் (06) திறந்துவைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

# மிளகின் விலை வீழ்ச்சி விவசாயிகள் பாதிப்பு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)



சந்தையில் மிளகின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளமையால் பொருளாதார நெருக்கடிக்கு தாம் ஆளாகி உள்ளதாக பலாங்கொடை பிரதேச மிளகு செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இத்தினங்களில் காய்ந்த மிளகு ஒரு கிலோ 500 ரூபாவிற்கும் பச்சை மிளகு ஒரு கிலோ 140 ரூபாவுக்குமான அதிகக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வதாக மிளகு செய்கையாளர்கள் சுட்டிக்காட்டினர். ஒரு கிலோ காய்ந்த மிளகினைப் பெற 5 கிலோ அளவு பச்சை மிளகை பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பலாங்கொடை பகுதியில் மிளகு உற்பத்தி மிகவும் சிறப்பாக வளர்ச்சி அடைந்து உள்ளபோதிலும் விலை வீழ்ச்சியின் காரணமாக நமது பொருளாதார நிலை கீழ் மட்டத்திற்கு சரிந்துள்ளது எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

வருடத்திற்கு இரண்டு தடவை மட்டும் மிளகு உற்பத்தி செய்யப்படுவதால் இந்த மிளகு மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

எனவே மிளகிற்கு சாதாரண விலை ஒன்றினை பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மிளகு உற்பத்தியாளர்கள் வேண்டியுள்ளனர்.

# சூட்சுமமான முறையில் கஞ்சா வளர்ப்பு

## பொலிஸ் விசேட அதிரடிப்படை சுற்றிவளைப்பு





(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நுவரெலியா மாவட்டத்திலுள்ள நானுஓயா எடின்புரோ தோட்டத்திற்கு மேற்பகுதியில் உள்ள அரசாங்க வனப்பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதியில் நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் (07.02.2021) மாலை சுற்றி வளைத்துள்ளனர்.கஞ்சா சேனையில் 3 மற்றும் 5 அடி உயரமான 272 கஞ்சா செடிகள் இருந்ததாகவும், சுற்றிவளைப்பின் போது கஞ்சா செய்கையில் ஈடுபட்ட நபர் ஒருவர் தப்பியோடிவிட்டதாக விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக 3 செடிகளை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய கஞ்சா செடிகளை தீயிட்டு அழிப்பதற்கு விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்தனர். அத்துடன், இதன் பின்னணியில் உள்ளவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் விசேட அதிரடிப்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் நுவரெலியாவில் கஞ்சாவுடன் நபர்கள் கைதாகியிருந்தாலும், வனப் பகுதியில் பாரியளவில் கஞ்சா செய்கை செய்யப்பட்ட தோட்டமொன்று சுற்றிவளைக்கப்பட்டமை இதுவே முதல் சந்தர்ப்பமாக கருதப்படுகின்றது.

# மாத்தளையில் பி.சீ.ஆர். பரிசோதனை அறிக்கைகள் கிடைப்பதில் கால தாமதம்

தம்புள்ள தினகரன் நிருபர்.

மாத்தளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனை அறிக்கைகள் கிடைப்பதில் காலதாமதம் நிலவுவதால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மாத்தளை மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்து வருகின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனைகளின் அறிக்கைகள் கிடைப்பதில் நீண்ட நாள் கால தாமதம் நிலவுவதைத் தொடர்ந்து கொவிட் 19 வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்துவதில் தாம் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மாத்தளை மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். பி.சீ.ஆர். பரிசோதனைகளின் அறிக்கைகளைப் பெறும் பொருட்டு தினமும் இருநூறுக்கும் (200) மேற்பட்ட மாதிரிகள் கண்டி தள வைத்தியசாலை, மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இதேவேளை கடந்த 29 ஆம் திகதியிலிருந்து மாத்தளை மாநகர அதிகாரப் பிரிவினுள் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர்.பரிசோதனைகளின் அறிக்கைகள் இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை என மாத்தளை மாநகர சபையின் பிரதான பொது சுகாதார சேவை அதிகாரி பி. செந்தூரன் தெரிவித்தார்.

# பதுளை மாவட்டத்தில் 197 பேருக்கு கொரோனா; நால்வர் பலி

பதுளை மாவட்டத்தில் இதுவரை கொரோனா தொற்றாளர்கள் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை 197 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இரு ஆடைத்தொழிற்சாலைகள் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

கடந்த வருட அக்டோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் இதுவரையில் பதுளை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மொத்தமாக 584 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட கோவிட்19 தடுப்பு செயலணியினர் தெரிவித்தனர்.

வெலிமடை தியத்தலாவை மகியங்கனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். மகியங்கனையில் இரு ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆடைத்தொழிற்சாலைகளில் 185பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பதுளையில் ஐந்து கொரோனா தொற்றாளர்கள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளனர். பசறை, பண்டாரவளை, தியத்தலாவை, ரிதிமாலியத்தை, மகியங்கனை, வெலிமடை போன்ற இடங்களிலேயே கொரோனா தொற்றாளர்கள் பலர் இனம் காணப்பட்டுள்ளனர். தற்போதைய 24 மணித்தியாலங்களில் 197 பேர் கொரோனா தொற்றாளர்களாக இருந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக பதுளை மாவட்ட கொவிட்19 தடுப்பு செயலணியினர் தெரிவித்தனர்.

பதுளை மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் இல்லாத நிலை ஆரம்பக்கட்டத்தில் இருந்து வந்த போதிலும் தற்போதைய நிலையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கும் நிலையினை அவதானிக்க முடிகின்றது.

மேலும் எண்ணூறு பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# சாமிமலை ஆற்றில் மாசு

மஸ்கெலிய தினகரன் நிருபர்

மஸ்கெலிய மவுசாகல நீர்தேக்கத்திற்கு நீரை வழங்கும் சாமிமலை ஓயாவில் அதிகளவு உக்காபொருட்கள் கொட்டப்படுவதாக இலங்கை மின்சார சபை தலைவர் தெரிவிக்கின்றனர்.

மேலும் அவர் கூறுகையில் கடந்த மாதம் முதல் பெய்த கடும் மழையினால் சாமிமலை ஓயாவிலும் அதனை அண்டிய சிற்றாறுகளிலும் அதிகளவில் பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் உறைகள் போன்ற உக்கா பொருட்கள் அதிகளவில் கொட்டப்படுகின்றன.

# ஜெய்லானி பாடசாலை ஆசிரியர் விடுதி புனரமைப்பு

( பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலை ஆசிரியர் விடுதியை நிர்மாணிக்க தனிநபர் ஒருவர் முன்வந்து ஐந்து மில்லியன் ரூபாவினை தனது சொந்த நிதியிலிருந்து அன்பளிப்பு செய்துள்ளதாக பாடசாலை அதிபர் ரிஷாட் முஹமட் தெரிவித்தார். இந்த ஆசிரியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுள்ளதுடன் இந்த விடுதியின் நிர்மாணப் பணிகளை பாடசாலை அபிவிருத்தி சங்கமும் பழைய மாணவர் சங்கமும் முன்வந்து மேற்கொள்ளவுள்ளது.

# நாவலப்பிட்டியில் 22 பேருக்கு கொரோனா

(கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

நாவலப்பிட்டியில் 15 மாணவர்கள் உட்பட 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டிய பஸ்பாகே கோரளை பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட நாவலப்பிட்டிய வெஸ்டோல் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 7 மற்றும் 11இல் கல்வி கற்கும் 15 மாணவர்கள் ஒரு ஆசிரியை மற்றும் சுகாதார காரியாலயத்தில் பணிபுரியும் ஆறு பேர் உட்பட 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பஸ்பாகே கோரளை பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போதே தொற்று உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இதே வேளை தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புடைய 112 பேரை இனங்கண்டு பி.சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் தொற்றுக்குள்ளான 22 பேரை தனிமைப்படுத்தும் முகாம்களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் பொது சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.







தெஹியோவிட்ட கல்வி வலயத்துக்குட்பட்ட மாஓய தமிழ் வித்தியாலயத்தில் பரீட்சைக்கு தோற்றிய நான்கு மாணவர்களில் ஒரு மாணவி 168 புள்ளிகளைப் பெற்று பாடசாலையின் 70வருட வரலாற்றில் முதன் முறையாக சித்தியடைந்துள்ளார். அத்துடன் ஏனைய மாணவர்களும் 128ற்கு மேல் புள்ளிகள் பெற்றுள்ளனர். இவ்வாறு சித்திப்பெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் (05.02.2021) மாஓய தோட்ட இளைஞர்களாலும் பெற்றோர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வுகளை படங்களில் காணலாம். (படங்கள்: அவிசாவளை நிருபர்)

# நீங்கள் உழைக்கும் பணத்திற்கு கூடுதல் பெறுமதி




## நீங்கள் உழைக்கும் ஒவ்வொரு டொலருக்கும்

# மேலதிகமாக!

# இரண்டு ரூபாய்கள்

நீங்கள் வெளி நாட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் அல்லது இலங்கையில் இருந்து கொண்டு தொழில் ரீதியான சேவைகளை வழங்குவதனூடாக வெளிநாட்டு செலாவணிகளில் வருமானம் உழைப்பவராயின், நீங்கள் உழைக்கும் வெளிநாட்டு செலாவணியை அனுமதி பெற்ற வணிக வங்கி ஒன்றின் மூலம் அல்லது அனுமதி பெற்ற விசேட வங்கியொன்றின் மூலம் இலங்கை ரூபாவுக்கு மாற்றும் போது ஒவ்வொரு ஐ.அ.டொலருக்கு (USD 1) மேலதிகமாக 2 ரூபாய் கிடைக்கும். இது 2021 வரவு செலவு திட்டத்தின் யோசனையை அமுல்படுத்துவதன் மூலம் உங்களுக்கு கிடைக்கும் அனுகூலமாகும்.

இவ் ஊக்குவிப்பானது 2020.12.28ஆம் திகதியில் இருந்து அமுலாகும் வகையில் அனைத்து அனுமதி பெற்ற வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கியினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்கிற்கு பணம் மாற்றல் செய்யும் போது,
- வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் தாள்களை நாணய மாற்றல் செய்யும் போது,
- இடைத்தரகு நாணய மாற்றுனர்கள் அல்லது அதிகாரம் பெற்ற வெளிநாட்டு நாணய மாற்று முகவர்களினூடாக இலங்கைக்கு பணம் அனுப்பும் போது,

மேற்கூறப்பட்ட அனைத்து முறைகளினாலும் உங்களுக்கான பயன் கிடைக்கப் பெறும்

**உங்களுக்கு அருகாமையில் உள்ள எந்தவொரு அனுமதி பெற்ற வங்கிக் கிளை மூலமும் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

நிதி அமைச்சு
செயலகம்,
கொழும்பு 01, இலங்கை

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

குருநாகல் மாவட்டம்

# 16 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளைகளின் துஷ்பிரயோகம் 75 வீதமாக அதிகரிப்பு

**புத்தளம் விசேட நிருபர்**

குருநாகல் மாவட்டத்தில் இது வரையில் 16 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளைகளில் 75 வீதமானோர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். அதிகஷ்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்நிலையினைக் காண முடிவதோடு, அதில் கொடவேஹர, ரஸ்நாயகபுர, பொல்பித்திகம, யாபஹூவ, கிரிபாவ போன்ற பிரிவுகளில் இந்நிலையினை அதிகளவில் காண முடியும் என நிக்கவெரட்டி உதவி பொலிஸ் அத்தியட்சர் யூ. டி. அலவத்த தெரிவித்தார். கொட்டவேஹர பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேலும் கூறியதாவது,

மாவட்டத்தில் இளம் பெண்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதாக கிடைக்கும் தகவல்களை விட வெளியில் வராத சம்பவங்கள் அதிகமாகும். பிள்ளைகளை விட்டுவிட்டு பெற்றோர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்கின்றமை, இதனால் பாட்டிகளிடத்தில் பிள்ளைகள் வளர்கின்றமையே இவ்வாறான நிலைக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. சில பிள்ளைகள் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களைக் குறைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டங்களை உருவாக வேண்டும்.

விசேடமாக 9, 10ஆம் வகுப்புக்களில் கற்கும் பிள்ளைகளே அதிகளவில் இவ்வாறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் பிள்ளைகள் என இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த மாதத்தில் சிறுமி ஒருத்தி பலரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் நிக்கவெரட்டி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான வல்லுறவுச் சம்பவங்களில் சிறுமிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டிருப்பது பாட்டன், சித்தப்பா அல்லது நெருங்கிய உறவினர்களினாலாகும்.

இது மிகவும் வேதனைக்குரிய நிலையாகும். வரும் காலங்களில் இது தொடர்பில் பாடசாலைகள் உள்ளிட்ட ஏனைய அனைத்து பிரிவுகளையும் அறிவுறுத்த வேண்டியுள்ளது. விசேடமாக பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றார்.



வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தங்களுடைய பட்டப்படிப்புகளை நிறைவு செய்த இலங்கை மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த விடயத்தினை பாராளுமன்றத்தில் பேசுமாறும், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும் புத்தளம் சீ.பீ.எஸ். அமைப்பின் தலைவரும், சமூக சேவையாளரும், கொழும்பு அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருமான எஸ்.எம். இல்ஹாம் மரைக்கார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவிடம் மகஜர் ஒன்றை கையளிப்பதை படத்தில் காணலாம். (படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

# சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மாணவன் அங்கத்துவம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

பல நாடுகளை மையமாக வைத்து இயங்கி வரும் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி மதுரங்குளி, கணமூலையை சேர்ந்த அப்துல் முனாப் முகம்மது அஸ்ஜத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், சென்ற வருடம் மலேசியாவில் நடைபெற்ற உலகளாவிய ரீதியில் பல்வேறு துறைகளை சார்ந்த இளம் நிபுணத்துவம் வாய்ந்த இளைஞர்கள் கலந்து கொள்ளும் ஆசிய இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியில் அல் ஆலிம் பட்டம் பெற்றுள்ள இவர் உயர் தரத்தில் அதி சிறந்த சித்தி எய்தி, யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில், வணிக முகாமைத்துவப் பீடத்தில் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் – ரெட்பானாவில் இளைஞனின் சடலம் மீட்பு

**புத்தளம் விசேட நிருபர்**

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புழுதிவாயல் ரெட்பானா பகுதியில் உள்ள தும்புத் தூள் அரிக்கும் இடத்திலிருந்து நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் குடும்பஸ்தவர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி, விருதோடையைச் சேர்ந்த 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா? அல்லது ஏதேனும் விஷ ஜந்து தீண்டியதால் ஏற்பட்ட மரணமா? என்ற கோணங்களில் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலத்தின் பல பகுதிகளில் காயங்கள் காணப்படுவதாகவும், சடலத்தை பீ. சீ. ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தி பீ. சீ. ஆர் அறிக்கையின் பின்னர் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என புத்தளம் கல்பிட்டி பிரிவின் திடீர் மரண விசாரணை அதிகாரி பீ. எம். ஹிசாம் தெரிவித்தார்.

சடலம் நேற்று பகல் புத்தளம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரனைகளை புத்தளம் தலைமையக பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிர்வாணமாக திருட்டில் ஈடுபட்ட நபர் கைது

**புத்தளம் விசேட நிருபர்**

நிர்வாணமாக இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் வீடுகளுக்குள் நுழைந்து அங்கிருந்து பணம், நகைகளைக் கொள்ளையிட்டு வந்த இராணுவத்திலிருந்து விலகியிருந்த நபர் ஒருவரை திருடப்பட்ட சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளுடன் நேற்று முன்தினம் பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் கைது செய்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர். சிலாபம் வில்பொத்த பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

நிர்வாணமாக யாரோ ஒருவர் வென்னப்புவ தும்மலதெனிய பிரதேச வீடுகளுக்குள் நுழையும் காட்சிகள் சீசீடிவி கெமராக்களில் பதிவாயிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் முன்னெடுத்த நடவடிக்கையின் போதே இவ்வாறு இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரவு வேளையில் சந்தேக நபர் வீடுகளில் நடமாடுவதாக பரவிய கதையினை அடுத்து அநேக வீட்டு உரிமையாளர்கள் அச்சத்திற்கு உள்ளாகி விடிய விடிய நித்திரை முழித்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரைக் கைது செய்வதற்காக வென்னப்புவ பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையின் கீழ் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் மறைந்திருந்து இரவு மற்றும் அதிகாலை வேளையில் வீதிகளில் செல்லும் சந்தேகத்திற்கிடமானவர்களை நிறுத்தி சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இவ்வாறு இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கடந்த வருட தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாஓய தமிழ் வித்தியாலயத்தில் பரீட்சைக்கு தோற்றிய நான்கு மாணவர்களில் ஒரு மாணவி 168 புள்ளிகளைப் பெற்று பாடசாலையின் 70 வருட வரலாற்றில் முதன் முறையாக சித்தியடைந்துள்ளார். அத்துடன் ஏனைய மாணவர்களும் 128ற்கு மேல் புள்ளிகள் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (படம்: அவிசாவளை நிருபர்)


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
தொழில்நுட்ப அமைச்சு
ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்

DRP

## விலைமனுக் கோரல் (IFB)

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்திற்கு VX ரெயில் கிளஸ்டர் சர்வர் அமைப்புகள் 04 இன் சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல்**

**IFB NO: DRP/ACC/07/16/2021**

1. ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் வழங்கல் குழு தலைவரினால் திணைக்கள வழங்கல் குழு சார்பாக ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்திற்கு VX ரெயில் கிளஸ்டர் சர்வர் அமைப்புகள் 04 இன் சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல் சேவைக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் காரியாலய வேலை நாட்களில் கணக்காளர் (கொடுப்பனவுகள்), ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லை (தொலைபேசி: 0115226137) மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் **10.02.2021** ஆம் திகதி தொடக்கம் **02.03.2021** ஆம் திகதி வரை கணக்கு பிரிவு, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், C பிரிவு, 12 ஆவது மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லையில் காரியாலய நேரங்களில் **மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00** மணி வரை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி மனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற பின்வரும் குறைந்தபட்ச தகுதிகளை மனுதாரர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன், கூடுதல் விவரங்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

அ. **மனுதாரர் இலங்கையில் ஐந்து (05) ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.** மனுதாரர் தனது வியாபாரத்தின் சட்டரீதியான அல்லது சட்டபூர்வமான நிலை பதிவுசெய்த இடம் மற்றும் பிரதான வியாபார நிலைய இடத்தின் அசல் ஆவணங்களின் நகல்களை மனுதாரர் முன்வைக்கவேண்டும். இந்த மனுக்கோரலுக்கு எடர்னி சான்றிதழ் (POA) உடன் மனு மற்றும் மற்றைய ஆவணங்களுக்கு கையொப்பமிடும் நபருக்கு அங்கீகாரம் வழங்கப்படும். எடர்னி சான்றிதழ் மற்றும் இயக்குநர்கள் குழுவால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அதிகார எல்லைக்குள் சட்டபூர்வமாக பிணைக்கப்பட வேண்டியதுடன் இலங்கை சட்ட நடைமுறைகள் மற்றும் தரநிலைகளின்படி முறையாக கையொப்பமிடப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாவிட்டால் மனுக்கள் முறையாக பதிலளிக்கப்படாத மனுக்களாக கருதப்படும்.

ஆ. மனுதாரர் **ISO 9001:2015 (தர மேலாண்மை) சான்றளிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.** (அசல் சான்றிதழ்களின் நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்).

இ. மனு சமர்ப்பிக்கும் நேரத்தில் **1987 ஆம் ஆண்டின் 3** ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் மனுதாரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டியதுடன், அசல் சான்றிதழை மனு ஆவணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

ஈ. மனுதாரர் குறித்த கோரல் தொடர்பான வியாபாரத்தில் கடந்த ஐந்து (05) ஆண்டு காலத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் தன்மைப்படி வணிகத்தில் இருந்திருக்க வேண்டும். அத்துடன் மெய்நிகர் இயந்திர (VM) அனுபவத்தில் 03 வருட முன் அனுபவத்தை பெற்றிருக்க வேண்டியதுடன் குறைந்தது 01 செயற்திட்டத்தையாவது வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும். இதற்கு ஆவண சான்றுகள் முன்வைக்க வேண்டும். மேல் கோரப்பட்ட விடயங்களுக்கான ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறு இணைக்கப்படாவிட்டால் மனுக்கள் முறையாக பதிலளிக்கப்படாத மனுக்களாக கருதப்படும்.

உ. மனுதாரர் இந்த தயாரிப்பின் அசல் கருவி உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராக இருக்க வேண்டும். அதற்கான ஆதாரம் அசல் கருவி உற்பத்தியாளர்களின் தொடர்பு விவரங்கள் மனு ஆவணத்தில் இணைக்கப்பட வேண்டும் மற்றும் பொருந்தினால் அவற்றின் உள்ளூர் முகவர் / விநியோகஸ்தர்கள். மனுதாரரால் தயாரிக்கப்படாத / வழங்கப்படாத உபகரணங்கள், அசல் உற்பத்தியாளரிடமிருந்து உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதங்கள் இந்த ஏல ஆவணத்துடன் வழங்கப்பட வேண்டும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் இணைக்கப்படாவிட்டால் மனுக்கள் முறையாக பதிலளிக்கப்படாத மனுக்களாக கருதப்படும்.

ஊ. **கடந்த 3 ஆண்டுகளில் (2018 - 2020)** மனுதாரரின் குறைந்தபட்ட வருட வருமானம் நாற்பது மில்லியன் (40) அல்லது அதற்கு மேற்பட்டு இருத்தல் வேண்டும். (அதற்கான ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

எ. மனுதாரர் குறைந்தபட்சம் இருபத்தைந்து (25) மில்லியன் நிகர திரவ சொத்துக்கள் (தற்போதைய சொத்துக்கள்-சரக்கு-நடப்பு பொறுப்புகள்) அல்லது இந்த திட்டத்திற்கான கடன் வசதிகளை வழங்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும் (அதற்கான ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

ஏ. கடந்த மூன்று (03) ஆண்டுகளாக (2018 - 2020) நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களை மனுதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.

ஐ. தெரிவ செய்யப்படும் மனுதாரரால் நிறுவல், பராமரிப்பு மற்றும் துணை சேவைகளுக்கான திறமையான தொழில்முறை தொழில்நுட்ப ஊழியர்களைக் கொண்டிருக்க வேண்டும். (பணியாளர்கள் விவரங்கள் வழங்கப்பட வேண்டும்).

ஒ. ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் அலகுகளுக்கு நாடு முழுவதும் அல்லது பெருனர் கோரிய எந்த இடத்திற்கும் தேவையான தொடர்ச்சியான சேவைகளை **(24 மணிநேரம் மற்றும் 365 நாட்கள்)** வழங்க மனுதாரர் ஒரு கிளை வலையமைப்பின் மூலம் செயற்படும் திறனைக் கொண்டிருக்க வேண்டும். தொடர்பு நபருடனான சான்று, அதற்கான தொடர்பு முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் வழங்க வேண்டும். **(ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும், இணைக்கப்படாவிட்டால், மனுக்கள் முறையாக பதிலளிக்கப்படாதவையாகக் கருதப்படும்).**

ஓ. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2016 - 2020) மனுதாரர் ஏதோனும் வழக்குகள் தொடர்பான தகவல்கள் இருப்பின் அவற்றை முன்வைக்க வேண்டும்.

ஔ. கடந்த பத்து ஆண்டுகளில் (2011 - 2020) மனுதாரர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அல்லது இணைந்த நிறுவனங்கள் எந்தவொரு அரசாங்க நிறுவனத்தாலும் தடுப்புப்பட்டியலில் இடப்பட்டிருக்கக்கூடாது.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **10.02.2021** ஆம் திகதியிலிருந்து **02.03.2021** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **09.00** மணியிலிருந்து **03.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.3,500.00** கட்டணத்துடன் (ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும்.) எழுத்து மூல விண்ணப்பத்தை கணக்காளர், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், C பிரிவு, 12 ஆவது மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லை காரியாலயத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
6. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) **03.03.2021** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் உருப்படி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். அல்லது **கணக்கு பிரிவு, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், C பிரிவு, 12 ஆவது மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் 91 வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.** மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. மனு தொடர்பான கூட்டம் **19.02.2021** ஆம் திகதி **பி.ப 02.00** மணிக்கு, கேட்போர் கூடம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், C பிரிவு, 13 ஆவது மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரியில் இடம்பெறும்.
8. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் **IFB** எண் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களுடனும் இலங்கையில் செயல்படும் எந்தவொரு உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் **ரூபா.250,000/- மனுக்காப்புறுதிப்பிணையுடன்** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள வழங்கல் குழு,
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
12 ஆவது மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லை



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## 2021 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

## விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் திகதியை நீடித்தல்

**2021 சனவரி 18 ஆம் திகதியன்று தினகரனில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு விளம்பரத்திற்கு மேலான அறிவித்தல்.**

கீழே குறிப்பிட்டுள்ள திகதி வரையும் பின்வரும் பெறுகைக்கான திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென தயவு செய்து கவனிக்கவும்.

இதற்கமைவாக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்தலின் முன்னெடுப்பிற்கான பின்வரும் திருத்தங்கள் அமுலாக்கப்படுவதுடன் அவ்வாறான திருத்தங்கள் வளமுள்ள நிறுவகங்களினால் கவனத்திற்கெடுக்கப்படல் வேண்டும்.

கீழே விபரிக்கப்பட்டுள்ள திருத்தம் தவிர, மேலே குறிப்பிட்டுள்ள விளம்பரத்தில் வழங்கப்பட்ட தகவலில் எவ்வித மாற்றமுமில்லை.

| விளக்கம் | விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | பதிவுக் கட்டணத்தை மேற்கொள்ளும் இறுதித் திகதி |
| --- | --- | --- |
| பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் | 2021.02.20 ஆம் திகதியன்று | 2021.02.15 ஆம் திகதியன்று. |

கூடுதலான தெளிவுறுத்தல்களுக்கு, தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி

பிரதான கணக்காளர்
பொதுமக்கள் அமைச்சு
14 ஆம் மாடி, 'சுஹுருபாய', பத்தரமுல்ல.

மின்னஞ்சல்: caminlofinance@gmail.com

தொலைபேசி/ தொலைநகல் இலக்கங்கள்

**தொலைபேசி** : 011-2887307
**நீடிப்பு** : 320/326
**தொலைநகல்** : 011-2887916

**செயலாளர்,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு.**

# பெறுகை அறிவித்தல்!

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வீதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு – மேல் மாகாணம்)

### ஹொரணவில் (வகவத்த) அமைந்துள்ள எஸ்போல்ட் கொங்கிறீட் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் தயாரிப்பு மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்

இந்த அதிகார சபையிலுள்ள வகவத்த எஸ்போல்ட் தொழிற்சாலைக்குத் தேவைப்படும், கீழே குறிபிடப்பட்டுள்ள தயாரிப்பு மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக இத்தால் விலைமனுக் கோரப்படுகின்றது.

**விலைமனு சாராம்சம்**

| விலைமனு எண் | விபரம் | தொகை $M^3$ | விலைமனுப் படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்துகொண்டுள்ள வழங்குநர்கள் தவிர்ந்தது | விலைமனு திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| வகவத்த எஸ்போல்ட் தொழிற்சாலை தொடர்பானது | | | | |
| PRDA/WP/SUP/2021/04 | 0-5 மி மீ கல்தூளை வழங்கல் | $5500M^3$ | ரூ. 2000.00 + பெசேவ | 2021.02.23 பி.ப. 2.30 மணிக்கு |
| | 05-10 மி.மீ கல்தூளை வழங்கல் | $4500M^3$ | | |
| | 10-20 மி.மீ கல்தூளை வழங்கல் | $3000M^3$ | | |

02. இது தொடர்பான விலைமனுக் கோரும் ஆவணத்தொகுதியை, 2021.02.09 முதல் 2021.02.22 அன்று மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 2.45 வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் படிவக் கட்டணத்தின் கீழாக, இந்த அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் இது தொடர்பான விலைமனுப் பிணை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கிப் பிணை மூலமாகவோ பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விலைமனு கையளிப்பிற்கு தகுதி பெறுவதற்காக, விலைமனுத் தொகை 5.00 மில்லியன் ரூபாவிற்கும் மேற்படும் சந்தர்ப்பங்களில் விலைமனுதாரரினால் 1987 இலக்கம் 03 உடைய பொது ஒப்பந்தச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான, கம்பனி பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

04. விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது மற்றும் திறக்கப்படுவது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அச் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்களுக்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்குச் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இலக்கம் 59, சென்ற் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு 12.**

**தொலைபேசி இலக்கம்: 011-5676903**

# ஆர்வத்தை வெளிப்படுத்தல்

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**மத்திய அரசின் கீழான அமைச்சின் பெயர்/பெறுகை உருவகம் : நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவகற்றல் மற்றும் சமூக சுத்தம் பேணல் இராஜாங்க அமைச்சு**

**கொழும்பு மெட்ரோ முறைமையின் பர்பன்லைன் (Purple Line) தொடர்பாக முன்னோடி சாத்தியக்கூறு (PFS) மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளின் (FS) மீளாய்வு மற்றும் சிறு மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஆலோசனை சேவையொன்றை தெரிவு செய்தல்**

**(ஒப்பந்தம் MUD/TDP/Metro (FS)/2021/1)**

இங்கே விபரிக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்தும் தகுதியுள்ள (கீழே விபரிக்கப்பட்டுள்ளது) ஆலோசகர்களை, நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவகற்றல் மற்றும் சமூக சுத்தம் பேணல் இராஜாங்க அமைச்சு சார்பாக, அமைச்சு ஆலோசகர் பெறுகைக்குழு அழைக்கின்றது. ஏறத்தாழ 32 கிலோமீற்றர் நீளமுடைய பர்பன் மெட்ரோலைன் (Purple Metro Line) துறைமுக நகரம் முதல் கடுவலை மற்றும் அத்துருகிரியா வரை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பர்பன் லைன் பகுதியொன்றிற்கு முன்னைய ஆராய்ச்சிக்களை மீளாய்வு செய்தல் மற்றும் சிறுமாற்றங்களை பண்ணல் மற்றும் மிகுதிக்காக சாத்தியக்கூறு ஆராய்ச்சியை மேற்கொள்வதை இந்த சேவையானது உள்ளடக்கியுள்ளது. ஆர்வங்காட்டும் ஆலோசகர்கள், சேவைகளை மேற்கொள்வதற்கு தாம் தகைமை பெற்றுள்ளதைக் குறித்துக்காட்டும் தகவல்களை வழங்கல்வேண்டும் (துண்டு பிரசுரங்கள், நிகரான ஒப்படைகளின் விபரங்கள், நிகரான நிலைமைகளிலான அனுபவம், பதவி நிலையினரிடையே காணப்படும் தகுந்த திறமைகள் போன்றவை)

ஆலோசகர்கள், தமது தகைமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக கூட்டு முயற்சியில் ஈடுபடலாம், தேசிய நிறுவனங்களுடன் அல்லது சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து கொள்ளலாம்.

CQS முறை பின்பற்றப்பட்டு தேசிய பெறுகை முகவராண்மையால் வெளியிடப்படும், ஆலோசகர்களைத் தெரிவு செய்தல் மற்றும் தொழிலுக்கமர்த்தல் தொடர்பான வழிகாட்டல்கள், ஓகஸ்ட் 2007 இல் காட்டப்பட்டுள்ள நடைமுறைக்கமைவாக ஒரு ஆலோசகர் தெரிவு செய்யப்படுவார்.

ஆர்வங்காட்டும் ஆலோசகர்களுக்கு, 0900 மணிமுதல் 1500 மணிவரை, கிழேயுள்ள முகவரியில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆர்வ வெளிப்படுத்தல்கள் பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.**

(அ) நிகரான ஒப்படைகளின் விபரம், வாடிக்கையாளரின் பெயர், ஒப்படையின் தன்மை, அமைவிடம், ஒப்பந்தப் பெறுமதி மற்றும் காலம் போன்றவற்றைக் குறித்துக் காட்டும், நிகரான நிலைமைகளிலுள்ள அனுபவம்.
(ஆ) உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முக்கிய பதவி நிலையினரின் பெயர்கள் மற்றும் தகைமைகள் உள்ளிட்ட கம்பனியின் அந்தஸ்த்து
(இ) ஏதேனுமொரு நிறுவனம் மற்றும் தனி நபருடன் இணைந்து கொள்வதற்கான அபிப்பிராயங்கள் ஏதுமிருப்பின் அவை உள்ளடக்கப்படல் வேண்டும்.
(ஈ) இந்த ஒப்படையை அடைந்து கொள்வதற்கான முன்மொழிவுகள்
(உ) இலங்கையில் செயற்படுவதற்காக, சர்வதேச நிறுவனத்தின் கடந்த வருட கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கைகள்
(ஊ) ஏனைய உரித்தான தகவல்கள்

**தகைமைகள்**

- குறித்த முன்னணி நிறுவனமானது, இலங்கையில் வர்த்தகத்தை மேற்கொள்ள பதிவு செய்யப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனமாக இருத்தல் வேண்டும். (வியாபார பதிவுச் சான்றிதழ், வரி செலுத்துவதற்கு பதிவு செய்து கொண்டிருத்தல் மற்றும் செயற்பாட்டிலுள்ள பெசேவ பதிவுச்சான்றிதழ் தேவைப்படும்)
- ஏனைய அமைச்சுக்களுக்கு, நிகரான ஒப்படைகள் தொடர்பான சேவைகளை வழங்கி மற்றும் / அல்லது மத்திய அரசின் கீழான அமைச்சிற்கான நிகரான ஒப்படைகளை வழங்கி சர்வதேச ஆலோசகர் நிறுவனங்கள் அவற்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- சர்வதேச ஆலோசகர்கள், இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கான பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியவர்களாக இருக்கக் கூடாது.
- ஏனைய தகவல்களை, அலுவலக நேரங்களில் 0900 மணிமுதல் 1500 மணிவரை, பத்தரமுல்ல, செத்சிரிபாய படிநிலை II, வின்ங் "A", 13ஆம் மாடி, பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டத்தின் (WRTDP) பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், பொறியியலாளர் பி.திசாநாயக்காவிடமிருந்து (+94718227009) பெற்றுக்கொள்ளலாம்.
- ஆர்வ வெளிப்படுத்தல்கள், 2021 பெப்ரவரி 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், 1400 மணிவரை, கீழேயுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசகர்களின் பெறுகைக்குழு,**
**நகர அபிவிருத்தி,கரையோர பாதுகாப்பு, கழிவகற்றல் மற்றும் சமூக சுத்தம் பேணல் இராஜாங்க அமைச்சு**
**தொழில்நுட்ப பிரிவு, 18ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபுதிபுர வீதி, பத்தரமுல்ல, இலங்கை.**

முகவரி
மேற்கு பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம்
நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவகற்றல் மற்றும் சமூக சுத்தம் பேணல், இராஜாங்க அமைச்சு,
13ஆம் மாடி, வின்ங் "A", செத்சிரிபாய, படிநிலை II,
பத்ரமுல்ல, இலங்கை.

**தொ.பே : 0112870751**
**பெக்ஸ் : 0112870588**
**மின்னஞ்சல் : projectdirector.wrtdp@gmail.com**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல்

**தேசிய மனு கோரல் போட்டி**

**(2021/2022) ஒரு வருட காலத்திற்கான 100,000 கி.மீ திட்டத்திற்கான கட்டுமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ட்ரக்குகள் மற்றும் டிராக்டர்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்**

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக (2021/2022) ஒரு வருட காலத்திற்கான 100,000 கி.மீ திட்டத்திற்கான கட்டுமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ட்ரக்குகள் மற்றும் டிராக்டர்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல | ஒப்பந்த இலக்கம் | மாவட்டம் | இயந்திர வகை |
|---|---|---|---|
| 01. | RDA/DPR/HMCP/2021/17 | மத்திய | எக்ஸ்கவேடர் (7 டொன்), எக்ஸ்கவேடர் (12 டொன்), எக்ஸ்கவேடர் (20 டொன்), பெக்கோ லோடர் (JCB), டம்ப் ட்ரக் (டிப்பர் ட்ரக்)-1 க்யூப், டம்ப் ட்ரக் (டிப்பர் ட்ரக்)-2 க்யூப், டம்ப் ட்ரக் (டிப்பர் ட்ரக்)-3 க்யூப், ட்ரெக்டர் பவுசர் (3000 லீ), தண்ணீர் பவுசர் ட்ரக் (3000 லீ), தண்ணீர் பவுசர் ட்ரக் (6000 லீ), கம்ப்ரசர் ரெமர், போக்கர் வைப்ரேடர், மோட்டர் கார்டர் (120-142 HP), அஸ்பெல்ட் கட்டர், அஸ்பெல்ட் பவெர், ப்ரேக்கர்ஸ், ஜெயின் சோ, ஜெனரேட்டர், ப்யுமேடிக் ட்யியர் ரோலர், ட்ரெக்டர் வித் ரோட் ப்ரூம், ஸ்ப்ரேயர்ஸ், ஸ்டெடிக் ரோலர், ட்ரெக்டர் வித் பவுசர், தண்ணீர் பம்ஸ் (3 In - ஸ்லூஜ்), வீல் லோடர், ட்ரெக்டர் வித் ட்ரெயிலர், மொபைல் லயிட் டவர் ப்லாண்ட், கொங்க்ரீட் மிக்சர் (200லீ), கொங்க்ரீட் மிக்சர் (400 லீ), ஸ்கிட் ஸ்டீர் லோடர்,பார் கட்டர், டபல் ட்ரம் ரோலர் - வைப்ரேடிங் 10 டொன், டபல் ட்ரம் ரோலர் - வைப்ரேடிங் 5 டொன், டபல் ட்ரம் ரோலர் - வைப்ரேடிங் பெடிஸ்ட்ரெயின், எயார் கம்போசர், கம்பெக்ட் வீல் லோடர், பிடுமேன் டேன்கர் ட்ரெக், பிடுமன் ஸ்ப்ரேயர் ட்ரக், ஸ்மூத் ரோட் ரோலர், ட்ரக் ப்லான்ட் கம்பெக்டர், |
| 02. | RDA/DPR/HMUvaP/2021/18 | ஊவா | |
| 03. | RDA/DPR/HMSabP/2021/19 | சப்ரகமுவ | |
| 04. | RDA/DPR/HMNWP/2021/20 | வடமேற்கு | |
| 05. | RDA/DPR/HMNCP/2021/21 | வட மத்திய | |
| 06. | RDA/DPR/HMWP/2021/22 | மேற்கு | |
| 07. | RDA/DPR/HMSP/2021/23 | தெற்கு | |
| 08. | RDA/DPR/HMNP/2021/24 | வடக்கு | |
| 09. | RDA/DPR/HMEP/2021/25 | கிழக்கு | |
| 10. | RDA/DPR/HMEP(Akkarei)/2021/26 | அக்கரைப்பற்று கிழக்கு | |

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை வழங்கல் 4 ஆம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர" வீதி அபிவிருத்தி அதிகார சபை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை (தொலைபேசி- 011-2884790, 2046482 மற்றும் பெக்ஸ்- 011-2884790) காரியாலயத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதுடன் காரியாலய நேரங்களில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி மனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான மனு ஆவணங்களை பணிப்பாளர் (வழங்கல்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, 4 ஆவது மாடி, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லையில் "பணிப்பாளர் நாயகம்" வீதி அபிவிருத்தி அதிகார சபை, 4 ஆவது மாடி, எனும் பெயருக்கு எழுதப்பட்ட, மீள் செலுத்தப்படாத கட்டணமான ரூபா.5,000/- வட் வரிகளுடன் (90 நாட்கள் வரை செல்லுபடியாகும்) காசுக்கட்டளையை செலுத்தி 2021.02.09 ஆம் திகதியிலிருந்து 2021.03.01 ஆம் திகதி வரை 09.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியினுள் பெற்றுக்கொள்ள முடியும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை 2021.03.02 ஆம் திகதி 14.00 மணித்தியாலங்களுக்கு முன் பணிப்பாளர் (வழங்கல்), வீதி அபிவிருத்தி அதிகார சபை 04 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. மனுக்கள் 2022.01.31 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் (CSC)**
**(துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு)**

# வழங்கல் அறிவித்தல்
# விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரித்தல் சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்கள்**

1. வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனமானது கொழும்பில் இயங்கிவரும் 100% அரச உரிமம் பெற்ற நிறுவனமாகும். வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் குழு தலைவரினால் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைமை காரியாலயத்தின் சுத்திகரித்தல் சேவைகளை வழங்குவதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைமை காரியாலயம், 27, MICH கட்டிடம், ஸ்ரீமத் ரசிக் பரீட் மாவத்தை, கொழும்பு 01 இல் வேலைத்தள பரீட்சிப்பை மேற்கொண்டதன் பின் குறித்த சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.
3. சேவை ஒப்பந்தமானது ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன், பின் சேவைகளின் செயல்திறனை மதிப்பீட்டின் படி ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் 02 ஆண்டுகளுக்கு மேலும் நீடிக்கப்படும்.
4. சேவையை ஆரம்பிப்பதற்காக தற்காலிகமாக உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி 01.04.2021 ஆம் திகதியாகும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் காரியாலய வேலைநாட்களில் 10.02.2021 ஆம் திகதி தொடக்கம் 01.03.2021 ஆம் திகதி வரை மு.ப 09.30 மணி தொடக்கம் பி.ப 03.00 மணி வரையிலான காலப்பகுதினுள் மீள் செலுத்தப்படாத ரூபா. ஆயிரம் (ரூபா.1,000/= + வட் வரிகள்), கட்டணத்தை நிர்வாகப்பிரிவு, வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்துவதன் மூலம் பொது நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஆங்கில மொழியிலான மனு ஆவணத்தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம்.
6. முத்திரையிடப்பட்ட மனுக்களை 27, MICH கட்டிடம், ஸ்ரீமத் ரசிக் பரீட் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் **தலைவர், வழங்கல் பிரிவில்** மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மனுக்கோரல் நேரம் நிறைவடையும் முன் இடவேண்டும் அல்லது பதிவுத்தபாலின் மூலம் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். மனு ஆவணங்களை இடும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "**சுத்திகரித்தல் சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**" எனத் தொளிவாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
7. மனுக்கோரல் நேரமானது 02.03.2021 ஆம் திகதி பி.ப 02.30 மணியுடன் நிறைவுபெறுவதுடன், மனுக்கோரல் நேரம் முடிந்தவுடன் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மேலும் அனைத்து மனுக்களும் வங்கி உத்தரவாத வடிவில் ரூபா.50,000 பெறுமதியான மனுப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் கோரப்படுவது பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஆகும்
   அ). நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   ஆ). அரசாங்க விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப வரி செலுத்தும் நிறுவனமாக இருக்க வேண்டும்
   இ) எந்தவொரு காரணத்திற்காகவும் ஒப்பந்த காலத்தில் விலை திருத்தங்கள் அனுமதிக்கப்படாது.
   ஈ) பணியமர்த்தப்பட வேண்டிய ஊழியர்கள் மிகவும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.
   உ) முந்தைய அனுபவம்
   ஊ) வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள் இருப்பின்
9. அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர் கையெழுத்திட்ட மனுக்களை வழங்கும் நிறுவனத்தின் கடித தலைப்பில் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
10. பொருந்தக்கூடிய மற்றும் மேற்கோள்காட்டப்பட்ட விலைகள் பொருந்தக்கூடிய வரி இல்லாமல் இருக்க வேண்டும் மேலும் வரியை தனித்தனியாகக் குறிக்கவும்.
11. மேலதிக விபரங்களை நிர்வாகத் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், 27, MICH கட்டிடம், ஸ்ரீமத் ரசிக் பரீட் மாவத்தை, கொழும்பு 01 (தொலைபேசி: 011-2326077/ கை.தொலைபேசி- 071-0215720) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வழங்கல் குழு**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**
**இல- 27, MICH கட்டிடம்,**
**ஸ்ரீமத் ரசிக் பரீட் மாவத்தை,**
**கொழும்பு 01.**

# எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி.
## பகிரங்க ஏலவிற்பனை

எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 755/1, பன்னிபிட்டி வீதி, பத்தரமுல்லை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 434, E.W பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 61/2, கண்டி வீதி. திஹாரிய |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 19, பிரதான வீதி, கேகாலை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 81, கண்டி வீதி, வரக்காபொல |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 13, புகையிரத நிலைய வீதி, மாத்தறை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 02, எச்.வி. கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 149, பிரதான வீதி, தெனியாய |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல.65/A, ஸ்ரீசதர்மாவத்தை, மாளிகாவத்தை கொழும்பு 10. |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 282 நாகலகம் வீதி, கொழும்பு 14 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 52/17, கொத்தாடுவ புதிய நகரம், கொத்தாடுவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 21, புனித ஜோசப் வீதி .கொழும்பு 14 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 9 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 66, ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 197, செட்டியார் தெரு,கொழும்பு 11. |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம |
| 01/08/15/22 பங்குனி 2021 | ரஜரட்ட கட்டிடம், ,பிரதான வீதி, கதுருவெல, பொலன்னறுவை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம் |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை |
| 01/08/15/22 பங்குனி 2021 | பிரதான வீதி, மெதிரிகிரிய |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 24 ,சிலாபம் வீதி, ஆனமடுவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டி |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரெலிய |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம் |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம் |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 57, வேயங்கொட வீதி, மினுவாங்கொட |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 229/1, கடவத்தை வீதி, கனேமுல்லை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 69, கிரி உல்ல வீதி திவுலபிடிய |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 107, புனித ஜோசப் வீதி, நீர்கொழும்பு |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 75A சிலாபம் வீதி, மாரவில |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 18, எலகந்தை, ஹெந்தலை, வத்தளை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 17, புகையிரத நிலைய வீதி. ஹெந்தலை சந்தி, வத்தளை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவெல |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 722, வராகொட வீதி, விகாரைச் சந்தி, களனி |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 139/6, கண்டி வீதி, கடவத்தை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 66, காலி வீதி, கல்கிஸ்ஸை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 11, கல்தமுல்லை வீதி, மொரட்டுவை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 3 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 245, ஸ்ரீசங்கராஜா மாவத்தை, கொழும்பு 10 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 54, டீ.எஸ். சேனாநாயக்க மாவத்தை, பொரளை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 556,558, மருதானை வீதி, கொழும்பு 10 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 10 புகையிரத நிலைய வீதி, மொறட்டுவ |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 68, ஹொரணை வீதி, பிலியந்தலை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 227, டீ சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமாகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 69 தெஹிவளை வீதி, மஹரகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 124/A, துடுகெமுனு வீதி, கொஹுவல |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 18, கெசெல்வத்தை, பாணந்துறை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 508, காலி வீதி, பாணந்துறை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரணை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 534, காலி வீதி, வாத்துவ |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 175/A, காலி வீதி, பேருவளை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 358, காலி வீதி, அளுத்கம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 124, காலி வீதி, தெஹிவளை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 676, காலி வீதி, கொழும்பு 3 |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 150, பிரதான வீதி, காலி |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 598E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 56,57, எட்வின் விக்ரமரத்ன கடைத்தொகுதி, புதிய நகரம், மஹியங்கனை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 10/2, இலங்கை வங்கியின் எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 226, டீ.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்டை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 55, கீழ் வீதி, பதுளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 3, நுவரெலிய வீதி, வெலிமடை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 26, வங்கி வீதி, பதுளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 71, குயீன் எலிசபத் மாவத்தை, நுவரெலியா |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 473, நுவரெலிய வீதி, புசல்லாவை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 22, நுவரெலிய வீதி, கம்பளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 115, கொட்டுகொடல்ல வீதி, கண்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 52, டன்பார் வீதி, ஹட்டன் |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 66, நாவலபிட்டி வீதி, கம்பளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 395, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 367/1, அளுத்மாவத்தை, கொழும்பு 15 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 81, முகத்துவாரம் வீதி, கொழும்பு 15 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 03, புனித லூசியாஸ் வீதி ,கொட்டாஞ்சேனை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரில், அம்பாறை |
| 04/12/18/25 பங்குனி 2021 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 9 |
| 04/12/18/25 பங்குனி 2021 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 04/12/18/25 பங்குனி 2021 | பிரதான வீதி, பொத்துவில் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 25, எட்டியாந்தோட்டை வீதி, அவிசாவளை |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 49 சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 21, புதிய நகரம் வீதி, எம்பிலிப்பிட்டி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொடை |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 301, மொகமட் அலியார் கட்டிடம், பிரதான வீதி, காத்தான்குடி 01 |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா |
| 05/13/19/26 பங்குனி 2021 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 05/13/19/26 பங்குனி 2021 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 05/13/19/26 பங்குனி 2021 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |
| 05/13/19/26 பங்குனி 2021 | சந்தைத் தொகுதிக்கு எதிரில், பிரதான வீதி, செங்கலடி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 187, பிரதான வீதி, மன்னார் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா |
| 05/13/19/26 பங்குனி 2021 | 1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு |
| 05/13/19/26 பங்குனி 2021 | PW வீதி, முல்லைத்தீவு |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 55, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 05/13/19/26 பங்குனி 2021 | பிரதான வீதி, மல்லாவி |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம் உள்ளது

**LB FINANCE**

சிரேஷ்ட முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி
275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, (OPA கட்டடம்) கொழும்பு 07.

---

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

இல. 34/10, சரசவி ஒழுங்கை, காசல் வீதி, பொரல்லை, கொழும்பு 08ல் உள்ள சஞ்சீவ ரொஷான் ஜயவர்தன ஆகிய நான் இல. 105 என்ற இலக்கத்தையும் 17-01-2018 திகதியை கொண்டதும் பிரசித்த நொத்தாரிஸ் எஸ்.எச்.ஜி. விக்ரமரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தத்துவமானது இல்லாதொழிக்கப்பட்டு இரத்து செய்யப்பட்டு மற்றும் ஒழிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன்.

**சஞ்சீவ ரொஷான் ஜயவர்தன**
**இல. 34/10, சரசவி ஒழுங்கை,**
**காசல் வீதி, பொரல்லை, கொழும்பு 08.**

---

## கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8ம் பிரிவின் பிரகாரம்) 2021 ஜனவரி 29ம் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
ஸ்பைசஸ் ஸ்பெசஸ் (பிறைவட்) லிமிடட்

**கம்பனியின் இல :** பீவீ 117330

**முகவரி:**
இல. 7, மாகும்புர வீதி, மாகும்புர,
கொட்டாவ, பன்னிப்பிட்டிய.

**கம்பனியின் புதிய பெயர்:**
ஈ. ஐ. மெனு∴பெக்சரிங் (பிரைவட்) லிமிட்டட்

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட
கம்பனி செயலாளர்கள்
இல 20/A, வல்பொல வீதி, அக்கோனா, அங்கொடை.

---

## இலக்கம் 649 உடைய விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்ல, கொஸ்வத்த, தலங்கம வடக்கு, சூரிய மாவத்தை, இலக்கம் 145/5 இல் வதியும் தே.அ.இ.703412467V உடைய பஸ்நாயக்க முதியன்சேலாகே பிரியந்த ஜானக்க பண்டார மற்றும் தே.அ.இ. 806430820V உடைய பஸ்நாயக்க முதியன்சேலாகே நதீஷா அயோமி ஆகிய எம்மால் சேபாலிக்கா நாணயக்கார பிரசித்த நொத்தாரிஸ் மூலமான இலக்கம் 649 மற்றும் 2008.02.07 திகதியையுடைய அற்றோணி தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதால், இது முதற்கொண்டு மேற்படி இலக்கம் 649 உடைய அற்றோணி தத்ததுவம் மீது, இம்புல்கொடை, இஹலயாகொட, விஹார மாவத்தை, இலக்கம் 255E இல் வதியும் தே.அ.இ. 475132769V உடைய இராஜபக்ஷகே மியுலின் ராஜபக்ஷ என்பவர் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும் செல்லுபடியற்றதென அனைவருக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

---

## இலக்கம் 2686 உடைய விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இம்புல்கொடை, இஹலயாகொடை, விஹார மாவத்தை, இலக்கம் 225E இல் வதியும் தே.அ.இல. 696161330ஏ, உடைய பஸ்நாயக்க முதியன்சேலாகே பிரியாணி புஷ்பிக்க பண்டார ஆகிய என்னால் சேபாலிக்கா நாணயக்கார பிரசித்த நொத்தாரிஸ் மூலமான, இலக்கம் 2686 உடைய மற்றும் 2019.10.13 திகதிய விசேட அற்றோணி தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாகவும் இது முதற்கொண்டு மேற்படி இலக்கம் 2686 உடைய விசேட அற்றோணி தத்துவத்தின் மீது இம்புல்கொடை, இஹலயாகொடை, விஹார மாவத்தை, இலக்கம் 255E இல் வதியும் தே.அ.இ. 475132769V உடைய இராஜபக்ஷகே மியுலின் ராஜபக்ஷ என்பவர் மேற்கொள்ளும் எவ்வித செயற்பாடுகளும் செல்லுபடியற்றதென அனை வருக்கும் அறிவிக்கின்றேன்.

---

**''சுகாதாரம், சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு''**

**மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

**கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலை**

### சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் – 2021ஆம் வருடம்

தகுதிவாய்ந்த சிற்றுண்டிச்சாலையாளர்களிடமிருந்து நாளாந்தம் 1000 - 1200 எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைக்காக வரும் 20x20 அடி பரப்பளவு விஸ்தீரணத்தைக் கொண்ட நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை 2021ஆம் வருடத்தில் நடாத்திச் செல்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கண்டி த.பெ. இல. 56, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தையில் அமைந்துள்ள கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2021-02-08ஆம் திகதி முதல் 2021-03-03ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை கணக்கிடல் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2021-02-08ஆம் திகதி முதல் 2021-03-03ஆம் திகதி பகல் 12.00 மணி வரை விலைமனுக்கள் வழங்கப்படும் என்பதுடன் 2021-03-03ஆம் திகதி 12.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவுறும் என்பதுடன் அன்றைய தினமே பகல் 12.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல்'' என மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களுக்கு 081-2234238 அல்லது 081-2236452 எனும் தொலைபேசி இலக்கங்களில் விசாரிக்கவும்.

**தலைவர்,**
**பிராந்தியக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**கண்டி.**

---

## விலைமனுக்களுக்கான கேள்வி (RFB)

**நீர்ப்பாசன அமைச்சு**

**தல்பிட்டிகள நீர்த்தேக்க செயற்றிட்டம்**

### உத்தேசிக்கப்பட்டுள்ள அணைக்கட்டு வேலைத்தளத்திற்கான அணுகுவழிக்கான மேம்படுத்தல்

### விலைமனு இல.: PD/TRP/WP/ARDA/2021/06-02

01. 600மீ. நீளமுள்ள கொன்கிறீட் பதித்த வீதியை நிர்மாணிப்பதற்காக நீர்பாசன அமைச்சின் செயலாளரின் சார்பாக, தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். பதுளை மாவட்ட கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் உத்தேசிக்கப்பட்டுள்ள தல்பிட்டிகள அணைக்கட்டு வேலைத்தளத்திற்கான (வாசனாகம இலிருந்து தல்பிட்டிகள நீர்த்தேக்க அணைக்கட்டு வேலைத்தளம் வரையுமானது) அணுகுவழிக்கான மேம்படுத்தல்களை இப்பணியானது அடக்குகின்றது. நிர்மாணக் காலப்பகுதியானது 3 மாதங்களாகும்.
02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

    ஆகக் குறைந்த CIDA பதிவுத் தரமானது சி-5 ஆகவிருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைப்படுத்தலுக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு: விலைமனுக்கோரல் ஆவணங்களில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 055-2245626 என்ற தொலைபேசி / தொலைநகல் இலக்கம் மற்றும் **pdthalpitigala@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக கந்தகெட்டிய, நீர்ப்பாசன திணைக்களம், தல்பிட்டிகள நீர்த்தேக்க செயற்றிட்ட செயற்றிட்ட பொறியியலாளரிடமிருந்து பெற்று வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
06. 2021.02.09 ஆம் திகதியிலிருந்து 2021.03.01 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 7500 ரூபாவிற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். ஒவ்வொரு ஆவணத் தொகுதிக்கும் ரொக்கப் பணத்திலேயே பணக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும்.
07. 2021.03.02 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2021.03.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் விரைவாகவே திறக்கப்படும்.
08. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
09. கந்தகெட்டிய, நீர்ப்பாசன திணைக்கள தல்பிட்டிகள நீர்த்தேக்க செயற்றிட்டத்தில் 2021.02.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
10. அனைத்து விலைமனுக்களும் 375,000 ரூபா பெறுமதியுள்ள ''விலைமனுப்பிணையொன்றுடன்'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021.06.29 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டதும் "Improvements of Access Road to Proposed Thalpitigala Dam Site" (வாசனாகமவிலிருந்து தல்பிட்டிகள நீர்த்தேக்க அணைக்கட்டு வேலைத்தளம் வரையிலானது) என்பதும் அத்துடன் PD/TRP/WP/ARDA/2021/06-02 என்ற விலைமனு இலக்கமும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**தல்பிட்டிகள நீர்த்தேக்க செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன திணைக்களம்,**
**கந்தகெட்டிய.**
**தொலைபேசி / தொலைநகல் இல.: 055-2245626**

---

## உடுபத்தாவ பிரதேச சபை

உடுபத்தாவ பிரதேச சபைக்குச் சொந்தமான புளொக் கற்கள் உற்பத்தி செய்யும் 2 இயந்திரங்கள் சகிதம் 130.1 மீற்றர் நீளமும் 20.9 மீற்றர் அகலமும் கொண்ட இடப்பரப்பை 3 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கொள்வனவாளரிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்வி விண்ணப்பப் படிவங்களை 2021-02-09ஆம் திகதி முதல் 2021-02-23ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 10.30 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
02. அன்றைய தினமே மு.ப. 10.00 மணி வரை உடுபத்தாவ பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கேள்விப் படிவங்கள் மற்றும் இயைபுடைய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**
அலுவலகம் - 037-2286572
வருமானப் பிரிவு - 0374947087
**தலைவர்,**
**பிரதேச சபை, உடுபத்தாவ.**

---

## மேல் மாகாண சபை

**மாகாண பொறியியலாளர் அலுவலகம்**

**விலைமனு அழைப்பு**

### பிழை திருத்தம்

2021.01.20 மற்றும் 2021.02.03 அன்று "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" பத்திரிகைகளில் பிரசுரமான விலைமனு அறிவித்தலில், இலக்கம் 10 நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள, "நிர்மாணிப்புக்காலம்" என்பது "விலைமனு செல்லுபடிக்காலம்" என திருத்தம் செய்யப்பட வேண்டும்.

2021.01.20ஆம் திகதி பத்திரிகையில், நிரல் இலக்கம் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு செல்லுபடிக்காலம், 60 நாட்கள் எனக் குறிப்பிட்டுள்ளவை 63 நாட்கள் எனவும், 75 நாட்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவை 77 நாட்கள் எனவும் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

இது தொடர்பாக ஏற்பட்ட தடங்கல்களுக்கு வருந்துகிறோம்.

**பொறியியலாளர் பெறுகை,**
**பெறுகைப்பிரிவு,**
**பொறியியலாளர் அலுவலகம் (மே.மா)**
**5ஆம் மாடி, 204,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**

**தொ.பே - 0112092504**
**பெக்ஸ் - 0112092505**

---

## பெறுகை அறிவித்தல் !

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வீதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு – மேல் மாகாணம்)**

**ஹோமாகம கைத்தொழில் பேட்டையிலுள்ள உள்ளக வீதியை மேம்படுத்துவதற்காக ஏபீசீ கலப்பு கல்லைப் பெற்றுக்கொள்ளல்**

இந்த அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும், ஹோமாகம கைத்தொழில் பேட்டையில், உள்ளக வீதிகளை மேற்படுத்துவது தொடர்பாக ஏ.பீ.சீ கலப்பு கல்லை பெற்றுகொள்வது தொடர்பாக விலைமனுக் கோரப்படும்.

| விபரம் | தேவைப்படும் தொகை |
|---|---|
| 1. ஏபீசீ கலப்பு கல்லை வழங்கல் | 5000 கன மீற்றர் |

02. இது தொடர்பான விலைமனுக் கோரும் ஆவணத்தொகுதியை, 2021.02.10 முதல் 2021.02.24 அன்று மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 2.45 வரை ரூ. 2160.00 விலைமனுப் படிவக் கட்டணத்தின் கீழாக, இந்த அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் இது தொடர்பான விலைமனுப் பிணை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கிப் பிணை மூலமாகவோ பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்
03. விலைமனு கையளிப்பிற்கு தகுதி பெறுவதற்காக, விலைமனுத் தொகை 5.0 மில்லியன் ரூபாவிற்கும் மேற்படும் சந்தர்ப்பங்களில் விலைமனுதாரரினால் 1987 இலக்கம் 03 உடைய பொது ஒப்பந்தச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான, கம்பனி பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.
04. விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது மற்றும் திறக்கப்படுவது, 2021.02.25 அன்று மு.ப. 10.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அச் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்களுக்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்குச் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இலக்கம் 59, சென்ற் செபஸ்தியன் மேடு, கொழும்பு 12.**
**தொலைபேசி இலக்கம்: 011-5676903**



# உளவள ஆலோசனை ஆசிரியர் நியமனம் வழங்கக் கோரி பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்



மாணவர் உளவள ஆலோசனை ஆசிரியர் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட தமக்கான நியமனங்களை வழங்குமாறு கோரி நேற்று(08) பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமேல் மாகாண மாணவ ஆலோசனை ஆசிரியர் தேர்வில் தேர்வு செய்யபட்ட தம்மை இழுத்தடிப்பு செய்யாமல் உடனடியாக நியமனம் வழங்குமாறு கோரி வடமேல் மாகாண சபை அலுவலகத்திற்கு முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

2018 ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல பாடசாலை மாணவர் ஆலோசனை பணிகளுக்காக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டன. இவ் விண்ணப்பங்கள் மாகாண ரீதியாக வடமேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண பாடசாலைகளுக்காக கோரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனடிப்படையில் 2018 நவம்பர் 25 ஆம் திகதி விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை கொழும்பில் நடைபெற்றது. இதில் தெரிவானோருக்கான நேர்முகப் பரீட்சை 2019 மே 31 ஆம் திகதியில் இருந்து ஜூன் 10 ஆம் திகதி வரை பத்தரமுல்ல, இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

அதன்பின் குறித்த இரு தேர்விலும் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான பிரயோக பரீட்சை கடந்த வருடம் ஜனவரி மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இதன் இறுதி பெறுபேறுகள் 2020 மார்ச் 12ஆம் திகதி அன்று பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் நீக்கப்பட்டு திருத்தங்களுடன் 2020 செப்டம்பர் 08ம் திகதி மீண்டும் பெறுபேறுகள் வெளியாகின.

இதன்படி தெரிவு செய்யப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கான மாணவ ஆலோசனை ஆசிரியர்களுக்கான நியமனங்கள் கடந்த ஜனவரி 4 ஆம் திகதி வழங்கப்பட்டது. எனினும் வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாண பாடசாலைகளுக்கான நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவான மாணவ ஆலோசனை ஆசிரியர்கள் விசனம் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தில் 'காஷ்மீர் நட்புறவு தினம்' அனுஷ்டிப்பு

**தெஹிவளை, கல்கிஸ்ஸ விசேட நிருபர்**



சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் காஷ்மீரிகளுக்கு பாகிஸ்தானின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தவும் 'காஷ்மீர் நட்புறவு தினம்' கொழும்பில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் தலைமையில் (05) அனுஷ்டிக்கப்பட்டது.

பாகிஸ்தான் பதில் உயர் ஸ்தானிகர் தன்விர் அகமட் தனது உரையில், பாகிஸ்தான் அரசாங்கத்தின் மற்றும் மக்களின் காஷ்மீர் மீதான நம்பிக்கையை வலியுறுத்தினார்.

பாகிஸ்தான் எப்போதும் தங்கள் காஷ்மீர் சகோதர சகோதரிகளுடன் தோளோடு தோள் நிற்பார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையும் பாகிஸ்தானும் இணைந்து கொழும்பில் பாகிஸ்தான் கலாசார நிலையம் ஒன்றை நிறுவதற்கு அனுமதி கிடைத்துள்ளதென்றும் பாகிஸ்தான் பிரதமா' இம்ரான்கான் ஒரு விளையாட்டு வீரர் அவர் இலங்கை பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே விளையாட்டுத்துறை அமைச்சர் ஊடக பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுசரணை வழங்க உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# சாலியபுர பகுதியில் மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்தில் தாதி பலி

***அநுராதபுரம் தினகரன் நிருபர்***

அநுராதபுரம் மதவாச்சி பிரதான வீதியின் சாலியபுர பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் பஸ் வண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் குடும்ப நல சுகாதார தாதியொருவர் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை சாலியபுர புளியங்குளம் விகாரைக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் தெரிவித்தனர். ரம்பாவ வைத்தியசாலையில் சேவை செய்யும் அநுராதபுரம் தம்மன்னாவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 52 வயதுடைய குடும்பநல தாதி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. மோட்டார் சைக்கிளில் ரம்பாவ வைத்தியசாலைக்கு கடமைக்கு சென்று கொண்டிருக்கும் போது பஸ் வண்டியொன்று மோட்டார் சைக்கிளில் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான தாதியை சிகிச்சைக்காக அநுராதபுரம் போதணா வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது அவர் உயிரிழந்துள்ளார் என்பது மேலும் தெரியவந்துள்ளது.

விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய ரஜரட்ட பல்கலைக்கழக பஸ் வண்டியின் சாரதியை பொலிசார் கைது செய்துள்ளனர்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



பறகஹதெனிய பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் 73 வது சுதந்திர தின நிகழ்வு பள்ளிவாசல் முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் ஞாபகார்த்த மரக்கன்று நடுவதையும் கலந்து கொண்ட நிர்வாகத்தினரையும் காணலாம். (படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)


# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைபவர்களுக்கான அறிவித்தல் 2019/2020

**2019/2020 ஆம் கல்வியாண்டில் அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைபவர்கள் மடிக்கணினிகளை கொள்வனவுசெய்ய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் முன்னெடுப்பு**

**ஒரு விசேட கடன் திட்டம்**

பாரம்பரிய கல்விக் கோட்பாடு கடந்த சில வருடங்களில் முற்றிலும் மாறிவிட்டது. ஒரு வகுப்பறையில் பௌதீக ரீதியாக இருப்பது இப்போது புதிய சகாப்தத்தில் நுழையும் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரே ஒரு கற்றல் தெரிவு அல்ல - இணையத்தளத்தினூடான கல்விப்புரட்சி.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவர்களின் தேவையை அறிந்து, புதிதாக நுழைபவர்களுக்கு - 2019/2020, மக்கள் வங்கியுடன் இணைந்து ஒரு மடிக்கணினியை கொள்வனவு செய்வதற்கான வசதியை ஏற்படுத்திக்கொடுக்க தீர்மானித்துள்ளது.

குறித்த மாணவர்கள் ஒரு மடிக்கணினியை கொள்வனவு செய்வதற்காக ஒரு இலட்சம் ரூபாய் (ரூ.100,000/-) பெறுமதியான விசேட கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக முறைமையின் நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம், மாணவர்கள் தங்களின் தேவைகளுக்கு பொருந்தக்கூடிய மடிக்கணினிகளை தெரிவுசெய்வதற்கு மூன்று விருப்பத்தெரிவுகள் உள்ளன.

மடிக்கணினிகளின் விவரக்குறிப்புகள் மற்றும் விற்பனை விலைகளுடன் பரிந்துரைக்கப்பட்ட வழங்குநர்களின் பட்டியல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (https://www.ugc.ac.lk/) வெளியிடப் பட்டுள்ளது. வேறுபட்ட திறன்களின் அடிப்படையில் மடிக்கணினிகள் ரூ.80,500/- முதல் ரூ.177,500/- வரையான விலைகளில் கிடைக்கின்றன. ஒரு மாணவர் தேர்ந்தெடுத்த மடிக்கணினியின் விலை கடன் வசதியை விட அதிகமாக இருந்தால், மாணவர்கள் மேலதிகமான தொகையை காசாக செலுத்த வேண்டும் அல்லது விற்பனையாளருடன் வேறு ஏதேனும் ஏற்பாட்டினை செய்ய வேண்டும். மாணவர்கள் கொள்வனவுக்கான கட்டளையினை பிறப்பித்து எட்டு (08) வாரங்களுக்குள் மடிக்கணினிகளை விநியோகிப்பதற்கு வழங்குநர்கள் இணங்கியுள்ளனர்.

**கொள்வனவு செய்யக்கூடிய மாணவர்களின் தகவல்களுக்காக முன்மொழியப்பட்ட திட்டத்தின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.**

அ) **தகுதி** - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ்வரும் அரச பல்கலைக்கழகங்களில் 2019/2020 ஆம் கல்வியாண்டில் பதிவு செய்த மாணவர்கள்

ஆ) **நடைமுறை** - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக - **https: www.ugc.ac.lk**

இ) **திருப்பிச் செலுத்தும் திட்டம்** - மூலதனத்தினை செலுத்த நான்கு ஆண்டு தயவுக்காலத்துடன் ஆறு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் திட்டம்

ஈ) **உத்தரவாதம்** - நான்கு ஆண்டுகால உத்தரவாதம்

உ) **மைக்ரோசா.ஃப்ட் மென்பொருள் (Microsoft Software)** - பரிந்துரைக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மடிக்கணினிகளை கொள்வனவுசெய்யும் அனைத்து மாணவர்களும் மைக்ரோசா.ஃப்ட் (Microsoft) உடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற மைக்ரோசா.ஃப்ட் விண்டோஸ் 10 இயங்கு தளம் (Microsoft Windows 10 Operating System) மற்றும் அலுவலகம் 365 சேவையை (Office 365 Service) இலவசமாக வழங்கும் மைக்ரோசா.ஃப்ட் எம் 365 சேவையை (Microsoft M365 Service) பதிவு செய்யலாம்.

மேலதிக விவரங்களுக்கு தயவு செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தைப் பார்வையிடவும்: **https://www.ugc.ac.lk**. இச்சலுகை நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**இலக்கம் 20, வாட் இடம்,**
**கொழும்பு 07.**

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2021 பெப்ரவரி 9 செவ்வாய்க்கிழமை



சம்பு நகர் நியூ கிங் இளைஞர் கழக ஏற்பாட்டில்

## 15 பல்துறை சார்ந்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

**(ஒலுவில் கிழக்கு தினகரன் , பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்கள் )**

அட்டாளைச்சேனை சம்பு நகர் நியூ கிங் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ இன் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பல்துறை சார்ந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த (07) சம்பு நகர் அல்மினா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.



அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.தலைவர் அதிபர் முகம்மட் றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் ஏ.ஆர். எம்.ஆரீப்,அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி முபாறக் அலி, அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்எச்எம்.அஜ்வத், அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி பீ.எம்.றியாத் உட்பட பலர் இதன் போது கௌரவம் பெற்றனர்.

இவர்களின் கௌரவங்களை அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ இன் பிரதித் தலைவரும், பிரதி அதிபருமான எம்.ஐ.ஹாசீம், பொருளாளர் ஆசிரியர் ஏ.எம்.சுலைமாலெப்பை, உப தலைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எல்.கியாஸ்தீன், ஆலோசகர் கே.அப்துல் ஹமீட் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் வரலாற்றில் மேற்கிந்திய தீவு அணி சாதனை - ஐசிசி புகழாரம்

டெஸ்ட் வரலாற்றிலேயே 4வது இன்னிங்சில் அதிக ஓட்டங்களை சேசிங் செய்து 5வது வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவு அணிக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

மேற்கிந்திய தீவு அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

முதல் டெஸ்டில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்சில் 430 மற்றும் 2வது இன்னிங்சில் 8 விக்கெட்டு இழப்புக்கு 223 ஓட்டங்களும் எடுத்தது.

மேற்கிந்திய தீவு அணி முதல் இன்னிங்சில் 259 ஓட்டங்கள் எடுத்தது. 2வது இன்னிங்சில் 395 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி விளையாடியது.



போட்டியின் இறுதி நாளில் அந்த அணி வீரர்கள் அதிரடியாக விளையாடினர். மேற்கிந்திய தீவு அணியின் அறிமுக வீரராக விளையாடிய கைல் மேயர்ஸ் ஆட்டமிழக்காமல் 210 ஓட்டங்களை குவித்து அணியின் வெற்றிக்கு உதவி புரிந்தார்.

இதனால், மேற்கிந்திய தீவு 1-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், டெஸ்ட் வரலாற்றில் 4வது இன்னிங்சில் அதிக ஓட்டங்களை சேசிங் செய்து வெற்றி பெற்றதற்கு மேற்கிந்திய தீவு அணிக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. இதுதொடர்பாக, ஐ.சி.சி. வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், கைல் மேயர்சின் ஆட்டமிழக்காமல், 210 ஓட்டங்கள் பெற்ற அந்த அணி பங்களாதேஷ் அணியை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வழிகாட்டியுள்ளது.

டெஸ்ட் வரலாற்றில் 5வது முறையாக 4வது இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் வெற்றிகரமுடன் சேசிங் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

இதேபோல், இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக், மேற்கிந்திய தீவு அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் உட்பட பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ்: முதல் சுற்றில் வவ்ரிங்கா, செரீனா வெற்றி

ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆரம்பமாகியுள்ளது.

ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலாரும் பங்கேற்கும் இத்தொடர், கடினத்தரையில் நடைபெறும் ஒரு தொடராகும்.

தற்போது இத்தொடரின் முதல் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இதில் முக்கிய சில போட்டிகளின் முடிவுகளை பார்க்கலாம்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியொன்றில், சுவிஸ்லாந்தின் ஸ்டென் வவ்ரிங்காவும், போர்துகலின் பெட்ரோ சோவுசாவும் மோதினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், ஆதிக்கம் செலத்திய ஸ்டென் வவ்ரிங்கா 6-3, 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியொன்றில், அவுஸ்ரேலியாவின் ஜோன் மில்மேனும் பிரான்ஸின் கொரேன்டின் மவுடெட்டும் பலப்பரீட்சை நடத்தினர்.



விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் கொரேன்டின் மவுடெட் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில் இருவரும் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். இதனால் செட் டை பிரேக் வரை நகர்ந்தது. இந்த செட்டில் கடுமையாக போராடி ஜோன் மில்மேன் 7-6 என செட்டைக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது செட்டையும் 63 என கைப்பற்றினார்.





இன்னமும் ஒரு செட்டைக் கைப்பற்றினால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜோன் மில்மேன், கடும் சவாலை எதிர்கொண்டார்.

தொடர்ந்து ஆக்ரோஷமாக விளையாடிய கொரேன்டின் மவுடெட், அடுத்த இரண்டு செட்டுகளையும் 6-2, 6-3 என கைப்பற்றி வெற்றியை ருசித்தார்.

அடுத்ததாக பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியொன்றில், அமெரிக்காவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், ஜேர்மனியின் லாரா சீகமண்ட்டை எதிர்கொண்டார்.

இப்போட்டியில், எவ்வித நெருக்கடியையும் எதிர்கொள்ளாத செரீனா வில்லியம்ஸ், 6-1, 6-1 என இலகுவாக செட்டுகளை கைப்பற்றி இரண்டாவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

மற்றொரு பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியொன்றில், ஜப்பானின் நவோமி ஒசாகா, ரஷ்யாவின் அனஸ்தேசியா

பவ்லியுசென்கோவாவுடன் மோதினார்.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், சிறப்பாக விளையாடிய நவோமி ஒசாகா, 6-1, 6-2 என செட்டுகளை கைப்பற்றி இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு கொவிட் தடுப்பூசி

இலங்கையின் கிரிக்கெட் வீரர்களுக்கு எதிர்காலத்தில் கொவிட்19 வைரஸிற்கான தடுப்பூசியினை வழங்குவது தொடர்பில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்திருப்பதாக இலங்கை கிரிக்கெட் நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசி வழங்க முன்னர், வீரர்கள் தொடர்பில் தமது வைத்தியக் குழுவிடம் கலந்துரையாடவிருப்பதாகவும் அஷ்லி டி சில்வா கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"பேராசியர் அர்ஜுன டி சில்வா தலைமையிலான எமது வைத்தியக் குழுவிடம் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம். அவர்கள் எமது வீரர்களின் உடல்நிலை தொடர்பில் தற்போது அவதானம் எடுத்திருக்கின்றனர்"



மேலும் பேசிய டி சில்வா, தடுப்பூசி தொடர்பான இறுதித் தீர்மானம் இலங்கை அரசாங்கத்திடம் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்ட பின்னரே எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

"இலங்கை அரசாங்கத்தின் உத்தரவின் படி, முதல்நிலை ஊழியர்களுக்கும் முக்கியமான பிரதிநிதிகளுக்குமே முதலில் தடுப்பூசி வழங்கப்படவிருக்கின்றது. எனவே, நாம் அரசாங்கத்துடன் பேச வேண்டும். இதனால், நாம் இன்னும் தடுப்பூசி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கவில்லை."

முதல்முறையாக இலங்கை கிரிக்கெட் அணியில் சாமிக்க கருணாரத்ன மற்றும் பினுர பெர்னாந்து போன்றோர் கொவிட் – 19 தொற்று ஏற்பட்டிருப்பதாக கடந்த மாதம் இணங்காணப்பட்டிருந்தனர்.

அண்மையில் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் மிக்கி ஆத்தர் மற்றும் முன்வரிசை துடுப்பாட்ட வீரர் லஹிரு திரிமான்ன ஆகியோருக்கும் கொவிட்19 தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டிருந்தது. இலங்கை – மேற்கிந்திய தீவுகள் அணிகள் இடையில் இம்மாதம் நடைபெறவிருந்த இருதரப்பு கிரிக்கெட் தொடர்களும் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முற்தடவையாக

# கிண்ணியாவில் அக்ஸாரியன் சூப்பர் லீக் உதைபந்தாட்டபோட்டி

**கிண்ணியா மத்திய நிருபர்**

கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியில் கல்வி கற்று கடந்த காலங்களில் விளையாட்டு துறையில் பல்வேறு சாதனைகளை படைத்து கல்லூரிக்கு பெருமை தேடிக் கொடுத்த வீரர்களை உள்ளடக்கிய அணிகளுக்கிடையிலான அக்ஸாரியன் சூப்பர் லீக் என்ற பெயரில் முதலாவது உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று கிண்ணியாவில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.



இந்த சுற்றுப் போட்டி தொடர்பான அறிமுக நிகழ்வும் ஊடகவியலாளர் மாநாடும் கடந்த (6) கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அக்ஸாரியன் சூப்பர் லீக் பற்றிய அறிமுகம், அனுசரணையாளர்கள் பற்றிய அறிமுகம், அணித்தலைவர்கள் அறிமுகம், வெற்றிக் கிண்ணம் மற்றும் பரிசில்கள் தொடர்பான விளக்கம் மற்றும் சூப்பர் லீக்கின் பாடல் அறிமுகம் போன்ற விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதனை அக்ஸாரியன் சுப்பர் லீக்கின் ஸ்தாபகரும் கிழக்கு மாகாண பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் இணைப்பாளருமான ஏ.எல்.முகமட் நபில் முன்வைத்தார்.

அவர், தனது விளக்க உரையில், 2007ம் ஆண்டுக்குப் பின்னர் அல் அக்ஸா கல்லூரியில் கல்வி கற்று, விளையாட்டுத் துறையில் சாதனை படைத்த பழைய மாணவர்களை உள்ளடக்கி பங்குபற்றும் வகையில் இந்த சுப்பர் லீக் போட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி, எட்டு கால்பந்தாட்ட அணிகள் இந்த தொடரில் மோதவுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர், மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்தப் போட்டித் தொடர் எதிர்வரும் 19, 20, 21, 22 ஆகிய திகதிகளில் கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

19 (வெள்ளி), 20 (சனி) ஆகிய இரண்டு தினங்களும் தொடரின் முதல் சுற்றுப் போட்டியும் 21 ஆம் திகதி (ஞாயிறு) அரை இறுதிப் போட்டிகளும் 22 ஆம் திகதி (திங்கள்) இறுதிப் போட்டி மின்னொளியிலும் நடைபெற உள்ளன.

இந்த தொடரில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறும் அணிகளுக்கு முறையே தலா 50,000 40,000, 30,000 ஆயிரம் ரூபா பணப்பரிசும் கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

நான்காம் இடத்தைப் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் போட்டியில் பங்கு கொண்ட ஏனைய அணிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

தொடரின் சிறப்பாட்டக்காரருக்கு மௌண்டன் சைக்கிள் ஒன்றும் கேடயமும் வழங்கப்படவுள்ளதோடு, தொடரின் சிறந்த கோல் காப்பாளராக தெரிவு செய்யப்படுபவருக்கு ரூ.5,000 பணப்பரிசும் கேடயமும் வழங்கப்படவுள்ளது.

இந்தப் போட்டித் தொடருக்கு முழு அனுசரணையாளராக இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூபுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் கூறினார்.

இதில் பங்குகொள்ளும் அணிகள் மற்றும் தலைவர்களின் விபரங்கள்.

வொரீஸ் என்.எம்.சிபான்
ஜூபிடர்ஸ் எம்.எம். றோசான்
சுப்பர் கிங் ரீ.எம். றோஹான்
சுப்பர் போய்ஸ் எஸ்.எஸ்.இம்பாஸ்
சுப்பர் பைட்டர் என்.எம்.றிபாஸ்
புளு ஈக்கிள் ரீ.எம்.ரோசான்
ப்ளெக் பெண்தர்ஸ் ஐ.எம்.றிம்சான்
றேசின் ஸ்டார்ஸ் எம்.ஆர்.ஆர்.எம்.ஹிசாம்.

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் உருத்திரபுரம் அணி வெற்றி

**(யாழ்.விளையாட்டு நிருபர்)**

உருத்திரபுரம்விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும்அழைக்கப்பட்ட கழகங்களிற்கு இடையிலான லீக் முறையிலான சிநேகித பூர்வ அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் USC JUNIOR PREMIER LEAGUE உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் உருத்திரபுரம் அணி வெற்றி பெற்றது.



உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி

6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி சார்பில் தனுசன் 3 கோலினையும்' தேனுசன் 2 கோலினையும் சுதர்சன் 1கோலினையும் தமது அணி சார்பில்

பெற்றுக் கொடுத்தனர்.

இளந்தளிர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்ற ஆட்டத்தில் பீனிக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டன.

இதில் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலினை பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி சார்பாக பிரியசங்கர் ஒரு கோலையும், பீனிக்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக சாதுரியன் ஒரு கோலையும் அணி சார்பாக பெற்றுக் கொடுத்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 பெப்ரவரி மாதம் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.